# உயிர் தொட்ட உறவே!

## 1



**வி**டியலின் அடர்த்தியான நிசப்தத்தை, தாள லயத்துடன் பூபாளமிசைத்து, இனிதாய்க் கலைத்துக் கொண்டிருந்தது, முகம் காட்டாப் பறவை ஒன்று!

தோட்டத்துப் பூக்களின் கூரான நாசியில், பனித்துளிகள் வைர மூக்குத்திகளாய் மின்னிக் கொண்டிருந்தன.

விடியலின் அணைப்பில் சுகமாக உறங்கிக் கொண்டிருந்த சைதன்யாவை, அவளுடைய அப்பா தயாகரின் குரல் உசுப்பி எழுப்பியது.

"தன்யா! கெட் அப்! வாக்கிங் போகறதுக்கு ரெடியாகலையா?"



அவருடைய கம்பீரமான மிலிட்டரி குரல் அவளைக் கனவுகளிலிருந்து கலைத்தெழச் செய்ய, "ம்... அஞ்சு நிமிஷத்துல ரெடியாயிடறேன்ப்பா!" என்றாள் சோம்பலுடன் பிரிந்த விழிகளுடன்!

பிறகு, அவசரமாக அடுத்த அறையில் உறங்கிக் கொண்டிருந்த தம்பி சந்தீப்பை எழுப்பிவிட்டுத் தயாராகி ஹாலுக்குச் சென்ற போது, சுறுசுறுப்புடன் காத்திருந்தார் தயாகர்.

அவர், கார்கில் போரில் பங்கெடுத்து முடிந்தவுடனே தன் சர்வீஸை முடித்துக் கொண்டு சென்னைக்கு வந்து பிரபலமான செக்யூரிட்டி சர்வீஸ் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கும், முன்னாள் மிலிட்டரி ஆபீஸர்!

அவர், எதிலுமே மிகவும் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் எதிர்பார்ப்பவர்!

இந்த ஏழு வருடங்களாகக் காலையில் எழுந்தவுடனே, தன் மகளையும், மகனையும் உடனழைத்துக் கொண்டு வாக்கிங் சென்று வருவதை வழக்கமாகக் கொண்டிருப்பவர்.

மூவரும் வேகமாக நடந்தபோது, விடிகாலைக் காற்றின் வருடல் மனதிற்கும் உடலுக்கும் பெரும் இதமளிக்க, அந்த பெசன்ட் நகர் சாலையில் நடப்பதே சுகானுபவமாய்!

சைதன்யா, எம்.சி.ஏ. முடித்திருக்கிறாள்.

சிறிது காலம் வேலை பார்த்த பிறகே திருமணம் என்பதில் உறுதியாக இருப்பவள். சந்தீப், என்ஜினியரிங் இரண்டாவது வருடம்!

மூவரும் நன்றாக நடந்துவிட்டு வீட்டிற்குள் வந்த போது, சிடியில் சௌந்தர்யலஹரி கசிந்து கொண்டிருக்க, ஊதுபத்தியின் நறுமணம் வீட்டையே நிறைத்திருந்தது.

அவர்களுடைய அம்மா தேவகி, பூஜை செய்து கொண்டிருந்தார்.

மூவரும் குளித்து முடித்துத் தயாராகி டிபன் சாப்பிடும் போது தான், வாயிலில் அழைப்புமணி ஒலித்தது.

யாரென்று பார்க்கச் சென்ற தேவகி, திரும்பி வரும் போது கையில் அழகிய பெரிய ட்ரேயுடன் வந்தார். அதில் அழகாக இனிப்பும் பழங்களும் அடுக்கப்பட்டிருந்தன.

"யாரோ பக்கத்து வீட்டை வாங்கி இன்னிக்குத்தான் புதுசா குடித்தனம் வந்திருக்காங்களாம். ஸ்வீட்ஸ், பழமெல்லாம் டிரைவர்கிட்ட கொடுத்தனுப்பியிருக்காங்க" என்றார் புன்னகையுடன்.

"ஏன்... அவங்களே நேரில வந்து குடுக்கமாட்டாங்களாமா? இதென்ன மேனர்ஸே தெரியாம...?"

மெதுவாய் முணுமுணுத்த சந்தீப்பை, அப்பாவின் பார்வை அடக்கியது.

இரண்டு மாதங்களாய் பூட்டப்பட்டிருந்த வீடு, காலையில் வாக்கிங் போய் விட்டு வரும்போது அலங்கரிக்கப்பட்டிருந்ததும் நினைவு வந்தது.

அன்று சைதன்யாவிற்குக் கம்ப்யூட்டர் சென்டரில் ஒரு தேர்வு!

எம்.சி.ஏ. முடித்திருந்தாலும், டெஸ்டிங் துறையில் ஆர்வமிருந்தால் மூன்று மாதங்கள் அதற்காகத் தனி



யாக ஒரு கோர்ஸும் பயின்றதில், இன்று இறுதிப் பரீட்சை!

தேர்வை நல்ல முறையில் செய்த மகிழ்ச்சியுடன், அன்று மாலை அவளும் சந்தீப்பும் ஷட்டில் காக் விளையாடிக் கொண்டிருந்தபோது, யாரோ தன்னை உற்றுப் பார்ப்பதுபோல் ஒரு பிரமை எழுந்தது.

திரும்பினால், பக்கத்து வீட்டு மாடியில் திரைச்சீலை அசைந்தாற் போல் ஒரு பிரமை!

யோசனையுடன் தோளைக் குலுக்கிவிட்டு விளையாட்டில் கவனத்தைச் செலுத்தியபோதும், ஏதோ ஒன்று மனதில் உறுத்திக் கொண்டே இருந்தது.

அந்த நிமிடம் பக்கத்து வீட்டு மாடி ஜன்னலின் வழியே, அவர்கள் இருவரும் விளையாடுவதை ஒரு வித சுவாரஸ்யத்துடன் கவனித்து விட்டு விலகிய வேதவியாசனின் விழிகளில், பழைய நினைவுகள்!

ஆனால், அவை தந்த வலிகள் முகத்தில் வேதனைக் கோடுகளை வரவழைக்க, தலையைக் குலுக்கியபடிச் சென்று அலுவலகம் செல்லத் தயாரானான் அவன்.

மீண்டும் மீண்டும்... தானும் தன் தம்பியும் இதுபோல் பாசத்துடன் இணைந்திருந்த நிழலான ஞாபகங்கள் கனவாய் வலம் வந்தன.

அன்று அலுவலகம் சென்று ப்ராஜெக்ட் விஷயமான முடிவுகளை எடுக்கும்பொழுதும் மங்கும் நினைவுகள் மனதில் முட்களாய் நெருட ஆரம்பித்தன.

* * *

அந்த நிமிடம், வீட்டில் வைஜெயந்தியும் பழைய நினைவுகளை மனதில் வருடியபடிக் கண்ணீருடன் அமர்ந்திருந்தார்.

வேதவியாசன் அவர்களுடன் கோபித்துக் கொண்டு, வீட்டை விட்டு வெளியேறி மூன்று வருடங்களானதைப் பெருமூச்சுடன் நினைவு கூர்ந்தது மனது.

அளவிலாத பாசத்தைக் கொட்டி அவனை வளர்த்திருந்தாலும், அதை அவன் புரிந்து கொள்ளவில்லையே என்ற வேதனை அவரை உருக்குலைத்திருந்தது.

சிறிய மகன் விவேக்கைக் கூட இப்போதெல்லாம் அவர் சரிவரக் கவனிப்பதில்லை.

அவனும் தன் நண்பர்கள், கல்லூரி என்று அதிலேயே ஒன்றி விட்டிருந்தான்.

யாரோ வருகின்ற சப்தம் கேட்டு கண்களைத் துடைத்தபடி நிமிர்ந்தபோது, அவருடைய கணவர் வெற்றிச் செல்வன், போலீஸ் உடையுடன் வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

தன் மனைவியின் முகத்தைக் கண்டவுடன், ''என்ன... பையனோட ஞாபகமா...? ஒரு நாள், நம்மளை எல்லாம் புரிஞ்சிக்கிட்டு அவன் திரும்பி வருவான்... முதல்லே அழறதை நிறுத்து ஜெயந்தி! வா... வந்து எனக்கு சாப்பாடு போடு... விவேக்கை கவனி! கொஞ்ச நாளாவே கவனிக்கிறேன்... இவனும் நம்மை விட்டு விலகிப் போற மாதிரி ஒரு ஃபீலிங்! இல்லாததை நினைக்க இருக்கறதைக் கோட்டை விட்டுடாதே'' கூறியபடி மனைவியை ஆதரவாக அழைத்துச் சென்றார் அவர்.



## 2

'வெற்றிச் செல்வன் ஐ.பி.எஸ்.' வருகிறாரென்றால், அவருடைய டிபார்ட்மெண்டில் எல்லாருமே பயப்படுகிற அளவுக்கு, நேர்மையான அதே சமயம் கண்டிப்பான ஒரு போலீஸ் அதிகாரி, அவர்!

ஆனால், தன் மூத்த மகனிடம் மட்டும் தன்னுடைய கண்டிப்பு, செல்வாக்கு, அன்பு எதுவுமே செல்லுபடியாகாமல் போனதை, ஒரு தோல்வியுடன் உணர்ந்தவரும் அவர்தான்!

ஒரு பெருமூச்சுடன் மௌனமாக சாப்பிட்டுவிட்டு அவர் கிளம்பியவுடன், ஓய்வெடுத்த வைஜெயந்திக்குள் வருடலாய் மகனின் நினைவுகள்!

சிறு குழந்தையாய் அவனைத் தன் கையில் தாய்மை உணர்வுடன் ஏந்தியது... அவன் தவழ்ந்தது... பள்ளிக்குச் சென்றது... அவன் அந்த வீட்டில் தன் பாதம் பதித்த ஆறாவது வருடம், அத்திப்பூவாய் தன் மணிவயிற்றில் மலர்ந்த விவேக்கின் நினைவு!

பழைய நினைவுகள் அவரை பலவீனப்படுத்த, தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டவரின் மனதில், வியாஸ் வீட்டை விட்டு வெளியேறிய நாளன்று நடந்த நிகழ்வுகளின் அணி வகுப்பு!

அன்று ஊரிலிருந்து வைஜெயந்தியின் அண்ணன் புருஷோத்தமன் வந்திருந்தார்.

மாலையில் வீடு திரும்பிய வியாஸும் அவரும் அரசியல் பேசிக் கொண்டிருக்க, மெதுவாக ஆரம்பித்தார் வைஜெயந்தி.

“அண்ணா! நம்ம வியாஸுக்கு கல்யாணத்துக்கு பாக்க ஆரம்பிக்கலாம்னு இருக்கோம். அவனுக்கும் இருபத்து நாலு வயசாயிடுச்சி... இந்த வயசிலயே நல்ல போஸ்டுல இருக்கான்... அவங்கப்பாவை விட நிறைய சம்பாதிக்கிறான்!”

அவர் முடித்தவுடன், “அப்புறம் என்னம்மா... மாப்பிள்ளைக்கு கல்யாணம் பண்ணிட வேண்டியதுதானே?” என்றார் புருஷோத்தமனும் உற்சாகமாய்!

“அதுதான்னா உங்கிட்ட கேக்கிறேன். நம்ம வசந்தாவையே மருமகளாக்கிக்கலாம்னு எனக்குத் தோணுது. நீங்க என்ன சொல்றீங்க? அவ உங்க பொண்ணாச்சே... உங்கிட்டேதானே கேக்கணும்” புன்னகையுடன் முடித்தார் அவர்.

சட்டென்று எழுந்தான் வியாஸ்.

“எம்மா... எனக்குக் கல்யாணம் வேணும்னு நான் உங்ககிட்டே கேட்டேனா? இப்ப எதுக்கு இதெல்லாம்?” எனும் போதே இடைமறித்தது, புருஷோத்தமனின் குரல்.

“வியாஸ்... என் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு நீயே வந்து என்னைக் கெஞ்சினாலும், நான் ஒத்துக்கமாட்டேன்.”



பிறகு அவர் கூறிய வார்த்தைகள், அந்த வீட்டில் பெரும் பிரளயத்தை ஏற்படுத்தின!

வியாஸ் இந்த வீட்டை... அன்பான இந்தக் குடும்பத்தை விட்டுப் பிரியவும் காரணமாக இருந்தன.

“அம்மா!”

விவேக்கின் அழைப்பில் கனவுகளிலிருந்து கலைந்து கண்ணீருடன் நிமிர்ந்தவர், “என்னப்பா! சாப்பிட்டியா?” என்றபடி எழுந்தார்.

“வேணாம்... நான் வெளியில சாப்பிட்டுட்டேன்... என்ன... அண்ணன் ஞாபகமா? ம்...” விரக்தியுடன் கேட்டபடிச் செல்லும் அவனை, அவருடைய விழிநீர் மறைத்தது.

அந்த நிமிடம் ஒரு இன்டர்வியூவை நடத்தி முடித்து விட்டு இடைவேளையில் டிபனைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த வியாஸுக்குப் புரையேற, சட்டென்று அவன் மனதில் தாயின் நினைவு!

ஆனால், அதையும் மீறிக் கலங்கலாய் அந்த நாள் ஞாபகம் வந்து, முகம் இறுகிவிட, வேகமாக எழுந்து வந்து ஜன்னலருகில் நின்று வெளியில் பார்வையைப் பதித்தான் அவன்.

சாலையின் எதிர்புறம் தெரிந்த நடைபாதையில் சுருண்டு விழுந்திருந்த ஒரு வயதான மனிதரும், அவர் அருகில் நின்றிருந்த கூட்டமும் பார்வையில் பட்டனர்.

அப்போது, அவர்களை விலக்கிக் கொண்டு முன்னால் வந்து எட்டிப் பார்த்த ஒரு பெண், உடனே வேகமாகச் சென்று பக்கத்துக் கடையிலிருந்து ஒரு கூல்ட்ரிங்ஸும் தண்ணீர் பாக்கெட்டும் வாங்கி வருவது தெரிந்தது.

அலட்சியத்துடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவனின் விழிகளில் புதிதாய் ஒரு சுவாரசியம் வந்தது.

அவளை எங்கோ பார்த்த ஞாபகத்துடன், அங்கு நடப்பதைக் கவனிக்க ஆரம்பித்தான்.

அனைவரும் வேடிக்கை பார்க்க, அவள் மட்டும் அந்தத் தண்ணீரை அவர் முகத்தில் தெளித்து எழுப்பினாள்.

பிறகு கூல்ட்ரிங்ஸையும் அருந்தச் செய்து, அவரை ஆட்டோவில் பத்திரமாக ஏற்றி அனுப்பும்வரைக் கவனித்தவன், பிறகு கம்ப்யூட்டரின் எதிரில் வந்து அமர்ந்தபோது, மற்றதெல்லாம் மறந்து போனது.

சிறிது நேரத்தில், ஒரு பெண் இண்டர்வியூவிற்குத் தாமதமாக வந்திருப்பதாகத் தகவல் வந்தபோது, எரிச்சலுடன் எழுந்து இண்டர்வியூ நடத்தும் அறைக்குள் வந்தான்.

அவன் எதிர்பாராத விதமாக, சற்றுமுன் எதிர் நடைபாதையில் பார்த்த அந்தப் பெண் அங்கு அமர்ந்திருந்தாள்.

ஏனோ, முதல் பார்வையிலேயே அவனுக்குள் சிறு சலனத்தை விதைக்க ஆரம்பித்தாள் அவள்.

## 3



**வி**யானைக் கண்டதும் மெதுவாக எழுந்த தன்யாவின் முகத்தில் சிறு சங்கடமும் தவிப்பும் தெரிந்தன.



ஆனால் வியானின் விழிகளில், அவளை அடையாளம் கண்டு கொண்ட சிறு மின்னல்!

தன் வீட்டிற்குப் பக்கத்து வீட்டில், நேற்று மாலை தன் தம்பியுடன் ஷட்டில் காக் விளையாடிய அந்தப் பெண்தான் இவளென்பதும் புரிந்தது.

அவளை அமரும்படி சைகை செய்துவிட்டு எதிரில் அமர்ந்தான்.

"ஸாரி ஸார்! வழியில ஒரு சின்ன ஆக்ஸிடெண்ட்... அதான் நான் வர லேட்டாயிடுச்சு" என்ற விளக்கத்துடன் அவனை எதிர்கொண்டவளிடம், சிறு ஆர்வம் வந்தது.

பிறகு அவளை இண்டர்வியூ செய்தபோது, டெஸ்டிங் லைனில் அவளுக்கிருந்த ஆர்வமும் திறமையும் புரிந்தன!

ரிசல்ட் நாளை தெரியும் என்ற பதிலுடன் அந்தப் பெண்ணை அனுப்பிவிட்டுத் தன் அறைக்கு வந்தபோது, ஏனென்று புரியாமலே மெலிதாய் அவனை ஆக்கிரமிக்க ஆரம்பித்திருந்தாள் அவள்.

* * *

**அ**ங்கிருந்து நேரே தன் தோழி மஞ்சுவின் வீட்டிற்குச் சென்ற தன்யாவை, அவளுடைய அம்மா உற்சாகத்துடன் வரவேற்றார்.

"வாம்மா தன்யா! உனக்கொரு சந்தோஷமான செய்தி! மஞ்சுவுக்கு மாப்பிள்ளை முடிவாயிடுச்சி... உனக்கு சொல்லலாம்னு ஃபோன் பண்ணினா, நீ ஏதோ இண்டர்வியூவுக்கு போயிருக்கறதா சொன்னாங்க!" ஆர்வத்துடன் கூறினார்.

''வாவ்! ரொம்ப சந்தோஷம் ஆன்ட்டி! எங்கே அவ?'' எனும்போதே, புதிதாய் வெட்கம் சுமந்த முகத்துடன் மஞ்சு அங்கு வந்தாள்.

''ஏய்... என்கிட்ட சொல்லவேயில்லை. கங்கிராட்ஸ்'' என்றபடி அவள் கையைப் பிடித்துக் குலுக்கினாள்.

''இன்னிக்குத்தான் திடீர்னு வந்து பொண்ணு பாத்தாங்க... உடனே முடிவாயிடுச்சு'' மெல்லிய குரலில் கூறினாள் மஞ்சு.

பிறகு இருவரும் அவளுடைய திருமணத்தைப் பற்றிப் பேச ஆரம்பிக்க, டிபன் கொண்டு வந்து கொடுத்து விட்டுச் சென்றார், மஞ்சுவின் தாய்.

அவள், அப்பா இல்லாத பெண் என்பதால் மாமாவும் சித்தப்பாவும் தான் தன் திருமணத்தை முன்னின்று நடத்தப் போகிறார்கள் என்று அவள் கூறினாள்.

''மஞ்சு! முக்கியமான விஷயத்தையே கேக்க மறந்துட்டேன்! மாப்பிள்ளை எப்படி இருக்கார்?'' குறும்புடன் கேட்டாள் தன்யா.

''ம்! நல்லாருக்கார்டி!''

மஞ்சு குனிந்த தலையுடன் கூற, அவளை மேலும் கிண்டலடித்து சிவக்க வைத்துவிட்டு வீட்டிற்கு வந்தபோது, சந்தீப்புடன் புதிதாய் ஒரு நண்பன் வந்திருந்தான்.

தன்யாவை அவனுக்கு அறிமுகம் செய்தபோது, ''ஹாய்! ஐ யம் விவேக்!'' என்று சிறு முறுவலுடன் அவன் தன்னை அறிமுகம் செய்து கொண்டான்.



பிறகு அவர்களிருவரும் மொட்டை மாடிக்குச் சென்று பேசிக் கொண்டிருந்தபோது, விவேக்கின் விழிகள் மட்டும் பக்கத்து வீட்டின் மேலேயே நிலைத்திருப்பதை சந்தீப் கவனித்து விட்டான்.

''என்னடா அங்கேயே பாக்கறே! அங்கே பொண்ணுங்க யாரும் இல்லை... யாரோ ஒரு பேச்சலர், அதை வாங்கி புதுசா குடிவந்திருக்கிறதா அம்மா சொன்னாங்க''.

கிண்டலுடன் கூறியவனைப் பார்த்த விவேக்கின் விழிகளில், சிறு சஞ்சலம்!

மறுநாள் காலையில் மூவரும் வழக்கம் போல் வாக்கிங் போய்விட்டுத் திரும்பும்போதுதான், எதிரே ஜாகிங் வந்து கொண்டிருந்த வியாஸைக் கவனித்தாள் தன்யா.

அவர்களருகில் வந்ததும், அவன் சட்டென்று நின்றான்.

''ஹலோ சார்! நான் உங்க பக்கத்து வீட்டுக்குப் புதுசா குடி வந்திருக்கேன். நீங்க ரிடையர்டு மிலிட்டரி ஆபிஸர்னு கேள்விப்பட்டேன்... ரொம்ப சந்தோஷமா இருந்தது. பை த பை ஐ யம் வியாஸ்... கம்ப்யூட்டர் இன்ஜினியர்!'' என்றபடி தயாகரிடம் கை குலுக்கி, தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டான்.

பிறகு இருவரும் பொதுவான விஷயங்களைப் பற்றிப் பேசியபடி நடந்து வந்தனர்.

திடீரென்று திரும்பிய தயாகர் ''நான் என் பசங்களை இன்ட்ரடியூஸ் பண்ண மறந்துட்டேனே... இவ தன்யா... என்னோட டாட்டர்... எம்.சி.ஏ. முடிச்சிருக்கா, வேலைக்கு அப்ளை பண்ணியிருக்கா! இவன் என் சன் சந்தீப்...

செகண்ட் இயர் பி.இ.! அவனும் கம்ப்யூட்டர் தான்!" என்று புன்னகைத்தார்.

இருவரிடமும் "ஹாய்" என்றபடி புன்னகைத்தவனிடம், அவளை அறிந்து கொண்ட பாவமே இல்லை.

விழிகள், ஒரு நொடி மட்டும் கூர்மையாய் அவளை அளவிட்டு விட்டு, சோம்பலாய் விலகின.

உடனே சந்தீப்பிடம் திரும்பியவன், "ஹாய் சந்தீப்! உனக்கு கம்ப்யூட்டர்லே ஏதாவது சந்தேகம் இருந்தா சண்டே என் வீட்டுக்கு வா. நான் கிளியர் பண்றேன்... பை!" என்று கூறிவிட்டு, வேகமாக எதிர்திசையில் நடக்கத் தொடங்கினான்.

அவனுடன் நடந்த இண்டர்வியூவைப் பற்றியோ, அவளைத் தெரிந்த மாதிரியோ ஒரு நொடி கூட அவன் காட்டிக் கொள்ளவில்லை என்பது மனதில் பதிய, யோசனையுடன் அப்பாவைப் பின் தொடர்ந்தாள் அவள்.

ஆனால், மறுநாள் மதியம் வந்த அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரைக் கண்டதும் சட்டென்று ஒரு விதப் பரவசம் வந்து மனதில் கோலமிட, உடனே அந்த விஷயத்தை அம்மா அப்பாவிடம் கூறியபோது, அவர்களும் மகிழ்ந்தனர்.

இன்னும் பத்து நாட்களுக்குள் வேலையில் சேரும்படிக் கோரப்பட்டிருந்தது, அந்தக் கடிதத்தில்!

ஏனோ வியானின் நினைவுகள் அழையாத விருந்தாளியாய் உட்புக, புரியாத உணர்வில் தவித்துப் போனாள் அவள்.



உடனே, வேலை கிடைத்த விஷயத்தை மஞ்சுவிடம் பகிர்ந்து கொண்டாள்.

அந்த வாரம் முழுவதும் மஞ்சுவின் கல்யாணத்திற்கு துணிகள் எடுக்க அவளுடன் கடைக்குச் செல்வதற்கே பொழுது சரியாக இருந்தது.

நேரம் சிறகு கட்டிச் செல்ல, தன்யா வேலைக்குச் சேரும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்க ஆரம்பித்தாள்.

## 4



அன்று, தன்யா வேலைக்குச் சேரும் நாள்!

முதல் நாளென்பதால், மனதில் சிறு பதட்டம் இழை கோர்க்க நிறுவனத்திற்குச் சென்றபோது, அங்கு அவளுக்கென்று ஒரு ப்ராஜெக்ட் கொடுக்கப்பட்டது.

அதில் அவளுடன் இரண்டு பேர் இருந்தனர்.

முதல் அறிமுகத்திலேயே நட்புடன் புன்னகைத்த ஞானமும், ரகுவும் உடனே மனதில் தோழமையுடன் இடம் பிடித்தனர்.

வேலை என்னவென்பதைப் பழக்கிக் கொள்ளவே, ஒரு வாரம் ஆனது. ஆனால் அதுவரை அவள் வியானை சந்திக்கவேயில்லை.

ஏனோ, மனதில் அவனைப் பற்றிய எண்ணங்கள் ஊற்றாய்ப் பீறிடும்.

ஆனால் ரகுவும், ஞானமும் அவனுடைய கண்டிப்பையும் கோபத்தையும் பற்றிக் கூறியிருந்ததால், அவனைச் சந்திக்காமல் இருப்பதே நல்லதென்றும் தோன்றும்.

ஆனால் விரைவிலேயே ப்ராஜெக்ட் பற்றிய விவரங்களை தினமும் அவனிடம் 'பாஸ்' என்ற முறையில் தன்யா ரிப்போர்ட் செய்யும் நிலை வந்ததால், அவனைத் தவிர்க்க இயலாது போயிற்று.

ஒரு நாள் கேன்டீனில் அமர்ந்து மூவரும் பேசிக் கொண்டிருந்த போதுதான், ரகு ஆரம்பித்தான்.

"தன்யா! ரொம்ப கேர்ஃபுல்லா இரு! வியாஸ் ரொம்ப ஸ்ட்ரிக்ட்... சட்டுன்னு கோபம் வரும்! எதுவா இருந்தாலும் சரியா பண்ணிட்டிங்கன்னா, அவர் கிட்டே ப்ராப்ளமே இல்லை. தப்பு பண்ணிட்டு முழிச்சோம்னா, அவ்வளவுதான். அவர் மூட்-அவுட் ஆனா, நம்ம கதை முடிஞ்சது" மெல்லிய குரலில் பயமுறுத்தினான்.

உடனே ஞானமும், தான் அவனிடம் பலமுறை மாட்டிக் கொண்ட அனுபவத்தை பயத்துடன் விவரித்தபோது, தானும் கவனமாக இருக்க வேண்டும் என்ற எண்ணமும், அவனிடம் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்ற உத்வேகமும் அவளுக்குள் வந்தன.

"இவன் என்ன இந்த அலுவலகத்தின் சர்வாதிகாரியா? எல்லோரையும் இப்படி பயமுறுத்தி வைத்திருக்கிறானே பேசாம ஹிட்லர்னு பேர் வச்சிருக்கலாம்..." என்று எண்ணும்போதே சட்டென்று இதழ்கள் விரிந்தன.



தான் நினைத்ததை மெல்லிய குரலில் ரகுவின் செவியருகில் கூறிவிட்டு நிமிர்ந்தாள்.

புன்னகையுடன் திரும்பியபோது, யாரிடமோ பேசிக் கொண்டே பார்வையை மட்டும் அவள் மேல் பதித்து, உணர்ச்சியின்றி அவளையே ஊடுருவிய வியாஸின் விழிகளை, அவள் சந்திக்க நேர்ந்தது. சட்டென்று ஒரு குளிர் உடலெங்கும் விரவிப் பரவியது.

சற்று முன் ரகுவும் ஞானமும் அவனைப்பற்றிக் கூறியது நினைவிற்கு வர, மௌனமாகத் திரும்பிக் கொண்டாள் அவள்.

ஆனால், அவளும் ப்ராஜெக்ட்டில் எந்தத் தவறும் செய்யாததால், சிறு உரசலும் இன்றி நாட்கள் கடந்தன.

மஞ்சுவின் திருமண நாளும் விரைந்து வந்துவிட, காலையில் பர்மிஷன் போட்டு விட்டுக் கல்யாணத்திற்குச் சென்றவள், அந்தப் பட்டு சுரிதாரிலேயே அலுவலகம் வந்து விட்டாள்.

"ஏய்... தன்யா... என்ன? கல்யாணத்துக்குப் போற கெட்டப்பில் வந்திருக்கே?" பார்த்த உடனே ரகு கிண்டல் செய்ய, இருவரும் பேசிச் சிரித்துக் கொண்டே லிஃப்டிற்குள் நுழையும்போதுதான், அதில் வியாஸ் இருப்பது தெரிந்தது.

'குட் மார்னிங் சார்' என்றபோது, அவன் விழிகள் அவள் உடையையே ஒரு கணம் அளவெடுத்தன.

உதடுகளில் ஒரு ஏளன வளைவுடன் அவன் வாழ்த்தை ஏற்றுக் கொண்டான்.

பிறகு "இங்க எதுவும் சுயம்வரப் போட்டி நடக்குதா என்ன? வரிசையா மாலையோட நிறைய மாப்பிள்ளைங்க காத்திட்டிருக்கற மாதிரி வந்திருக்கியே... அதான் கேட்டேன்" நக்கலாக வந்தது அவன் குரல்.

ரகுவும் தயக்கத்துடன் நிற்க, "இல்லை" என்று அவள் பேச வாயெடுக்கும் போதே, லிஃப்ட் அவன் இறங்க வேண்டிய ஃப்ளோரில் நிற்க, ஒரு வித அலட்சியத்துடனும் கம்பீரத்துடனும் வெளியேறியவனை, கையாலாகாத்தனத்துடன் வெறித்தாள் அவள்.

◆ ◆ ◆

**ம**றுநாள் விடியலில், மஞ்சுவின் வீடு வாழைமரத் தோரணங்களுடனும், உறவுக் கூட்டத்துடனும் மங்களகரமாய் விழிக்க ஆரம்பித்திருந்தது.

நெய் மணம் வீடெங்கும் நிறைந்திருக்க, விடிகாலையில் எழுந்து தலை குளித்துவிட்டு, அத்தை பைப்பின்னல் போட்டுவிட, முகத்தில் வெட்கம் சுமந்து கணவனிருந்த அறைக்குள் நுழைந்தவளை, மென்மையாக அணைத்துக் கொண்டான் விசுவகுமார்.

"உக்காரு மஞ்சு... உன் கூடக் கொஞ்சம் பேசணும்" என்று கைப்பிடித்து அழைத்துச் சென்று அமர வைத்தான்.

"உங்களுக்கு காபி எடுத்துட்டு வரேன்... அம்மா நீங்க பல் தேய்ச்சாச்சான்னு கேக்கச் சொன்னாங்க" கூச்சத்துடன் கேட்டவளை, அவன் பார்வை மெல்ல வருடியது.

"ம்... எல்லாம் ஆச்சு! குளிச்சிட்டேன்... நீ என்னை நிமிர்ந்து பார்த்தாதானே அதெல்லாம் கண்ணுக்குத் தெரியும்? இப்படி முகத்தைத் தரையில் புதைச்சிட்டா, அப்



புறம் உன் முகமே எனக்கு மறந்து போயிடும்" குறும்பாகக் கூறினான் அவன்.

"ஏன்... இனிமே தினம் பாக்கத்தானே போறீங்க?"

அவள் மெதுவாகக் கூறியபோது, "இங்கே ஓகே! ஆனா துபாய் போனப்புறம் இதை நினைச்சிக்கிட்டே ரெண்டு வருஷத்தை ஓட்டியாகணுமே" சோர்வுடன் கூறினான்.

உடனே பதறிப் போய் நிமிர்ந்தவளின் முகத்தில் பெரும் அதிர்ச்சி தெரிந்தது.

"என்ன அப்படிப் பாக்கறே? அடுத்த வாரமே நான் கிளம்பியாகணுமே? தரகர் உங்க அம்மாகிட்டே எல்லா விஷயத்தையும் சொல்லிட்டதாச் சொன்னாரே?" விசுவத்தின் குரலில் பெரும் யோசனை!

உடல் முழுவதும் பலமிழந்ததுபோல் ஒரு சோர்வு நிலை விரவிப் பரவிவிட, "எனக்குத் தெரியாதுங்க" என்றவளின் குரலிலேயே கண்ணீரின் முகவரி!

"உங்க அம்மாவுக்குத் தெரியுமே? அவங்க உன் கிட்ட சொல்லலையா?"

அவன் குரல் கம்மியிருந்தது.

"இல்லை... ஃபாரின்லே வேலை பாக்கிறீங்க... கல்யாணத்துக்கு அப்புறம் இங்கேயே வந்துடுவீங்கன்னுதான் சொன்னாங்க..."

தவிப்புடன் கூறியவளை, ஆதரவுடன் அணைத்துக் கொண்டான் அவன்.

அதன் பிறகு, மஞ்சு கோபத்துடன் அம்மாவிடம் இது பற்றிக் கேட்டபோது, அவர் மென்று விழுங்கினார்.

"நீ பி.எஸ்.சி. முடிச்சி ரெண்டு வருஷமா வீட்டுல இருந்ததே, எனக்கு ரொம்பக் கஷ்டமாயிருந்தது! நம்ப குடும்பங்களிலே இருபது வயசுக்குள்ளேயே பொண்ணுங்க கல்யாணத்தை முடிச்சிடுவோமே! உனக்குத் தான் வேட்டா பிடுச்சி! அதான் இந்த வரனுக்கு ஒத்துக்கிட்டேன்! ரெண்டு வருஷம்கிறது நிமிஷமா ஓடிப் போயிடும்... அப்புறம் மாப்பிள்ளை இங்கேயே திரும்பி வந்திடுவாரு! உன் கிட்ட சொன்னா ஒத்துக்கமாட்டியோன்னுதான், அப்போ சொல்லலை!" மெதுவாகக் கூறினார்.

ஒரு நாளிலேயே விசுவம் தன்னை வெகுவாய் ஆக்கிரமித்துவிட்டது புரிய, அவனைப் பிரிந்து எப்படி இருக்கப் போகிறோம் என்ற கவலை முதன் முதலில் வந்து மஞ்சுவின் மனதைத் தீண்டியது.

விழியோரங்களில் கண்ணீர் அரும்பிவிட, காபியுடன் அறைக்குள் சென்றவளை, விசுவம் மீண்டும் சமாதானப் படுத்தினான்.

ஆனாலும் மஞ்சுவின் மனம் அமைதியடையவில்லை.

அனலில் விழுந்த மெழுகாய், உணர்வுகள் உருகின. பிரிவை எண்ணி உடைந்து போயிருந்தாள் அவள்.

ஒளியின்றி சிவந்திருந்த மஞ்சுவின் முகத்தைக் கண்ட போது, திருக்குறளில் வருகின்ற பிரிவாற்றாமை எனும் குறள்தான் நினைவிற்கு வந்தது விசுவத்திற்கு!

"பிரியாமை உண்டாயின் அதனை எனக்குச் சொல்! அதனைத் தவிர்த்து, பிரிந்து சென்று விரைவில் திரும்பி வந்து விடுவேன் என்பாயென்றால், அதனை அப்போது



உயிரோடு வாழ்பவர்க்குச் சென்று சொல்" என்ற பிரிவுத் துயர் நிறைந்த வரிகள் அவனுக்குள் நிறைந்தன.

மஞ்சுவை விட்டு விட்டுத் தான் எப்படிப் பிரிந்து செல்லப் போகிறோமென்ற கவலை, உள்ளூர அவனை அரிக்க ஆரம்பித்தது.

## 5



**கா**லையில் தினமும் வாக்கிங் செல்லும்போது எதிர்ப்பட்டாலும் தன்யாவின் அப்பாவிடம் மட்டும் சிறிதாய்ப் புன்னகைத்து விட்டு, ஒரு கம்பீரத் தலையசைப்புடன் வியாஸ் விலகிச் சென்று கொண்டிருந்தான்.

தன்யாவும், அவன்தான் தன் 'பாஸ்' என்பதை இது வரை வீட்டில் கூறவேயில்லை.

அந்த ஞாயிறன்று, விவேக் வந்திருக்க அவன் சந்தீப்பைத் தேடியபோதுதான், அவன் பக்கத்து வீட்டிற்குச் சென்றிருப்பது தெரிந்தது.

"அம்மா... சந்தீப் எங்கே? அவன் ஃப்ரெண்ட் விவேக் வந்திருக்கான்" தேவகியிடம் கேட்டான்.

"அவன் பக்கத்து வீட்டிற்குப் போயிருக்கான் தன்யா! ஏதோ பாட விஷயமா சந்தேகம் கேக்கப் போறேன்னு சொல்லிட்டுப் போனான்" என்றார் அவர்.

அவள் ஹாலில் அமர்ந்திருந்த விவேக்கிடம் வந்தாள்.

"சந்தீப் பக்கத்து வீட்டுக்குப் போயிருக்கான்... நீயும் போறியா?" என்றவுடன் முகம் சுருங்கிவிடச் சட்டென்று எழுந்தான்.

"வேண்டாம்க்கா... நான் அப்புறம் வரேன்" என்றபடி வேகமாக வெளியேறினான் அவன்.

யோசனையுடன் திரும்பியபோது ஃபோன் ஒலிக்க, எடுத்தால் மஞ்சுதான் பேசினாள்.

"தன்யா... நீ இன்னிக்கு வீட்டுலதானே இருப்பே... நான் உன் கூடக் கொஞ்சம் பேசணும்" என்றாள்.

"வா மஞ்சு! நான் ஃப்ரீதான்... ஏன்... கேட்டுட்டுதான் நம்ம வீட்டுக்கு வருவியா?" என்றபோது "அப்படி இல்லை... நான் வரேன்" என்று வைத்தவளின் குரல் ஏனோ உடைந்திருந்தது.

பிறகு அவள் வந்துவிட, புதுமணப் பெண்ணுடன் உற்சாகமாகச் செல்லும் என எதிர்பார்த்த பொழுது, அவளின் சோகத்தால் மெதுவாகச் சென்றது.

"என்னடி டல்லா இருக்கே... என்னவோ பேசணும்னு வேறசொன்னே?" தன்யா விசாரித்தாள்.

"தன்யா! அவர் ஃபாரின்லே திரும்பவும் வேலைக்குப் போகப் போறாரு... ரெண்டு வருஷம் கழிச்சுதான் காண்ட்ராக்ட் முடிஞ்சு வருவாரு... எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு? அம்மாகிட்ட கேட்டா, நான் திமிஷமா ஓடிப் போயிடும்கிறாங்க" கண்ணீருடன் கூறினாள்.



"ஓஹோ! மேடம் பிரிவுத் துன்பத்துனாலதான் பசலை படர்ந்து சோகமா இருக்கீங்களா? இப்பதானே புரியுது! ஏன்... நீ சொல்லக் கூடாதா, உன் அவர்கிட்ட?"

"ம்... என்ன சொன்னாலும் அவர் பிடிவாதமா இருக்கார்... வீட்டுமேல இருக்கற கடனை எல்லாம் அடைக்கணுமாம்... அதான்!" என்று அழுதவளைச் சமாதானப் படுத்தி விட்டு பழைய கதைகளைப் பேச ஆரம்பித்தபோது, அவள் முகத்திலும் சிறிது தெளிவு வந்தது.

அப்போது பக்கத்து வீட்டிலிருந்து வந்தான் சந்தீப்.

"அக்கா! வியாஸ் சார் எவ்வளவு டேலண்ட் தெரியுமா? எல்லா விஷயமும் அவருக்குத் தெரியுது. கம்ப்யூட்டர் பத்தி என்ன கேட்டாலும் ஃபிங்கர் டிப்ல வச்சிருக்காரு! எனக்கு அவரை ரொம்பப் பிடிச்சிருக்கு" பிரமிப்புடன் கூறினான்.

"யாருடி... உன் 'பாஸ்' தானே? அவர் உன் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில குடி இருக்கறதா, அன்னிக்கு நீ சொன்னியே?" மஞ்சு கேட்க, ஆச்சர்யத்துடன் திரும்பினான் சந்தீப்.

"அக்கா! உண்மையாவா? வியாஸ் சார் உன்னோட பாஸா? நீ ஏன் என்கிட்ட சொல்லலை. அவரும் உன்னைப் பத்தி எதுவுமே கேக்கலை. நீ ரொம்ப லக்கி தெரியுமா? இப்படி ஒருத்தர்கிட்ட வேலை பாக்கறதுக்கு!" என்றான் பெருமையாக.

"யாருடா லக்கி?" என்றபடி வந்த தயாகிடம், அவன் எல்லாவற்றையும் கூற அவள் முகம் பெரும் யோசனையாய்!

"ஏம்மா... பக்கத்து வீட்டு வியாஸ்தான் உன்னோட ப்ராஜெக்ட் மேனேஜர்னு நீ சொல்லவேயில்லை?"

"சொல்லக்கூடாதுன்னு இல்லைப்பா! அவர்தான் என்னை இண்டர்வியூ பண்ணினாரு... அவரை தினமும் ஆஃபீஸில பாக்கறேன்... வாக்கிங் போறப்பவும் பாக்கறேன். ஆனா, அவர் என்னைத் தெரியாத மாதிரிதானே நடந்துக்கறாரு! அதான் நானும் சொல்லலை!" யோசனையுடன் கூறினாள்.

* * *

அன்று மாலையில், மருந்தீசுவரர் கோவிலுக்கு மஞ்சுவுடன் சென்றிருந்தபோது, பழைய நினைவுகள் மனதில் சுகமாய் சரம் கோர்த்தன.

தன்யாவிற்கு மிகவும் பிடித்தமான ஒரு கோவில் இது!

அவர்களின் இளமைக்காலங்களில், மாலைநேரப் பொழுதுகள் பெரும்பாலும் இங்குதான் கழியும்.

சிறுவயதில், இருவரின் வீடுகளுமே கோவிலுக்கு அருகிலிருந்ததால், அடிக்கடி இங்கு வந்து சென்ற ஞாபகத்தில், இனம்புரியா நிறைவுடன் விழியோரங்கள் கசிந்தன.

பங்குனித் திருவிழாக் காலங்களில், அந்த ஊரே திருவிழாக்கோலம் பூண்டு ஒரு கிராமம் போல் மாறிவிடுவதும், புதிதாக முளைத்திருக்கும் பாதையோரக் கடைகளும், கேளிக்கைகள், இன்னிசைக் கச்சேரிகள் நடப்பதும் அங்கு சிறகிலாப் பறவையாய் சுற்றித் திரிந்ததும், ஆழ்மனவெளியில் இனிய நினைவுகளாய்!

மருந்தீசுவரரை தரிசித்துவிட்டு பிரகாரத்தை வலம் வந்தபோது, ஒரு முதியவர் திருநாவுக்கரசரின் தேவாரப்



பதிகங்களைப் பாடியபடிச் செல்ல, மனம் சிலிர்த்துப் போனது.

**"விண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்**
**அண்ட நாயகன் தன்னடி சூழ்மின்கள்**
**பண்டு நீர்செய்த பாவம் பறைந்திடும்**
**வண்டு சேர் பொழில் திருவான்மியூர் ஈசனே!"**

கோவில் மணியுடன் சேர்ந்து கணீரென்று ஒலித்த பாடல் மனதை நிர்மலமாக்கியது.

இருவரும் திரிபுரசுந்தரி அம்மனை தரிசித்துவிட்டு அமர்ந்தபோது, அங்கு கிடைத்த தனிமையில் மனம் திறந்து தன் புகுந்த வீட்டினரைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தாள் மஞ்சு.

புதிதாய் ஒருவிதத் தவிப்பும், படபடப்பும் தெரிந்தது அவளிடம்!

புதிய இடமும், மனிதர்களும், பழகுவதற்கு சில காலங்களாகும் என்ற உண்மை மனதில் படர்ந்தது.

சிறிது நேரம் பேசியபிறகு கிளம்பி வெளியில் வந்தபோதுதான், எதிரில் நின்றிருந்த காரிலிருந்து இறங்கிக் கொண்டிருந்த ஒரு வயதான பெண்மணியிடமிருந்து அவளுடைய கைப்பையைப் பறித்துக் கொண்டு ஓடி வருபவனைக் கண்டாள் தன்யா.

அவன் அவளைத் தாண்டும் முன்பே, பூக்கடையிலிருந்த ஒரு கட்டையைத் தூக்கி அவன் கால்களுக்கிடையில் லாவகத்துடன் அவள் வீச, தடுமாறித் தரையில் விழுந்தான் அந்தத் திருடன்.

ஆனால், தன்னைக் கீழே விழவைத்த தன்யாவையே கோபத்துடன் பார்த்தபடி அவன் எழ ஆரம்பித்தான்.

அதற்குள் ஓடிவந்த டிரைவரும், மற்றவர்களுமாகச் சேர்ந்து அவனை அடித்து நொறுக்கிவிட்டனர்.

உதடுகளில் கசிந்த உதிரத்துடன் நிமிர்ந்தவன், "ரெண்டு நாளாப் பட்டினி... பசிக்கொடுமை தாங்கலை! அதான் அந்தம்மா பையைத் திருடிட்டேன்... அதுக்குள்ளே போட்டு இப்படி அடிச்சிட்டீங்களே..." என்றபோது அவனுடைய வார்த்தைகள் ஏனோ அவளைக் கசியச் செய்தன.

"உனக்கேண்டி இந்த வம்பெல்லாம்...?" என்று தடுத்த மஞ்சுவை மீறி வேகமாய் தன்யா அவனருகில் சென்றாள்.

"சரி... உனக்கு இப்ப என்ன வேணும்? சாப்பாடு தானே? நான் வாங்கித்தரேன்... வா!" என்றபடி அந்தப் பையை வாங்கி அந்தப் பெண்மணியிடம் கொடுத்தாள்.



## 6

தன்யாவையே பிரமிப்புடன் பார்த்துக் கொண்டு நின்றார் அந்தப் பெண்மணி.

அவன் தந்த ஹேண்ட் பாகை வாங்கிக் கொண்டு "ரொம்ப நன்றிம்மா! என்னோட மகன், வீட்டுக்குத் திரும்பி வரணும்னு நேர்த்திக்கடனா அம்மனுக்கு நகை செஞ்சு எடுத்



துட்டு வந்தேன்... நல்லவேளை... அந்தப் பிரார்த்தனையை நிறைவேத்த முடியாமப் போயிடுமோன்னு பயந்திட்டேன். எங்க குலதெய்வம் மாதிரி வந்து, திருடு போக இருந்த அதைக் காப்பாத்திக் குடுத்திட்டே... நன்றிம்மா! என் பேர் வைஜெயந்தி... நீ எங்க வீட்டுக்கு கட்டாயம் வரணும்" என்றபடி தன் கணவரின் விசிட்டிங் கார்டை அவளிடம் கொடுத்தார்.

"சரிம்மா... கட்டாயம் வரேன்" என்றவள் டிரைவரிடம் திரும்பினாள்.

"அவரை விட்டுடுங்க... நான் பாத்துக்கறேன்" என்றாள்.

பிறகு அவளின் முகவரியையும் தொலைபேசி எண்ணையும் வாங்கிய பிறகே, வைஜெயந்தி கிளம்பிச் சென்றார்.

பக்கத்திலிருந்த கடையில் அவனுக்கு டிபன் வாங்கிக் கொடுத்தவள், "இங்கே பாரு! நீ யாருகிட்ட இருந்து ஹேண்ட் பாகைத் திருடி இருக்கே தெரியுமா? ஒரு பெரிய போலீஸ் ஆஃபிஸரோட மனைவிகிட்டே! அவர் கையில மாட்டியிருந்தே, அவ்வளவு தான்! இனிமேலாவது நேர்மையாய் பொழைக்கிற வழியைப் பாரு" எனும்போதே அவனுடைய விழிகளில் தெரிந்த பயமும், வெகுளித்தனமும், அவளை வெகுவாய் நெகிழ்த்தின.

"இந்தா... இது என் அப்பாவோட விசிட்டிங் கார்டு! ஒரு நாள் உனக்கு இந்தத் திருட்டுத்தனம் பிடிக்காமப் போய், திருந்தி வாழணும்னு தோணுச்சின்னா, அப்போ இந்த அட்ரசுக்குப் போய்ப் பாரு... எங்கப்பாதான் இவங்க! செக்யூரிட்டி சர்வீஸ் நடத்துறாங்க. நீ நல்லவனா மாறினா, உனக்கு அங்கே வேலை நிச்சயம்!

"ஏமாத்தலாம்னு மட்டும் தப்புக் கணக்குப் போட்டுடாதே! என்னை மாதிரி இல்லை எங்கப்பா... அவர் அகராதியில தப்பு செய்யறவங்களுக்கு தண்டனையே வேற... அவரு ஒரு மிலிட்டரி மேன்...புரிஞ்சுதா?'' என்றபடி ஒரு ஐம்பது ரூபாயையும் அவன் கையில் கொடுத்துவிட்டுக் கிளம்பினாள்.

வெளிறிய முகத்துடன் அருகில் நின்றிருந்த மஞ்சு, "ஏண்டி உனக்கு இந்த வேண்டாத வேலை எல்லாம்! அவனை மாட்டிவிட்டு அடியும் வாங்க வச்சிட்டே! இப்ப அவனுக்கு சாப்பாடு வாங்கித் தந்து பணமும் குடுக்கறே! இப்படித்தான் சில சமயங்கள்லே உன்னை என்னாலப் புரிஞ்சிக்கவே முடியறதில்லை'' சலிப்புடன் கூறினாள்.

"மஞ்சு! அவன் திருடினது தப்பு! அதான் அதைத் தடுத்தேன். ஆனா அவன் பேசினப்ப, அந்தக் கண்களிலே உண்மையும், பசியும்தான் தெரிஞ்சது... பாவமா இருந்தது! ரெண்டுநாளா சாப்பிடாம இருக்கறது எவ்வளவு கொடுமை! அதான் சாப்பாடு வாங்கித் தந்தேன். ஒரு வேளை அவன் திருந்தி வாழ நினைச்சா, எங்கப்பாவைப் பாக்க வரணும்... அப்புறம் அதுக்குக் காசில்லைன்னா, திரும்பவும் திருடணும். அதான் பணம் தந்தேன்'' என்றபோது, மஞ்சுவின் விழிகளில் வியப்பும் பிரமிப்பும் தெரிந்தன.

"நான் இந்த அளவு யோசிக்கலை'' என்று முணுமுணுத்தாள்.

"நீ இப்ப யோசிக்க வேண்டியதெல்லாம், புதுசா கல்யாணம் முடிஞ்சு வீட்டுல உனக்காகக் காத்துட்டிருக்கற உன் ஹஸ்பெண்டைப் பத்திதான்... ஓகேயா? வா, போகலாம்'' என்று கிளம்பினாள் தன்யா.



வீட்டிற்குச் சென்று தயாகரிடம் நடந்ததைக் கூறினாள்.

"ஒருவேளை அந்த ஆளு உங்களைத் தேடி வந்தா, உங்களுக்கு நம்பிக்கை இருந்தா மட்டும் அவனை வேலைக்கு சேத்துக்கங்கப்பா!'' என்றபோது, அவருக்கு மிகவும் பெருமையாய்!

"பாத்தியா தேவகி... என் பொண்ணை! உன்னை மாதிரி பயந்தாங்கொள்ளியா இல்லாம, என்னை மாதிரி தப்பு எங்கே நடந்தாலும் அதத் தட்டிக் கேக்கறவளா, நான் எப்படி அவளை வளர்த்திருக்கேன் பாரு... ரொம்பப் பெருமையா இருக்குடா, உன்னைப் பாத்தா!'' அவளைத் தட்டிக் கொடுத்தார்.

"ஆமாம்! நாளைக்கு இதையே மனசுல வச்சிட்டு இவகிட்ட அந்தாளு ஏதாவது வம்பு பண்ணினா என்ன பண்றதுன்னு நானே பயந்து போயிருக்கேன். உங்களுக்குப் பெருமையா இருக்கா? இன்னிக்கு தண்டச்செலவு நூறு ரூபாய்!'' சலிப்புடன் கூறினார் தேவகி.

"நீ வாடா! இவளுக்கெல்லாம் புரியாது. அப்படியே அவன் ஏதாவது வம்பு பண்ணினாக்கூட, என் பொண்ணுக்கு கராத்தே தெரியுமே... அவ சமாளிச்சிப்பா!''

பெருமிதத்துடன் கூறிவிட்டுத் தன்யாவை அணைத்துக் கொண்டார் அவர்.

ஆனால் போலீஸ் ஆஃபிஸரின் மனைவியிடம் திருடிவிட்டதால், அந்த பயத்திலேயே அவன் தயாகரைப் பார்க்க வரவில்லை.

மறுநாள் அலுவலகம் சென்றபோது, ஆபரேட்டர் அவளுக்கு ஒரு ஃபோன் கால் வந்திருப்பதாகக் கூறிவிட்டு, லைனைக் கொடுத்தார்.

"ஹலோ! நான் வெற்றிச்செல்வன் ஐ.பி.எஸ். பேச றேம்மா! என் ஒய்ஃப் உன்னைப்பத்தி சொன்னா... ஒரு பொண்ணு இந்த அளவு தைரியமா செயல்பட்டது, எனக்கு ரொம்பப் பெருமையா இருக்கு! தேங்க்யூ! நான் உன்னைப் பாக்கணுமே... இந்த சன்டே நாங்க உன் வீட்டுக்கு வர லாமா?"

கம்பீரமாக வந்த அந்தக் குரல், முதல் நாள் நினைவு களை மனதில் படரவிட்டன.

"ம்... கட்டாயம் வாங்க சார்! நான் பெரிசா எதுவும் செஞ்சிடலை. ஆபத்து நேரத்துல ஒருத்தருக்கு ஒருத்தர் உதவி செய்யலைன்னா, அப்புறம் மனித நேயம்கிற துக்கே அர்த்தமில்லாமப் போயிடும். நான் எங்கப்பா கிட்ட சொல்றேன். அவர் ஒரு எக்ஸ்-மிலிட்டரிமேன்! என்னை இப்படி போல்டா வளர்த்ததே அவர்தான்! சன்டே கட்டாயம் வாங்க... எனக்கு தேங்க்ஸ் சொல்ல வரவேண் டாம்... ஒரு ஃப்ரெண்ட்லி விசிட் வாங்க!" என்றபடி ஃபோனை வைத்தாள்.

அந்த வாரம் முழுவதும் வேலை அதிகமிருந்தாலும், ஓயாது இரையும் கடல் அலைப்பாய், மனதில் ஏனோ வியாஸின் பெயரே எதிரொலித்துக் கொண்டிருந்தது.

அதற்கு, சந்தீப்பின் வியாஸ் புராணமும் பெரிதும் காரணமாக இருந்தது.

இரவின் நிசப்தமான தனிமைத் தருணங்களில், நதி போல் நீள ஆரம்பித்தன, அவனுடைய நினைவுத் துளிகள்!

வியாஸின் வேலைத் திறமையும், நிர்வகிக்கும் கம்பீர மும், அவனுடைய தனித்தன்மையும் அவளை ஈர்த்து



விட, இப்போதெல்லாம் அவனுடைய கோபப்பார்வை கூட மிக அழகாய்... வெகுவாய் ரசிக்க முடிந்ததாய்...!

மெல்ல மெல்ல அவளின் நினைவுப் பக்கங்களை ஆக் கிரமிக்க ஆரம்பித்திருந்தான் அவன்!

## 7



அந்த ஞாயிறன்று மாலை, வெற்றிச் செல்வனும், வைஜெயந்தியும் அவர்களுடைய வீட்டிற்கு வந்தனர்.

முதலில் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு பொது வாகப் பேசிக் கொண்டிருந்த வெற்றிச்செல்வன், தன்யா விடம் "தேங்க்யூ சோ மச்... என் மனைவியக் காப்பாத் துன பொண்ணுங்கறதைவிட, அந்த நேரம் சமயோசிதமா யோசிக்க செயல்பட்டிருக்கியே... அதுக்கே உன்னைப் பாக்கணும் போலத் தோணுச்சு... அதான் வந்தேன்" என்றார், கம்பீரமான புன்னகையுடன்.

"அப்பாதான் எல்லாத்துக்கும் காரணம் அங்கிள்! என் மனசுல தைரியமும் தன்னம்பிக்கையும் வரணும்னு, என்னைக் கராத்தே கத்துக்கச் சொன்னதே அவர்தான்." சிறு முறுவலுடன் கூறினாள் தன்யா.

பிறகு, காவல் துறையைப் பற்றியும், மிலிட்டரி வாழ்க் கையைப் பற்றியும் ஆண்கள் இருவரும் உற்சாகமாகப்

பேச ஆரம்பிக்க, வைஜெயந்தி தேவகியிடம் பேசிக் கொண் டிருந்தார்.

"உங்களுக்கு எத்தனை பசங்கம்மா?"

கேட்ட வைஜெயந்தியிடம், "இவனும் ஒரு பையனும் தாம்மா! அவன் இன்ஜீனியரிங் படிக்கறான்... பக்கத்து வீட்டுல அவனுக்கு ஒரு 'ஃப்ரெண்ட்! அவர்கிட்ட கம்ப்யூட்டர் சம்பந்தமா ஏதாவது புதுசா கத்துக்குவான். அதான் போயிருக்கான்" என்றார் தேவகி.

"எங்களுக்குப் பொண்ணு கிடையாது... ரெண்டுமே பசங்கதான்! பெரியவன் கம்ப்யூட்டர் இன்ஜீனியரா இருக் கான்... சின்னவன் படிச்சிட்டிருக்கான்" என்ற வைஜெயந்தி யின் குரலில், சிறு சோகம் தெரிவதுபோல்!

பிறகு டிபன், காபி சாப்பிட்டுவிட்டு அவர்கள் கிளம்பிச் செல்ல, முதல் நாள் அவர் கூறிய வார்த்தைகள் உடனே ஞாபகம் வந்தன.

அவருடைய மகன் வீட்டிற்குத் திரும்பி வருவதற் காகத்தான் நேர்த்திக் கடன் செய்ய வந்ததாகக் கூறியதும், நினைவடுக்குகளில் தடம் பதித்தன.

• • •

**வீ**ட்டிற்கு வந்து வியாஸின் அறைக்குள் சென்ற வைஜெயந்திக்கோ அன்று மகனுடைய நினைவுகள் அதிக மாய்!

அவர்களுக்குத் திருமணமாகி ஐந்து வருடங்களா கியும் குழந்தை இல்லாததால், எத்தனையோ வைத்தியம் செய்து பார்த்தும், அவர் கர்ப்பம் தரிக்கவில்லை.



குழந்தை பிறக்கும் வாய்ப்பு குறைவு என்று மருத் துவர்கள் கூறிவிட்டதால், இருவருமாக சேர்ந்து ஒரு முடி வெடுத்தனர்.

அதன்படி, ஒரு அநாதைக் குழந்தையை எடுத்து வளர்க் கலாம் என்ற எண்ணத்துடன், எங்கோ பிறந்து ஆசிரமத்தில் விடப்பட்ட ஒரு மாதக் குழந்தையை, இருவரும் முறைப் படித் தத்தெடுத்துக் கொண்டனர்.

பிறகு அவனுக்கு 'வேதவியாஸன்' என்று பெயரிட்டு அவனே உலகமாய் இருவரும் வாழ்ந்ததும், அவன் வர வில் அவர்களுடைய வீடே பூப்பூத்த நந்தவனமாய் மாறி மகிழ்ச்சியை அறிமுகப்படுத்தியதும், மனதில் படர்ந்தன.

வேதவியாசனுக்கு ஆறு வயதாகும்போது, எதிர்பாராத விதமாக வைஜெயந்தி கர்ப்பமானார்.

ஆனால் விவேக் பிறந்த பிறகும், இருவரும் மூத்த மகனின் மனம் பாசத்திற்காக ஏங்கிவிடக்கூடாதே என்று, வியாஸிடம் இன்னும் அதிகமான பாசத்தைப் பொழிந்தனர்.

தான் ஒரு அநாதை என்றே அவனுக்குத் தெரியாதபடி வியாஸை வளர்த்து, அவனைக் கம்ப்யூட்டர் இன்ஜினி யரிங் படிக்க வைத்தனர்.

அப்போது வேலையிலும் அவன் சேர்ந்து விட்டிருந்தான்.

ஒரு நாள், வைஜெயந்தியின் அண்ணன் ஊரிலிருந்து வந்திருந்தபோதுதான், அந்த உண்மை வெளிப்பட்டு விட்டது.

அவருடைய பெண்ணை வியாஸுக்கு மணமுடிக்கலா மென்று வைஜெயந்தி கேட்க, அதை அவன் மறுக்க, கோபமாக எழுந்தார் புருஷோத்தமன்.

"வியான்! என் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு நீயே வந்து கெஞ்சினாலும் நான் ஒத்துக்கமாட்டேன்... குலம், கோத்திரம் என்னன்னு தெரியாத ஒரு அநாதை நீ... உனக்கு எப்படி என் பொண்ணைக் கொடுக்க முடியும்?"

கோபத்தில் வார்த்தைகள் வீரியத்துடன் வெளிவந்து, வியானை உறையச் செய்தன.

கண்கள் கொவ்வைப் பழமாய்ச் சிவந்துவிடத் தாயிடம் திரும்பியவனுக்கு, அவருடைய வெளிறிய முகமும், பதட்டத்துடன் நின்றிருந்த தோற்றமும், உண்மையைப் பொட்டிலறைந்தாற் போல் உணர்த்தின.

சட்டென்று தொய்ந்துபோய் பக்கத்தில் இருந்த சோபாவில் அமர்ந்தவனை, கண்ணீருடன் ஓடிவந்து அணைத்துக் கொண்டார் அவர்.

"வியான்... நீ அநாதை இல்லப்பா! எங்களுக்கு மூத்த குழந்தை நீதான். என் வயித்துல சுமக்கலைன்னா என்ன... இருபத்துநாலு வருஷமா அப்பாவும் நானும் உன்னை எங்க நெஞ்சில சுமந்துட்டிருக்கோமே! அவர் சொல்றாருன்னு கவலைப்படாதே... நீதான் எங்களுக்கு முதல் பையன்! என்னைத் தாயா உணர வச்சவன்... அப்புறம் தான் விவேக்!"

பரிதவிப்புடன் அவர் கூறிய வார்த்தைகள், அவன் மனதை மேலும் உடைத்தன.

கண்களை ஒரு கணம் இறுக மூடித் திறந்தவன், "ஏம்மா இப்படி? எனக்கு இப்படி ஒரு அநியாயம் செய்ய உங்களுக்கு எப்படி மனசு வந்தது? நான் என்ன தப்பு



செஞ்சேன்? இந்த அளவுக்கு என்னை அவமானப்படுத்தினதுக்கு, பேசாம என்னை அநாதையாவே வளர விட்டிருக்கலாமே... நான் பாட்டுக்கு எங்கயாவது வளர்ந்து படிச்சிருந்திருப்பேனே...!

"இப்படி யாரோ சொல்லி என் ரிஷிமூலத்தைப் பத்தியும், நான் ஒரு அநாதைங்கிறதையும் தெரிஞ்சிக்கிறது எவ்வளவு கொடுமைன்னு உங்களுக்குத் தெரியுமா? அதை விட நீங்களே என்கிட்ட சொல்லியிருக்கலாமே...?

"இப்ப இவர் பேசின பேச்சும், ஒரு அநாதைன்னே தெரியாம நான் உங்க சொந்தப் பையன் மாதிரி உரிமை எடுத்துக்கிட்டதும், என் மனசை முள்ளாக் குத்துது. வேணாம்... இன்னையோட இந்த உறவு முறிஞ்சதா இருக்கட்டும்...

"எப்ப நான் அநாதைன்னு இவர் சொன்னாரோ, அதே மாதிரி அநாதையாவே நான் இனிமேயும் இருந்துட்டுப் போறேன். எனக்கு யாரும் வேணாம்."

ஆழ்ந்த குரலில் கூறிவிட்டுத் தன் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டவன் தான்!

வைஜெயந்தி எவ்வளவு கதறியும் கதவைத் தட்டியும் பயனில்லை.

அன்று, அவர் தன் அண்ணனை வெறுத்தவர்தான்... இன்றுவரை அவருடைய வீட்டிற்கு செல்வதில்லை!

பிறகு போன் செய்து அவர் தன் கணவரை வரவழைத்தார். இருவரும் சேர்ந்து எவ்வளவோ கெஞ்சியும், வியான் தன் முடிவை மாற்றிக் கொள்ள மறுத்துவிட்டான்.

தான் ஒரு அநாதை என்ற உண்மை அவன் மனதில் பெரும் காயத்தை ஏற்படுத்தி இருந்தன.

ஏனோ அந்தக் கோபமும், வெறுப்பும் தனக்கென்று யாருமில்லாத ஒரு தனிமையை உணர்த்த, அவனுடைய கோபம் முழுவதும் தன்னை வளர்த்தவர்களிடமே திரும்பியது.

தான் அநாதை என்ற உணர்வு, தாமரை இலைத் தண்ணீராய் மனதைப் பெரிதும் அந்நியப்படுத்தியது.



8

அன்றே, தன் நண்பன் ஒருவனுடன் போய் தங்கிக் கொண்டவன், மறுநாளே வீட்டிற்கு வந்து தன்னுடைய சர்டிபிகேட்களை மட்டும் எடுத்துக் கொண்டான்.

இருவரிடமும் விடை பெற்றவன், "என்னை வளர்த்துப் படிக்க வைச்சதுக்கு ரொம்பத் தேங்க்ஸ்... கண்ணாடி உடைஞ்சிடுச்சின்னா ஒட்டாது... அது மாதிரித்தான் வாழ்க்கையும்! தயவுசெஞ்சு, இனிமே என்னைத் தொந்தரவு பண்ணாதீங்க... என்னைத் தேடி யாரும் வரவும் வேணாம். நான் என் வழியிலே போறேன்" முகம் தெரியாத ஒருவரிடம் கூறுவதுபோல் பேசிவிட்டு விடை பெற்றுச் செல்ல, உடைந்து போனார் வைஜெயந்தி.

அதற்குப் பிறகு பலமுறை முயற்சி செய்தும் பயனில்லை... அவன் அந்தக் குடும்பத்துடன் இணைய மறந்துவிட்டான்.



வெற்றிச் செல்வனும் கலங்கிப் போனாலும், மெதுவாகத் தன் மனதைத் தேற்றிக் கொண்டார்.

அவன், ஒரு நாள் தங்களைப் புரிந்து கொண்டு திரும்பி வருவான் என்ற நம்பிக்கை அவரிடம் வந்திருந்தது.

ஆனால், வைஜெயந்திதான் நடைப்பிணமாகிப் போனார்.

அவர் எதிலும் பற்றின்றி இருக்க, உடனே வீட்டோடு ஒரு வயதான பெண்மணியை சமையலுக்கும் மனைவியின் துணைக்குமென அமர்த்தினார் வெற்றிச் செல்வன்.

விவேக்கையும், இப்போதெல்லாம் அவர் சரிவரக் கவனிப்பதேயில்லை.

மூன்று வருடங்களாகியும் வியாஸின் பிரிவையும் அது ஏற்படுத்திய துயரத்தையும் அவர் மறக்கவேயில்லை. அந்த வேதனையிலிருந்து விடுபடவுமில்லை!

இருட்டில் அமர்ந்து கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தவரை, திடீரென்று ஒளிர்ந்த விளக்கின் வெளிச்சம், தடுமாறச் செய்தது.

மெதுவாக மனைவியின் அருகில் வந்து அமர்ந்தார் வெற்றிச் செல்வன்.

"இதோ பாரு ஜெயந்தி... அவனுக்காக அழறதை முதல்லே நிறுத்து! விவேக்கைப் பாரு... அவனுக்கு எவ்வளவு கஷ்டமாயிருக்கும்! வியாஸ் திரும்பி வருவான்... எனக்கு நம்பிக்கை இருக்கு... வா! வந்து சாப்பிடு" என்று அவரை எழுப்பி அழைத்துச் சென்றார்.

மறுநாள் காலையில் அலுவலகம் சென்ற தன்யாவை, வியாஸ் இண்டர்காமில் அழைக்க, அவனுடைய கேபினுக்குள் நுழைந்ததுமே அவன் கோபம் புரிந்தது அவளுக்கு!

"என்ன? நேத்து உங்க வீட்டில பெரிய கார் ஒன்னு நின்னுக்கிட்டிருந்தது. சோஷியல் சர்வீஸ் செய்யற மாதிரி பாவ்லா பண்ணி, பெரிய புளியங்கொம்பா புடிச்சாச்சா?" ஏளனத்துடன் கேட்டான் அவன்.

அதைப்பற்றி இவன் என்ன கேட்பது என்ற எண்ணத்துடன், "அவங்க எங்க ஃபேமிலி ஃப்ரெண்ட்ஸ்! வேற ஏதாவது... ப்ராஜக்ட் விஷயமா பேசணுமா சார்! அப்படின்னா சொல்லுங்க! இல்லைன்னா எனக்கு வேலையிருக்கு... நான் போகணும்" அழுத்தமான குரலில் பதிலளித்தாள் அவள்.

"நீ போகலாம்."

சட்டென்று திரும்பிக் கொண்டவளின் முகத்தில், எதிர்பார்த்த பதில் வராத ஒரு எரிச்சல்!

முதல் நாள் தன்னுடைய அப்பாவின் காரை அவள் வீட்டு வாசலில் பார்த்தவனுக்குள், அவர்கள் அங்கு ஏன் வந்திருக்கிறார்களென்ற கேள்வி, சிறு நெருடலுடன் மையம் கொண்டிருந்தது.

அவர்களை விட்டு எவ்வளவுதான் விலகி இருந்தாலும், பாச நினைவுகள் கலங்கலாய் மனதில் வந்தன.

ஆனால் பிடிவாதமும் கோபமும் அதை மூழ்கடிக்க, இறுகிப் போனது மனது!

அந்தக் கோபமெல்லாம் அன்று முழுவதும் தன்யாவிடமே சென்றடைய, அவனை வாட்டி எடுத்துவிட்டாள் அவள்.



அன்று மதியம் ரகுவுடன் கேண்டீனுக்குச் சென்று சாப்பிட்டுவிட்டு பேசிச் சிரித்தபடி திரும்பி வந்தபோது, ஏதோ ஒன்று முதுகில் உறுத்தத் திரும்பினால், ஊசியாய் அவளைச் சீற்றத்துடன் உரசியது, வியாஸின் பார்வை!

மனதில் மௌனப் புயல் மையம் கொள்ள, மாலையில் கிளம்பிய தன்யாவிற்கே உடனே மஞ்சுவிடம் பேச வேண்டும் போல்!

அவளுடைய மாமியார் வீட்டிற்குப் போன் செய்தால், அவளே தன்யாவிடம் தனியாகப் பேச வேண்டுமென்றாள்.

"சரி! நீ அப்ப மருந்தீசுவரர் கோவிலுக்கு வந்துடு! நானும் அங்கே வரேன்" என்றாள்.

மஞ்சுவின் மாமியார் வீடும் திருவான்மியூரிலேயே இருந்ததால், அவளும் சரியென்றாள்.

முன்பெல்லாம் வாரம் ஒரு முறையாவது இருவரும் அந்தக் கோவிலுக்கு வந்துவிடுவார்கள். இப்போது முடிவதில்லை.

ஆனால், சென்ற வாரம் அங்கு போன போது நடந்த நிகழ்ச்சிகள், வைஜெயந்தி என்கிற நல்லவரின் நட்பைப் பெற்றுத் தந்திருந்தன.

தோழிகள் இருவருக்கும் மனம் விட்டுப் பேசவும் உள்ளக் கோரிக்கைகளை சமர்ப்பிக்கவும் அந்தக் கோவில் தான் முன்பு துணையாக இருந்த நினைவு வர, பழைய நந்தவன நாட்களை எண்ணி மனம் ஏங்கியது.

கோவிலுக்குச் சென்று காத்திருந்தபோது, ஆட்டோவில் வந்திறங்கிய மஞ்சுவின் முகமே சரியில்லை. அழுது வீங்கிச் சிவந்திருந்தது.

பதறி எழுந்தவள், "என்னாச்சு மஞ்சு... வீட்டுக்காரர் பிரிஞ்சுபோற சோகமா?" என்றபோது, மௌனமாக நின்றிருந்தாள் அவள்.

பிறகு மெதுவாக நிமிர்ந்தவள், "எனக்கு ரொம்ப பயமா இருக்கு தன்யா! அவுங்க வீடு வேற எனக்குப்புதுசு! இவர் இருந்தாலாவது மனசுக்குத் தெம்பாயிருக்கும். ஆனா இவரும் கிளம்பிடுவாருன்னு நினைச்சா ரொம்ப கஷ்டமா இருக்கு..." என்றாள்!

"போகப் போக பழகிடும் மஞ்சு! உனக்கு ரிலாக்ஸ் பண்ணிக்கணும்னு தோணிச்சின்னா எங்க வீட்டுக்கு வா! உங்கம்மா வீட்டிலப் போய் கொஞ்ச நாள் தங்கு! கஷ்டம்தான்... எனக்குப் புரியுது... ஆனா என்ன பண்றது?" பரிவுடன் அவளை ஆறுதல் படுத்தினாள்.

சிறிது நேரம் கழித்து ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்தாள் மஞ்சு.

"சரி... உன் வேலை எப்படி இருக்கு? ஒண்ணும் ப்ராப்ளம் இல்லையே?" ஆவலுடன் கேட்டாள்.

"ப்ராப்ளம் ஒண்ணும் இல்லை... அதான் உன்கிட்ட சொன்னேனே... எங்க ப்ராஜெக்ட் மேனேஜர் வியாஸ் எங்க வீட்டுக்குப் பக்கத்துலயே வீடு வாங்கிட்டு வந்திருக்காருன்னு! அவர்தான் இன்னிக்கு ரொம்ப காய்ச்சி எடுத்திட்டாரு... ஏன்னே தெரியலை!" என்றாள் பெருமூச்சுடன்.

"ஏன்... என்னாச்சி... வேலையில நீ ஏதாவது தப்பு செஞ்சியா?"



"இல்லையே... அப்படி இருந்தாதான் பரவாயில்லையே! என்ன காரணம்னே தெரியலை... உன் கல்யாணத்துக்கு வந்துட்டு போனப்பவும் அப்படித்தான்... புரிஞ்சிக்க முடியாத ஒரு கேரக்டர்... ஆனா படு பிரில்லியண்ட்! சரி வா... சாமி கும்பிடலாம்."

பிறகு, மருந்தீசுவரரையும், திருபுரசுந்தரியையும் தரிசித்துவிட்டு மண்டபத்திற்கு வந்து அமர்ந்தபோது, மனம் நெகிழ்ந்திருந்தது.

நீண்ட நாட்களுக்குப் பிறகு இனம் புரியாத ஒரு நிம்மதி கைவசப்பட்டதைப் போல் ஒரு அமைதி வந்தது.

இருவரும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டுக் கிளம்பினர்.

"இந்த சண்டே ஏர்போர்ட்டுக்கு என்னோட நீயும் வரியாடி? நீ வந்தா என்னவோ மனசுக்கு ரொம்ப தைரியமா இருக்கும்னு தோணுது" தன்யாவிடம் கேட்டாள் மஞ்சு.

"ம்... வரேன். சண்டேங்கிறதாலே எந்தப் பிராப்ளமும் இல்லை. தைரியமா இருக்கணும் மஞ்சு. அவர் போனப்புறம் பேசாம ஒரு வேலையைத் தேடிக்க... பொழுது நிமிஷமாப் பறந்துடும்" என்றபடி கிளம்பினாள்.

வீட்டிற்கு வந்து சாப்பிட்டுவிட்டு உறங்கச் சென்றும், வெகுநேரம் தூக்கம் வராமல் விழித்திருந்தாள்.

சிலுங்... சிலுங் என்று மணியடித்துக் கொண்டே சென்ற குல்ஃபி வண்டியின் சப்தம், தேய்ந்து போய் தொலைவில் கேட்டது.

யோசனையுடன் ஜன்னலருகில் சென்று நின்றபோது, தெரு விளக்கின் மௌன ஒளிர்தலில், வீட்டின் முன்புற

மிருந்த கொன்றை மரம் ஏனோ சோகமாகத் தலையசைத்துக் கொண்டிருந்தது.

அவன் மனதிலும், வியாஸின் நினைவுகள் சோகமாய் மீட்டப்பட்டன.

## 9



ஞாயிறன்று காலையிலிருந்தே மஞ்சுவிற்கு மனது சரியில்லை!

விகவும் பிரிவை எண்ணி வருந்தினாலும் அவளையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான்.

மாலையில் அவன் புறப்படும் நேரம் வந்தபோது, தன் உடலின் ஒரு அங்கமே தன்னை விட்டு நீங்கிச் செல்வதைப் போல் அவளுக்கு ஒரு உணர்வு!

அழுதுகொண்டே இருந்தவளை, ஒரு வழியாக சமாதானப்படுத்திவிட்டுக் கிளம்பினான் விகவம்.

விமான நிலையத்தில் அவனை வழியனுப்பிவிட்டுக் கண்ணீருடன் நின்றிருந்தவளை, தன்யாவும் மஞ்சுவின் தாயாரும் அணைத்து ஆறுதல் படுத்தினர்.

தூரத்துப் புள்ளியாகி மறையும் விமானத்தைப் பார்த்து விட்டுக் கிளம்பியபோதுதான், "ஹலோ சைதன்யா...



நீங்க எங்க இங்கே?" என்ற கம்பீரமான குரல் அவளைத் திடுக்கிட்டுத் திரும்பச் செய்தது.

அங்கு வியாஸ் கேள்வியுடனும், கூர்மையான ஆராயும் பார்வையுடனும் நின்றிருந்தான்.

"ஹலோ சார்! என் ஃப்ரெண்ட் மஞ்சுவோட ஹஸ்பெண்ட் இன்னிக்கு துபாய் போறாரு... இவதான் மஞ்சு... அவரை வழியனுப்ப வந்தோம்" என்றபடி மஞ்சுவை அறிமுகப்படுத்தினாள்.

"ஹலோ! நான் வியாஸ்!" எனும்போதே "ஓ! நீங்க தான் அந்த..." சட்டென்று உதட்டைக் கடித்துவிட்டு "தன்யா சொல்லியிருக்கா..." என்றாள் மஞ்சு.

"ஓஹோ!" என்றபடி சோம்பலுடன் பார்வையால் அருகிலிருந்த தன்யாவை வருடினான்.

"இஃப்யூ டோண்ட் மைண்ட்... நான் தன்யாவை அவங்க வீட்டில ட்ராப் பண்ணிடறேனே!" என்று கூறிவிட்டுத் தன்யாவைத் தன்னுடன் வருமாறு சைகை செய்தவன், வேகமாக நடக்கத் தொடங்கினான்.

"தன்யா... இந்த மழையில நான் இறங்கிட்டு உன்னை ட்ராவல்ஸ் காரிலத் தனியா அனுப்பணுமேன்னு பயந்துட்டிருந்தேன்... நல்லவேளை... நீ கிளம்பு" என்றபடி மாமனார் வீட்டினருடன் கிளம்பினாள் மஞ்சு.

மறுக்க முடியாமல் சென்று காரில் ஏறி அமர்ந்தபோது, வியாஸின் உதடுகள் ஏனோ ஏளனமாக வளைந்திருந்தன.

சிறிது நேரம் அமைதியாக வந்தவன் திடீரென்று, "நீ பெரிய வீராங்கனையாமே? காரத்தேல்லாம் தெரியுமாமே...

போன வாரம் கோவில்லே ஒரு அம்மாவோட பையைத் திருடன்கிட்ட இருந்து காப்பாத்திக் குடுத்தியாம்... உன் தம்பிதான் சொன்னான்! அவனுக்கு எப்போ பார்த்தாலும் அக்கா புராணம்தான்'' சலிப்புடன் கூறினான்.

பதில் கூறாமல் வந்தவளைத் திரும்பிப் பார்த்தபோது, அவனுக்குள்ளும் புதிதாய் ஒரு உணர்வு!

அவளிடமிருந்த ஏதோ ஒன்று, அவனை ஈர்ப்பது போல்!

சட்டென்று தலையைக் குலுக்கித் தன்னைச் சமன்படுத்தியவன், ''ஏன்... ரகு உன்னை பிக்கப் பண்ண வரலையா?'' அவளையே கூர்ந்தபடிக் கேட்டான்.

யோசனையுடன் திரும்பி ''ரகு ஏன் என்னை...'' என்றவள், அவன் பேச்சின் பொருளைப் புரிந்து கொண்டு, ''அவர் என்னோட ஆஃபீஸ் கலீக்... அவ்வளவுதான்! என் டிரைவர் இல்லை'' என்றாள் சினத்துடன்.

''அப்படியா? அவ்வளவுதானா? நான் என்னென்னவோ நினைச்சிட்டேனே! அப்போ... என்னை டிரைவர்ங்கிறியா?'' கூரிய அம்பாய் வந்தன வார்த்தைகள்!

''சாரி சார்! நான் ஒண்ணு சொன்னா, நீங்க அதை வேற மாதிரிப் புரிஞ்சிக்கறீங்க... என்னை இங்கேயே இறக்கி விட்டுடுங்க... நான் ஆட்டோ பிடிச்சிப் போய்க்கறேன்'' சட்டென்று கதவைத் திறக்க முற்பட்டாள்.

உடனே கார் கிறீச்சிட்டு நின்றது.

வேகமாக இறங்கியவளிடம், ''எங்கே போனாலும் நீ தினம் என்னைப் பாத்துதான் ஆகணும். ரிப்போர்ட்



பண்ண என்கிட்டே வந்துதான் ஆகணும்'' நக்கலாகக் கூறினான் வியாஸ்.

அதைக் கேட்டவுடன் பளிச்சென்று பதில் சொல்லத் திரும்பியவளால், வேகமாகக் கிளம்பிச் சென்ற காரின் பின்புறத்தை மட்டுமே பார்க்க முடிந்தது... மனம் பெரும் ஆயாசமானது!

* * *

**ம**றுநாள் அலுவலகத்திற்குச் சென்ற உடனே அவளை அழைத்தான் வியாஸ்.

''அடுத்த வாரத்துல இருந்து புது ப்ராஜெக்ட்டுக்கு உன்னை மாத்தியிருக்கேன்... இனிமே என்கிட்ட உன் முகம் திருப்பற வேலையெல்லாம் நடக்காது. நீ போகலாம்'' முகத்திலறைந்தாற் போலக் கூறிவிட்டு, கம்ப்யூட்டரில் தன் கவனத்தைப் பதித்துக் கொண்டான்.

சட்டென்று அவமானப்பட்டாற்போன்ற ஒரு உணர்வு வந்து மனதைத் தாக்கி, இவனுக்கு நாமென்ன அடிமையா என்ற வேகம் எழுந்தது.

''ஒரு நிமிஷம் சார்! நான் என் வேலையை ரிசைன் பண்ணிட்டா?'' முதுகு குலுங்குவதிலேயே அவனுடைய மௌனச் சிரிப்பு புரிந்தது.

வேகமாகத் திரும்பியவன், ''உன் வேலைக்கு ரெண்டு வருஷத்துக்கு கம்பெனியோட அக்ரிமெண்ட் போட்டிருக்காங்க... மறந்துட்டியா?'' நக்கலான குரலில் கேட்டபோதுதான், உண்மை நிலையே உறைத்தது.

உடனே முகம் கருங்கிவிட வேகமாக வெளியேறியவளை, அவனுடைய ஏளனச் சிரிப்பு துரத்துவதைப் போல் ஒரு பிரமை!

மனம் அமைதியடைய, அந்த வாரக் கடைசியில் யோகா வகுப்பிற்குச் சென்றிருந்தபோதுதான், அங்கு வைஜெயந்தியை மீண்டும் சந்தித்தாள் தன்யா.

யோகாவும் தியானமும் செய்து முடித்து விட்டு இருவரும் வெளியில் வந்தவுடன், "சைதன்யா... நீ அவசியம் இன்னிக்கு எங்க வீட்டுக்கு வந்துதான் ஆகணும்... மாட்டேன்னு சொல்லக் கூடாது" என்றார் வைஜெயந்தி, அவளுடைய கைகளைப் பிடித்தபடி.

"சரிம்மா! நான் வரேன்"

சிறு முறுவலுடன் தன் வண்டியில் ஏறி அவருடைய காரைத் தொடர்ந்து அவர் வீட்டிற்குச் சென்றபோது, அவர் தன் வீடு இவ்வளவு பிரம்மாண்டமாக இருக்குமென்று அவள் எதிர்பார்க்கவில்லை.

பிரமிப்புடன் இறங்கியவளிடம் "இது எங்க தாத்தா காலத்துச் சொத்து. நான் ஒரே பொண்ணுங்கிறதாலே எல்லா சொத்தும் எனக்கே வந்துடுச்சு" வைஜெயந்தி மெதுவாகக் கூறினார்.

உள்ளே சென்று டிபன் காபி சாப்பிட்டு விட்டு, வீட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தவள், அப்போதுதான் ஹாலிலிருந்த அந்தப் பெரிய போட்டோவை கவனித்தாள்.

மனதிற்குள் சிலீரென்று ஒரு அதிர்ச்சி தாக்க... அதில் வியாஸ் கம்பீரமாகச் சிரித்துக் கொண்டிருந்தான்.

உயிர் வரை பாய்ந்து, தன்யாவின் உணர்வுகளை உரசிப் பார்த்தது, அந்த ஒற்றைப் புன்னகை.



எண்ணங்களில், கலங்கலாய் வியாஸின் நினைவுகள் வலம் வர ஆரம்பித்து, நிஜத்தின் நிதர்சனத்தால் மெதுவாகக் கலைந்தன.

## 10

"அம்மா... இவரு...?"

அவள் கேள்வியாய் நோக்க, "இவன் தான்மா எங்க மூத்த மகன் வியாஸ்... இது விவேக்... ரெண்டாவது பையன்!" என்று மறுபுறமிருந்த போட்டோவைக் காண்பித்து, சிறு புன்னகையை வரவழைத்தார்.

தன்யாவிற்கு, தன் தம்பியின் நண்பன் இவனென்று புரிந்தது.

மனதிற்குள் முகிழ்த்த மகிழ்ச்சி, புன்னகையாய் அவள் இதழ்களைத் தீண்ட, "என்னம்மா! சிரிக்கறே?" ஆவலுடன் கேட்டார் வைஜெயந்தி.

"இல்லம்மா! உங்க மகனுங்க ரெண்டு பேரையுமே முன்னாடியே எனக்குத் தெரியும்! அதான் சிரிச்சேன்."

"எப்படி? அதுவும் வியாஸை எப்படித் தெரியும்?" படபடத்தார் அவர்.

"அம்மா! எங்க வீட்டுக்குப் பக்கத்து வீட்டுலதான் இருக்கார்... என் பாஸும் அவர்தான்! அவருக்குக் கீழேதான்

நான் வேலை செய்யறேன்! விவேக், என் தம்பி சந்தீப் போட ஃப்ரெண்ட்! எங்க வீட்டுக்கு நிறைய தடவை வந்திருக்கான்... அதனாலத் தெரியும்."

"அவ்வளவுதானா?" என்ற அமர்ந்தவரின் வார்த்தைக்குள், ஆயிரம் அர்த்தங்கள்.

"ஏம்மா! பின்னே என்ன... உங்க மகன் வியாஸ் இந்த ஊருக்கு பட்டத்து ராஜாவா... எல்லாருக்கும் தெரியுறதுக்கு...?" கேட்டுவிட்டுக் குறும்பாகச் சிரித்தாள் அவள்.

தளர்ந்து போய் அமர்ந்திருந்தவர் மெல்ல நிமிர்ந்து, "நீ சொன்னாலும் சொல்லாட்டாலும் அவன் இந்த வீட்டு ராஜாதான்! ஒரு வேளை அவனை நீ விரும்பிறயோன்னு நினைச்சிட்டேன்மா. யாரோட அன்பும் துணையும் இல்லாம, இப்போ வறண்டு போயிருக்கிற அவன் மனசை, உன்னை மாதிரி ஒரு பொண்ணாலதான் நிச்சயமா பாசத்தைத் துளிர்க்கச் செய்ய முடியும்" ஒரு பெருமூச்சுடன் நிறுத்தினார்.

சட்டென்று கலையாத மேகங்களாய் தன்யாவின் மனதினுள் அவன் நினைவுகள் வலம் வர ஆரம்பித்தன.

இனம் புரியாத ஒரு உணர்வு, அவளை சுகமாய் சுவீகரித்தது.

ஆனால் வைஜெயந்தியின் குரல் அவளைக் கலைத்தது.

"வியாஸ் வந்தப்புறம்தான், என் வாழ்க்கையே அழகாச்சு தன்யா... நான் வாழவே ஒரு அர்த்தம் பிறந்துச்சு... ஆனா அவன்தான் எங்களைப் புரிஞ்சுக்கலை..." அவர் விழிகளில் கண்ணீர் முத்துக்கள் சரம் கோர்த்தன.



ஒன்றும் புரியாமல் எழுந்தாள் தன்யா.

"ஏம்மா... அவருக்கு என்ன ப்ரச்னை? ஏன் வீட்டை விட்டுப் போயிட்டாரு... அன்னிக்கே, கோவில் வாசல்லேயும் ஒரு தடவை இதே மாதிரிதான் சொன்னீங்க? ஏதாவது சொத்துப் பிரச்னையா?" மெதுவாகக் கேட்டாள் அவள்.

"இல்லைம்மா! அவன்தான் எங்க சொத்துன்னு, இப்பவும் நாங்க நினைக்கிறோம்... அதை அவன் புரிஞ்சிக்கலை... ம்... உனக்கு ஆரம்பத்துலயிருந்து சொன்னாத்தானே எல்லாம் புரியும்!"

ஒரு பெருமூச்சுடன் கூற ஆரம்பித்தார்.

தங்களுக்கு குழந்தையில்லாதது, வியாஸைத் தத்தெடுத்துத் தங்கள் வாழ்க்கையில் வசந்தத்தை வசப்படுத்திக் கொண்டது... அவனை உயிராய் நேசித்தது... பிறகு விவேக் பிறந்தது... இருவரையும் மிகவும் பாசத்துடன் வளர்த்தது... எல்லாம் கூறிவிட்டு, கடைசியாக தன் அண்ணன் வந்திருந்த அன்று நடந்ததையெல்லாம் சொல்லியவர், தாங்க முடியாத துயரத்தில் விம்ம ஆரம்பித்தார்.

தன்யா அவரை எவ்வளவோ சமாதானப்படுத்தியபோதும், அவர் இயல்பு நிலைக்குத் திரும்பவே வெகு நேரமானது.

பிறகு கண்களைத் துடைத்து நிமிர்ந்தவர், "சாரிம்மா... என் சோகத்தை எல்லாம் சொல்லி உன்னை போரடிச்சிட்டேன்னு நினைக்கிறேன்!" தர்ம சங்கடத்துடன் கூறினார்.

"இல்லை ஆன்ட்டி! சந்தோஷம் எப்பவுமே பகிர்ந்துட்டா அதிகமாகும் துக்கம் மட்டும் மத்தவங்க கிட்டே ஷேர் பண்ணினா, பாதியாக் குறைஞ்சிடும் என்கிட்ட எல்லாத்தையும் சொன்னதுல உங்க மனசோட பாரம்

கொஞ்சமாவது குறைஞ்சதுன்னா, நான் ரொம்ப சந்தோஷப்படுவேன்.''

"நீ சொல்றது உண்மைதான் தன்யா! வியாஸோட அப்பாகிட்டே இதுபத்தி பேசினா என்ன புரிஞ்சிக்காமத் திட்டுவாரு... தைரியமா இருக்கச் சொல்லுவாரு! விவேக் எதைப் பத்தியும் கண்டுக்கறதில்லை. வெளியில வேற யார்கிட்டயும், இதைப்பத்தி நான் பேசறதும் இல்லை...

"அண்ணன் வீட்டுக்குப் போறதைக்கூட நிறுத்திட்டேன், மனசு முழுக்க பாரமா மூச்சு முட்ட அவன் நினைவுகளை மட்டுமே சுமந்துட்டிருக்கேன். ஆனா எங்களோட பாசத்தை அவன் புரிஞ்சிக்கவே இல்லியே!

"அதான் இப்பல்லாம் அந்த நினைப்பு வந்துருச்சின்னா, அவனை எடுத்துட்டு வந்தோமே, அந்த ஆசிரமத்துக்கே போயிடுவேன். அங்கே கொஞ்ச நேரம் இருந்துட்டு வந்தேன்னா மனசுக்கு நிம்மதியா இருக்கும்'' கண்ணீர்க் குரலில் முடித்தார்.

ஆழ்ந்த யோசனையிலிருந்த தன்யாவுக்கும், வியாஸின் கோபம் புரியவில்லை.

"அவர் ஏன் உங்ககிட்ட கோபப்படணும்? நீங்க அவரை நல்லபடியா வளர்த்து படிக்க வச்சு இந்த அளவுக்கு உயர்த்தியிருக்கீங்க... அதுக்கு நன்றிதானேம்மா சொல்லணும்!''

"நன்றியெல்லாம் வேணாம்மா... அவன் பழையபடி எங்ககூட வந்து சேர்ந்து இருந்தா அதுவே போதும்.''

ஆயிரம் எதிர்பார்ப்புகளைக் கண்களில் தேக்கியபடி கூறியவரிடம், ஏனோ ஒரு விதப் பாசம் சுரந்தது.



அதே நேரம், வியாஸை இந்தக் குடும்பத்துடன் சேர்க்க வேண்டும் என்ற வேகமும் வந்தது.

"கவலைப்படாதீங்கம்மா! உங்க அன்பையும் நல்ல மனசையும் புரிஞ்சிக்கிட்டு அவர் சீக்கிரமாவே திரும்பி வருவாரு... நீங்க வேணாப்பாருங்களேன்.''

அவரைச் சமாதானப்படுத்தும் விதமாகக் கூறிவிட்டு, விடைபெற்றுக் கிளம்பினாள்.

அவர் முதன் முதலில் கூறிய விஷயம் மனதில் சிலிர்ப்புடன் உட்புகுந்து புதுவித அனுபவத்தைப் படரவிட, நாபிக்குள், பனிச்சிதறலாய் அவனுடைய நினைவுச் சாரல்!

அவர் கூறியதுபோல், வியாஸ் தன்னை விரும்பினால் எப்படி இருக்கும் என்று நினைக்கும்போதே, ஓசையின்றி அவள் மனதில் மௌனமாய் மலர்ந்தான் அவன்.

சிறு நீர்த்துளிகள் சேர்ந்து ஓடை உருவாவதைப் போல், அவனுடைய மனத்தேடலின் முடிவு, மகிழ்ச்சிப் பெருவெள்ளமாய் மனதை நனைக்க ஆரம்பித்தது.

வீட்டிற்கு வந்ததுமே, தனிமையை நேசிக்க ஆரம்பித்த இதயத்திற்குள், அவனுடைய நினைவுச் சுவடுகள், இன்ப வடுக்களாய் நிறைந்தன.

* * *

மறுநாள் அலுவலகத்திற்குச் சென்றபோது, காலையிலேயே எதிர்பாராத அதிர்ச்சி அவளுக்குக் காத்திருந்தது.

தன்யாவைச் சந்திக்க வேண்டுமென்று, வைஜெயந்தி முன்புற லௌஞ்சில் அமர்ந்திருந்தார்.

அவளைக் கண்டதும் மகிழ்ச்சியுடன் எழுந்து வந்தவரின் நோக்கம் புரிந்தது. மனதிற்குள் சிரித்துக் கொண்டவள்,

''என்னம்மா! உங்க ஆசைப் பையனைப் பாத்தாச்சா? என்ன சொன்னாரு?'' ஆர்வத்துடன் கேட்டாள்.

''ம்... என்னைப் பாத்தவுடனே ரொம்ப அதிர்ச்சியா யிட்டான். ஆனா, உள்ளே போயிட்டு யாரைப் பாக்க வந்திருக் காங்கன்னு ஒரு ஆள்கிட்ட கேட்டனுப்பினான். நான் உன் பேரைச் சொல்லிட்டேன்'' விரக்தியுடன் கூறினார்.

''ஏம்மா! அவரையே பாக்க வந்ததா சொல்லிப் பாத்திருக் கலாமே?''

''போன தடவை இப்படித்தான் அவன் வீட்டுக்குப் போனப்ப, என் கூடப் பேசவே மறுத்து திருப்பியனுப் பிட்டான். இந்தத் தடவையும் அதே மாதிரிச் செஞ்சான்னா என்னால தாங்கிக்க முடியாது. அதான் தூர இருந்தே பாத் துட்டுப் போகலாம்னு வந்தேன்.''

தவிப்புடன் கூறும் அந்தத் தாயின் சொற்கள், அவள் மனதைக் கனக்கச் செய்தன.

''சரிம்மா! இதுதான் சரி! இன்னொரு ஐடியா! இப்ப, அந்த ஆசிரமத்துல சமீபத்துல நடந்த வெள்ள நிவாரணத் துக்காக நிதி திரட்டுறாங்கன்னு கேள்விப்பட்டேன்... அந்த புக்கோட அடுத்த வாரம் வாங்க... பார்ப்போம்'' குறும்புடன் கண் சிமிட்டியபடி கூறினாள்.

தன்யா, தனக்காக ஏதோ திட்டமிடுகிறாள் என்பதைப் புரிந்து மனம் லேசாகிவிட, ஜெயந்திக்குள் மகிழ்ச்சி வந்து மெதுவாய் எட்டிப் பார்க்க ஆரம்பித்தது.

தன்யாவின் இதழ்களிலும், குறுகுறுப்பாய் ஒரு புன் னகை புதிதாய் இடம் பதித்தது.



வியாஸை மாற்ற வேண்டும் என்ற எண்ணம் உறுதியாய் மனதில் இடம் பிடித்தது.

அந்த நிமிடம், ''மனிதன் சுதந்திரமாகப் பிறக்கிறான்; ஆனால் எங்கும் கட்டுண்டு இருக்கிறான்'' என்ற ரூஸோவின் வரிகள் நினைவிற்கு வந்தன.

வியாஸும், தான் அநாதை என்ற மாய வலைக்குள் சிக்குண்டிருப்பது புரிய, அவனை அந்த எண்ணங்களி லிருந்து விடுவிக்க வேண்டும் என்ற பேராவல், தன்யா வின் நெஞ்சிற்குள் ஜனித்தது.

## 11



மஞ்சுவிற்கு, அன்றுதான் துபாயிலிருந்து விகவம் ஃபோன் செய்து பேசியிருந்தான்.

அவள் மனம் மிகவும் சந்தோஷத்திலிருக்க, இதழ்கள் தன்னையறியாமல் மனதிற்குப் பிடித்த பாடலொன்றை முணுமுணுத்தபடி இருந்தன.

மஞ்சுவின் மாமியார் கோகிலா, கோவிலுக்குச் சென்றிருந் தார்.

திடீரென்று அவளுடைய கை யாராலோ பற்றித் திருப் பப்பட வேகமாகத் திரும்பினாள்.

உதடுகளில் அர்த்தம் விளங்காத சிரிப்புடன் அவளுடைய மாமனார் கண்ணப்பன் நின்றிருந்தார்.

உள்ளமும் உடலும் பதறிவிட சட்டென்று கையை விடுவித்துக் கொண்டு நிமிர்ந்தபோது, "மஞ்சுக் கண்ணு... எனக்கு காபி வேணும்!" அவருடைய செயல்கள் புதிதாய் இருந்தன.

இதுவரை திருமணத்திற்கு வந்த உறவினர்கள் அனைவரும் இருந்தபோது, மரியாதையாக நடந்து கொண்டவர், இன்று முறை தவறியது வேதனையாய்!

"மாமா! நீங்க போய் ஹால்லே உக்காருங்க... நான் எடுத்துட்டு வரேன்" படபடப்புடன் அவள் கூற, மெதுவாகத் திரும்பிச் சென்றார் அவர்.

மனதின் படபடப்பு அடங்க வெகு நேரமாகியது.

தாமதமானால் திரும்பவும் அவர் அங்கு வந்து விடுவாரோ என்ற பயத்திலேயே வேகமாகக் காபியைப் போட்டு எடுத்துச் சென்று அவரிடம் கொடுத்துவிட்டு, தன் அறைக்குச் சென்று தாழிட்டுக் கொண்டாள் மஞ்சு.

மனம் ஈர விறகாய் புகைய ஆரம்பித்தது.

கடவுளே... எனக்கு ஏன் இப்படி ஒரு கொடுமை என்று கதறியது. என்னைக் காப்பாற்று என்று தவிக்க ஆரம்பித்தது.

விக்ரம் ஊரிலிருந்தாலாவது பரவாயில்லை. இப்போது அவனில்லாத தனிமையில் தான் என்ன செய்யப் போகிறோம் என்ற பயம், மனதைப் பெரிதும் ஆக்ரமித்து பலமிழக்கச் செய்தது.

வெகு நேரம் கழித்து அறைக் கதவு தட்டப்பட, உடனே நெஞ்சிற்குள் ஒரு குளிர் பரவினாலும், மெதுவாகக்



கதவைத் திறந்தால் அங்கு கோகிலா கோபத்துடன் நின்றிருந்தார்.

"என்ன... நான் வெளியிலப் போயிருந்தா உன் மாமனாரைக் கவனிச்சி ஒரு காபி போட்டுக் கொடுக்கக் கூடாதா? கதவைத் தாள் போட்டுட்டுத் தூங்கறியா? நல்ல சோம்பேறியக் கொண்டு வந்திருக்கேன். பாரு... அவரே காபி போட்டுக் குடிச்சிட்டு உக்காந்திருக்காரு பாவம்" என்றபோது, "இல்லை... நான்..." என்றபடி திரும்பியவளின் பேச்சு அங்கு எடுபடாமல் போனது.

எதிரே, கண்ணப்பனின் சிரிப்பு, ஒரு ஓநாயின் சிரிப்பைப் போல!

"கடவுளே... என்னைக் காப்பாற்று..." நெஞ்சம் இறைஞ்சியது.

பிறகும் கோகிலா குளிக்கச் செல்லும்போதும், பக்கத்து வீடுகளில் அரட்டை அடிக்கச் செல்கின்ற பொழுதுகளிலும், மாமனாரின் வக்கிரங்கள் தொடர ஆரம்பித்தன.

* * *

அந்த வாரக் கடைசியில் தன்னுடைய அம்மா வீட்டிற்குச் சென்று, தன் தாயிடம் மெதுவாக எல்லா விஷயங்களையும் கூறியவள், முடிப்பதற்குள் தொண்டை அடைத்துவிட, உடைந்துபோய் அழ ஆரம்பித்தாள்.

அவளுடைய தாயின் நெஞ்சம் பதறிப் போனது.

"இதை யார்கிட்டயும் சொல்லிடாதடி. அவ்வளவுதான்! உன் வாழ்க்கையே சந்தி சிரிச்சிப் போய் நடுத்தெருவுக்கு வந்துடும்... ஏற்கெனவே உன் அத்தைங்கல்லாம் நீ நல்லா வாழ்ந்திடுறியா பாத்துடுவோம்னு பேசிக்கிட்டாங்க! உன்

ளோட மாமியார் எங்கே வெளியே போனாலும் நீயும் கூடவே போயிடு... அவரோட தனியா இருந்தாத்தானே ப்ரச்சனை! ரொம்பத் தொந்தரவு பண்ண ஆரம்பிச்சார்னா, மாமியார்கிட்ட சொல்லிடுவேன்னு மிரட்டிப் பாரு... அப்ப பயப்படுவாரு இல்லையா?''

கண்கள் கலங்க அவர் கூறியபோது அவருடைய கையாலாகாத்தனம் புரிந்து நொறுங்கிப் போனாள், மஞ்சு.

அவரிடமிருந்து இந்தப் பதிலைச் சத்தியமாக எதிர்பார்க்கவில்லை, அவள்.

ஆனால், திருமணம் முடிந்தவுடனே பெண் வாழாவெட்டியாகத் திரும்பி வந்து விட்டால், ஊர் என்ன பேசுமோ என்று அவர் பயப்படுவதும் புரிந்தது.

பிறகு, அவளுக்கு ஆறுதல் சொல்லி அழைத்து வந்து மாமியாரின் வீட்டில் அவளை விட்டார்.

கோகிலாவிடம் ''சம்மந்தியம்மா! கல்யாணம் முடிஞ்ச கையோட மாப்பிள்ளையும் வெளிநாடு போயிட்டாரு. அவளுக்கும் எப்படியோ இருக்கும். நீங்க எங்கயாவது வெளியே போனீங்கன்னா அவளையும் அழைச்சிட்டுப் போங்க... மனசுக்குக் கொஞ்சம் ஆறுதலா இருக்கும்'' மெல்லிய குரலில் கூறிவிட்டுக் கிளம்பி விட்டார்.

தனிமைச் சிறையில் விடப்பட்ட பறவை போலானாள் மஞ்சு. சுற்றிலும் மிருகங்கள் சூழ்ந்த காட்டில் தனித்து விடப்பட்டது போல் மனம் தவித்தது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை என்பதால் தன்யாவின் வீட்டிற்குச் சென்று இதைப் பற்றிப் பேச வேண்டுமென்று மனதில் ஒரு முடிவுடன் உறங்கச் சென்றாள்.



வெகு நாட்கள் அவளை விட்டு நீங்கியிருந்த உறக்கம், அவளை மெல்லத் தழுவியது.

* * *

**ம**றுநாள் காலையிலேயே கிளம்பியவள், கோகிலாவிடம் சென்று ''அத்தை! நான் என் ஃப்ரண்ட் தன்யா வீட்டுக்கு போயிட்டு வரவா? மதியம் வந்திடுவேன்'' மெதுவாகக் கேட்டாள்.

''ம்... சரி! சீக்கிரம் வந்துடு!''

அரை மனதுடன் அவர் சம்மதிக்க நிம்மதிப் பெருமூச்சுடன் வெளியில் வந்தபோது, யாரோ பின் தொடர்வதுபோல் தோன்றியது.

மெல்லத் திரும்பினாள், அங்கு கண்ணப்பன் வேக நடையுடன் வந்து கொண்டிருந்தார்.

அவளருகில் வந்தவுடன், ''தோ பாரு... என்னைப் பத்தி நீ யார்கிட்ட சொன்னாலும் அவங்க உன்னை நம்ப மாட்டாங்க! என்னை அனுசரிச்சு நடந்துக்க... அவ்வளவு தான்'' கூறிவிட்டு விருட்டென்று திரும்பிச் சென்றார்.

மனம் உலைக்களமாகக் கொதிக்க, தன்யாவின் வீட்டிற்குச் செல்வதற்காக ஆட்டோவில் ஏறியும், தீப்பிழம்பாய் தகித்தது நெஞ்சம்.

அவளைக் கண்டவுடன் சந்தோஷத்துடன் வரவேற்றார் தேவகி.

''என்னம்மா! மெலிஞ்சு போயிருக்கே... கணவனைப் பிரிஞ்ச துக்கமா?'' கிண்டலுடன் கேட்டார்.

ஒரு மௌனப் புன்னகையுடன் அவரைத் தொடர்ந்து சென்றபோது, ''ஹாய் மஞ்சு! என்ன காலையிலேயே

"அதிசயமா?" என்றபடி தன் அறைக்குள் அவளை அழைத்துச் சென்றாள் தன்யா!

உள்ளே நுழைந்ததுமே, கதவைச் சாத்திவிட்டு அவள் மேல் சாய்ந்து அழ ஆரம்பித்தவளை என்னவென்றே புரியாமல் சமாதானப்படுத்தினாள்.

"மஞ்சு! கல்யாணம் ஆன புதுசில ஹஸ்பெண்டைப் பிரியறது இவ்வளவு கஷ்டமா? என் ஃப்ரெண்ட் தைரியசாலின்னு நினைச்சேன்!" கேலியுடன் கூறினாள்.

சட்டென்று நிமிர்ந்தவளின் பார்வையில் இனம் புரியா பயமும் தவிப்பும் தெரிந்தன.

"என்னாச்சு மஞ்சு? இல்லை... நீ அதுக்காக அழலே... ஏதோ ஒரு விஷயம் உன்னை ரொம்ப பாதிச்சிருக்கு" தன்யா யோசனையுடன் கேட்டாள்.

அழுகையின் நடுவே மஞ்சு தன் மாமனாரைப் பற்றிக் கூறியபோது, ஒரு கணம் உறைந்து போனவளின் விழிகள் ஸ்தம்பித்திருந்தன.

இதழ்கள் "உடனே" என்று மென்மையாய் உச்சரித்தன.

மஞ்சுவை சமாதானப்படுத்தியவள் "இதை இப்படியே விடக்கூடாது மஞ்சு!

"நாளைக்கே உன் ஹஸ்பெண்ட் கிட்ட ஃபோன் பண்ணி இது பத்திச் சொல்லு. அவர் என்ன சொல்றாருன்னு பாப்போம். உன்னால அங்க இருக்க முடியலைன்னா, அம்மா வீட்டுக்குப் போயிடு... மாமியார் கொடுமைப்படுத்தினாக் கூட... போனாப் போகுதுன்னு கொஞ்ச நாள் விட்டுக் கொடுத்துப் போகலாம். ஆனா இது மானம் காக்கிற ப்ரச்னை... உடனே முடிவெடுத்துத்தான் ஆகணும்...



கவலைப்படாதே. உனக்கு நான் இருக்கேன் மஞ்சு. எங்க அப்பாகிட்ட சொல்லுவோம்!"

தைரியம் கூறி சாப்பிட வைத்து, அவளை அனுப்பி வைத்தாள்.

மஞ்சு கிளம்பிய பிறகு, தன்யாவின் நினைவுகள் எங்கோ சென்றன.

சென்ற வருடம் உத்திரப் பிரதேசத்தில் ஒரு கிராமத்தில் தன் மாமனாரே தன்னை மானபங்கப்படுத்திவிட்டார் என்று நியாயம் கேட்ட ஒரு பெண்ணை, "உன் கணவருக்கும் உனக்குமுள்ள உறவு ரத்தாகிவிட்டது. இனி நீ உன் மாமனாருடன் தான் வாழ வேண்டும்" என்று ஷரியத் சட்டப்படி வழங்கப்பட்ட தீர்ப்பு நினைவலைகளில் ரௌத்திரமாய்ப் படர்ந்தது.

அந்தத் தீர்ப்பு, பெண் இனத்திற்கே பெரும் கொடுமையாய்!

நான் பாதிக்கப்பட்டு விட்டேன். நியாயம் வேண்டும் என்று கேட்கப் போன ஒரு பெண்ணிற்குக் கொடூரமான தண்டனையையும், தவறு செய்தவனுக்குப் பரிசையும், அளித்த ஆணாதிக்க சமூகத்தை நினைத்தால், இன்றும் மனம் தீயாய்த் தகித்தது.

மஞ்சுவின் வாழ்க்கையையும் அதுபோல் ஆக விட்டு விடக்கூடாது என்ற பெரும் உறுதி, மனதில் நிறைந்தது.

தன் மகளைப் போல் நினைக்க வேண்டிய ஒரு பெண்ணை வேறு விதமாக எப்படி... இதயப் பரப்பில் முட்கள் நெருடின.

அன்றைய இரவு உறக்கத்தைத் தொலைத்த இரவாய்!

அவள் மனம் பாலையாய் வறண்டு போய், மகிழ்ச்சித் துளிகளுக்காகத் தவமிருக்க ஆரம்பித்தது.

## 12



மறுநாள் காலையில் வாக்கிங் சென்றபோது, தியாகரிடம் இது பற்றிப் பேசினாள் தன்யா.

"அப்பா! மஞ்சு வீட்டில அவளுக்குப் பெரிய ப்ராப்ளம்..." என்று அவளுடைய மாமனாரின் இழிவான நடத்தையைப் பற்றிக் கூறியபோது, அவர் கொதித்துப் போனார்.

"இன்னும் ஏம்மா இந்தப் பொண்ணு அவங்க வீட்டில இருக்கா! உடனே கிளம்பி அம்மா வீட்டுக்கு வர வேண்டியதுதானே?"

"அவ அம்மாகிட்ட, அவ எல்லாம் சொல்லி அழுதிருக்காப்பா. அவங்க நிலைமையே ரொம்பக் கஷ்டம்... ஏழு டீச்சரம்மா அவங்க... அதிலே வர வருமானம்தான். அதனாலேயோ என்னவோ, அவங்கம்மா அவளை எப்படியாவது அங்கேயே வாழ்ந்து தன்னைக் காப்பாத்திக்கச் சொல்லிக் கேட்டிருக்காங்க... கல்யாணமான புதுசில, வாழாவெட்டியா திரும்பி வந்தா குடும்பத்துக்கே கேவலம்னு சொல்லி அழுதிருக்காங்க" மனக்குமுறலுடன் கூறினாள் தன்யா.

"எப்படிம்மா ஒரு அம்மாவாலே இப்படி சொல்ல முடிஞ்சது... நினைக்சாலே பகீர்ங்குது எனக்கு! ஒண்ணு செய்ய



லாம். அன்னிக்கு நம்ம வீட்டுக்கு வந்தாரே, போலீஸ் அதிகாரி வெற்றிச்செல்வன். அவர்கிட்ட சொல்லி கம்ப்ளெயிண்ட் பண்ணிப் பாப்போமா?"

மஞ்சுவிற்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்ற ஆதங்கம் தெரிந்தது, அவர் குரலில்!

"இன்னிக்கு அவ ஹஸ்பெண்டுக்குப் பேசச் சொல்லி இருக்கேன்... அவர் என்ன முடிவெடுக்கிறாருன்னு பார்ப்போம்ப்பா"

ஒரு பெருமூச்சுடன் முடித்துவிட்டு ஜாகிங்கைத் தொடர்ந்தாள் அவள்.

* * *

அன்று மதியம், அலுவலகத்திற்கு அவளைப் பார்ப்பதற்காக எதிர்பாராத விருந்தாளியாய் வந்திருந்தார் வைஜெயந்தி.

"தன்யா! நீ சொன்ன மாதிரி வெள்ள நிவாரணத்துக்காக பணம் கலெக்ட் பண்ண வந்திருக்கேன்" என்று வவுச்சரை நீட்டியபடி புன்னகைத்தார்.

தன்னால் முடிந்த ஒரு தொகையை அதில் எழுதிவிட்டு, ரகுவிடமும் ஞானத்திடமும் முதலில் நிதி வரும் செய்தாள்.

"அம்மா! என்கூட வாங்க!" என்று அவரை வியாஸின் கேபினுக்கு அழைத்துச் சென்றாள்.

"மே ஐ கமின் சார்!"

கதவை மெலிதாகத் தட்டிவிட்டுக் காத்திருந்தபோது, "யெஸ்! கமின்" என்ற ஆழ்ந்த குரல் கம்பீரமாக வந்தது.

வைஜெயந்தியுடன் அவன் உள்ளே சென்றபோது, அலட்சியமாக உயர்ந்த அவன் விழிகளில், உடனே ஒரு பரபரப்பும் ஆர்வமும் தோற்றிக் கொள்ள, சட்டென்று எழுந்து விட்டான்.

உடனே தன் நிலை உணர்ந்து ஒரு கணம் கண்களை இறுக மூடித் திறந்தான்.

தொப்பென்று தன் இருக்கையில் அமர்ந்து, பிறகு அவர்கள் இருவரையும் அமரும்படி கூறினான்.

வியாஸ் மிகவும் அலைப்புறுதலோடு இருப்பது, அவன் செய்கைகளில் நன்றாகத் தெரிந்தன.

"சார்! இவங்க எங்க ஃபேமிலி ஃப்ரெண்ட்! வெள்ள நிவாரண நிதிக்காக பணம் கலெக்ட் பண்றாங்க. நான் தான் இவங்களை எங்க வியாஸ் சார் நிறைய டொனேட் பண்ணுவாருன்னு சொல்லி அழைச்சிட்டு வந்தேன்... குடுங்கம்மா" என்றாள் விழிகள் குறுகுறுத்தாலும், இயல்பாக!

அவனிடம் வவுச்சரை நீட்டிய அவரின் விரல்கள் மெல்ல நடுங்க, வேகமாய் அதை வாங்கியவன், உடனே ஒரு பெரிய தொகையைப் பூர்த்தி செய்தான்.

"தேங்க்யூ சார்! நான் சொன்னேன் இல்லம்மா... எங்க சார் ரொம்ப இளகின மனசு படைச்சவர்னு... பாத்தீங்களா? நாங்க வரோம் சார்!" என்றபடி எழுந்தாள்.

அந்தத் தாயின் பார்வை, தன் மகனை விட்டு நொடியும் விலக மனமின்றி வியாஸிடமே பதிந்திருந்ததை உணர்ந்தாலும், அவரை எழுப்பி அழைத்துக் கொண்டு வெளியே வந்தாள்.



கதவைத் திறக்கும்போதே "மிஸ் நன்யா! அவங்களை அனுப்பிட்டு ஒரு நிமிஷம் என் கேபினுக்கு வந்துட்டுப் போங்க" அவன் குரல் ஆணையிட்டது.

"ஓகே சார்!" என்று கூறியவள், வைஜெயந்தியை குறும்புப் புன்னகையுடன் அனுப்பிவிட்டுத் திரும்பி வந்த போது, அதுவரை மனதில் முகிழ்த்திருந்த மகிழ்ச்சித் துளிகள் சடுதியில் உலர்ந்திடும் பனித்துளியாய் சட்டென்று உலர்ந்தன.

வியாஸ் தீப்பிழம்பை விழிகளில் கக்கியபடி, அவளை எதிர்பார்த்து நின்றிருந்தான்.

"ஏய்! உன் மனசுல என்ன நினைச்சிட்டிருக்கே? நான் அநாதைன்னு சொல்லாம சொல்லிக் காட்டறியா? எங்க அம்மாவை அழைச்சிட்டு வந்து என்னோட சேத்து வைச்சி, அதுதான் நீ பிறந்த இடம்னு சுட்டிக் காட்டி, பெரிய சோஷியல் சர்வீஸ் பண்றதா நினைப்பா?" புலியாய் உறுமினான்.

"சார்... நீங்க என்ன சொல்றீங்கன்னே எனக்குப் புரியலை... அம்மாவா... யாரு? இப்போ வந்துட்டுப் போனாங்களே அவங்களா? சாரி சார்... எனக்குத் தெரியாது! அவங்களைக் கொஞ்ச நாளாத்தான் எனக்குப் பழக்கம். ஒரு நாள் கோவில்லே தன் பையன் திரும்பி வரணும்கிறதுக்காக ஏதோ நேர்த்திக் கடன் செய்ய நகை செஞ்சு எடுத்துட்டு வ தாங்க... அன்னிக்கு அதைத் திருடிட்டுப் போன ஒருத்த கிட்டயிருந்து திரும்ப வாங்கி நான்தான் அவங்ககிட் கொடுத்தேன். அதிலேயிருந்துதான் பழக்கம்! நீங்க சொல் எதுவுமே எனக்குப் புரியல."

விழிகளில் உணர்ச்சிகளை மறைத்தபடி கூறினாள்.

உடனே தன்னை நிலைப்படுத்தியவன், ''இனிமே இதுமாதிரி ஆஃபீஸ் நேரத்துல யாரையாவது வரவழைச்சி, டொனேஷன் அது இதுன்னு கலெக்ட் பண்றதெல்லாம் இன்னிக்கோட நிறுத்திக்க... எனக்கு இதெல்லாம் பிடிக்காது. வெள்ள நிவாரணமாம்... ஹூம்... எல்லாம் வேஷம்!'' பக்கத்திலிருந்த டேபிளில் வேகமாகக் குத்தினான்.

சட்டென்று, தன்யாவின் மனதிற்குள் பெரும் கோபம் சூழ்ந்தது.

''ஏன் சார்... எல்லாத்தையுமே தப்பாவே பாக்கறீங்க? எங்கேயோ தூரத்துல இருக்கிற ஒரு காஷ்மீரிலே பூகம்பம் வந்து இறந்துபோன மக்களைப் பத்தி நினைக்கிறப்போ, மனை பாரமாகி கண்கள்லே கண்ணீர் துளிர்க்குதே... அவங்கல்லாம் நம்ம சொந்தம்னா? இல்லை... நம்ம கூடப் பிறந்தவங்கன்னா? இல்லியே? முகமே அறியாத அவங்க இழப்புக்கு நாம் செய்யற சிறு உதவியும், நாம வடிக்கிற சில கண்ணீர்த் துளிகளும், என்னைப் பொறுத்த வரைக்கும் ரொம்பப் புனிதமானது. அது மனித நேயத்தோட அடையாளம்... ஒவ்வொரு மனுஷனுக்குள்ளேயும் புதைஞ்சிருக்கற கண்ணுக்குத் தெரியாத மனிதாபிமானம்!

''ஹூம்... அதை உங்ககிட்ட எதிர்பார்த்தது என் தப்பு தான்... சரி நீங்கதான் உறவுகளுக்கும் உணர்வுகளுக்கும் மதிப்புக் கொடுக்காதவராச்சே... ப்ச்'' என்றபடி அவள் வேகமாய்த் திரும்பிச் செல்ல அவளுடைய வார்த்தைகள் இதயத்தில் சவுக்கடியாய் விழுந்தன.

வீரியத்துடன் வலிக்கச் செய்து, வெகு நாட்களுக்குப் பிறகு யோசிக்க வைத்தன.



வெகு நேரம் கைகளில் தலையைத் தாங்கியபடி அமர்ந்திருந்தவனுக்குள், புதை குழியாய்ப் புதைந்திருந்த ஏக்கங்களும், வேதனைகளும் மெல்ல மேலெழும்பின.

தான் செய்தது தவறோ என்று முதன்முதலாக மனம் இடித்துரைக்க ஆரம்பித்தது.

அவன் மனதைத் தட்டி எழுப்பிவிட்டு, தன் முத்திரையையும் அவனுள் பதித்துவிட்டு, கலைந்து போகும் பனிப் புகையாய் வெளியே சென்றிருந்தாள் தன்யா!

ஆனால், வியானின் உணர்வுக்குள் சில்லென்று புதிதாய் ஒரு பெண்ணின் நடம்!

அனுமதியின்றியே, தன் முகவரியை வியானுக்குள் பதிக்க ஆரம்பித்திருந்தாள் அவள்.

## 13

பிறகு வந்த இரண்டு நாட்களும், வழக்கம் போல் எதிரும் புதிருமாய் ஒரு வித இறுக்கத்துடன் சென்றன.

வாக்கிங் செல்லும்போதும், ஏனோ வியானைப் பார்க்கவே முடியவில்லை.

அலுவலகத்திலும், தொட்டாற் சுருங்கியாய் தன்னைச் சுருக்கிக் கொண்டு அவள் அமைதி காக்க, தன்யாவிற்கு ஒரு வேளை அன்று தான் பேசியது அதிகப்படியோவென்றும் தோன்ற ஆரம்பித்தது.

மூன்றாம் நாள், அலுவலகத்துக்கே அவளைத் தேடி வந்த மஞ்சு கூறிய செய்தியால், மற்றதெல்லாம் மறந்து போனது.

மதியம் விடுப்பு வேண்டும் என்று கேட்டு வியாஸிடம் சென்று நிற்க விருப்பமில்லாததோடு, அன்று ரகுவும் விடு முறை என்பதால் தன் வீட்டிற்கு மாலையில் வரும்படி சொல்லியனுப்பினாள் அவள்.

மனம், ஓய்வு நேரத்தில் மஞ்சு கூறியதை அசைபோட ஆரம்பித்தது.

மஞ்சு தன் மாமனாரைப் பற்றிச் சொல்லியவுடன் விகவம் கொதித்துப் போனதாகவும், உடனே "எங்க அப்பாவைப் பத்தி எனக்குத் தெரியும். நீ இவ்வளவு கேவலமானவளா இருப்பேன்னு நான் நினைக்கலை. உனக்கு எங்க வீட்டில இருக்க இஷ்டமில்லைன்னா, உங்கம்மா வீட்டுக்குப் போயிடு. அதுக்காக இப்படி ஒரு அசிங்கமான பொய்யைச் சொல்லணும்னு அவசியமில்லை. எனக்கு அவரை இருபத்தேழு வருஷமாத் தெரியும். இருபது நாள் கூடப் பழகாத உன்னை இந்த விஷயத்துல நான் எப்படி நம்பறது?" என்று கோபமாக கேட்டுவிட்டு ஃபோனை வைத்து விட்டதாகவும் கூறி அவள் அழுதது மனதை மிகவும் பாதித்தது.

"மிஸ் சைதன்யா!"

உச்சஸ்தாயியில் ஒலித்த வியாஸின் குரல் அவளை இந்த உலகிற்கு மீட்டு வந்தது.

"என்ன பகல் கனவு கண்டுட்டு இருக்கீங்களா? ஜெர்மனியிலிருந்து ஃபேக்ஸ் மெஸேஜ் வந்திருக்கு. அது என்னன்னு கவனிங்க! உங்க காதல் கனவெல்லாம்



அப்புறமா வீட்டுக்குப் போய் வச்சிக்கங்க! ஒரு நாள் ரகு வரலைன்னா, அப்படியே ஃப்ரீஸ் ஆகிடுவீங்களா?" நக்கலாக வந்தது அவன் குரல்.

அருகிலிருந்த கேபினிலிருந்த ஞானம் திரும்பிப் பார்க்க, அந்தப் பரிதாபப் பார்வையே தன்யாவிற்குள் கோபம் வரச் செய்வதாய்!

ஆனாலும், "சரி சார்!" என்றபடி ஃபேக்ஸில் வந்திருந்த மெஸேஜைச் சரி பார்த்து எடுத்து வைத்தாள். மனதிற்குள், மௌனக் கோபம் சூறாவளியாய் சுழன்று கொண்டிருந்தது.

அப்போது ஞானத்தின் செல்ஃபோன் ஒலிக்க ஆரம்பிக்க, எடுத்துப் பேசினாள் அவள்.

"அப்படியா? சரி ரகு... நாங்க வந்து பாக்கறோம்" என்றபடி பதட்டத்துடன் லைனைக் கட் செய்தாள்.

"தன்யா! ரகுவுக்கு சின்ன ஆக்ஸிடெண்டாம். ஹாஸ்பிடல்லே அட்மிட் பண்ணி இருக்காங்களாம். சாயந்திரம் டிஸ்சார்ஜ் பண்ணிடுவாங்களாம். நாம போய் பாக்கலாமா?" ஆவலுடன் கேட்டாள்.

"பாவம் ரகு... சாயந்தரம் நாம போய்ப் பாத்துட்டு அப்புறமா வீட்டுக்குப் போகலாம்" என்று கூறிவிட்டு வேலையிலாழ்ந்தாலும், மனம் ஏனோ தகிப்பாய்!

• • •

பிறகு, மாலையானதும் இருவரும் மருத்துவமனைக்குச் சென்று ரகுவைப் பார்த்தபோது, காலில் ஸ்பிரெய்ன் ஆகி இருப்பதால் கட்டுப் போட்டு வீட்டிற்குக் கிளம்பத் தயாராகிக் கொண்டிருந்தான் அவன்.

"என்ன ரகு... ரோட்டுல போகும்போது யாராவது அழகாப் போனாங்களா... அங்கே பாத்துட்டே வண்டியப் பள்ளத்துல விட்டுட்டியா?" கிண்டல் செய்தாள், தன்யா.

"சொல்லுவே! கார் ஒண்ணு ரொம்ப க்ளோசா வந்துதேன்னு லெப்ட்டுல போனேன். பள்ளம் இருந்தது தெரியலை, ரொம்பத் தண்ணி! ம்! பேசாம இன்னிக்கு ஆஃபிஸுக்கே வந்திருக்கலாம். ஒரு கல்யாணத்துக்குப் போயிட்டு லேட்டாயிடுச்சின்னு லீவு போட்டேன். போரடிக்கதுன்னு ஃப்ரெண்ட் வீட்டுக்கு போனேன். என்ன... வியாஸ் ஏதாவது திட்டினாரா? டல்லா இருக்கே?" என்றான் தன்யாவிடம்.

"ம்... அவர் என்னிக்காவது திட்டாம இருந்தாத்தான் ஆச்சர்யம்! சரி... இப்ப எப்படிக் கிளம்புவே?"

"என் ஃப்ரெண்ட் வரேன்னுருக்கான். அதான் வெயிட் பண்றேன்" என்றான்.

"நண்பா! என்னை நம்பி வருவியா? பள்ளம் மேடெல்லாம் பாத்து, நானே உன்னைக் கீழே விழாம பத்திரமா உன் ரூமிலக் கொண்டு போய் சேத்துடறேன். உனக்குப் பயமில்லையே?" கேலியாகக் கேட்டாள் தன்யா!

"ஹூம்... புலியை முறத்தால் விரட்டின தமிழச்சி மாதிரி, திருடனை உருட்டுக் கட்டையால அடிச்ச வீராங்கனையோட இல்லை போகப் போறேன். எனக்கென்னம்மா பயம்!" என்றபடிப் பின்புறம் ஏறிக் கொண்டான் அவன்.

பிறகு, இருவரும் கிளம்பிச் செல்ல, அப்போதுதான் வேலையை முடித்துவிட்டுக் காரில் வந்து கொண்டிருந்த



வியாஸின் பார்வையில் சிக்கலுக்காகக் காத்திருந்த இருவரும் பட்டனர்.

மனதில் சுள்ளென்று மூண்ட கோபம் அலையாய் உடலெங்கும் பரவ, ஏனென்று புரியாமலேயே தவித்துப் போனான் அவன்.

சில நாட்களாய் ரகுவையும் தன்யாவையும் இணைத்தே கற்பனை செய்ய ஆரம்பித்திருந்த மனது, இன்று உண்மை தெரியாமல் உலைக்களமாய் எரிந்தது.

ரகுவை வீட்டில் விட்டுவிட்டு, டிபன் வாங்கிக் கொடுத்த பிறகு தன்யா கிளம்பியபோது நேரமாகி இருந்தது.

உடனே வீட்டிற்குப் போன் செய்து, பதட்டத்துடன் எடுத்த தேவகியிடம் விபரம் கூறினாள்.

பிறகு வீட்டிற்கு வந்தபோது, பக்கத்து வீட்டின் மாடி அறையிலிருந்து ஜன்னல் வழியே வியாஸ் அவளையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

தன் வீட்டில் கூட சுதந்திரமாக இருக்க முடியாதபடி அவனுடைய கண்காணிப்பு பெரும் சலிப்பைத் தந்தது.

குளித்து சாப்பிட்டுவிட்டுத் தன் அறைக்குள் சென்று "மனசே ரிலாக்ஸ் ப்ளீஸ்" என்ற புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினாள்.

மெல்ல மெல்ல மனம் அதில் ஆழ்ந்து போக, அமைதியும் புத்துணர்ச்சியும் மெதுவாய் கைவசப்பட்டன.

சில்லென்று ஜன்னல் வழியே வீசிய ஈரக் காற்று, மழை வருவதைக் கட்டியம் கூறி அறிவித்தது.

அப்படியே உறங்கிப் போனவளை, கனவுகளில் கூட விடாமல் துரத்தித் தன் முத்திரையை அவள் கன்னங்களில் பதித்தான் வியான்.

சட்டென்று ஒரு சிலிர்ப்புடன் எழுந்து அமர்ந்தபோது தான், அது கனவென்று புரிந்தது.

"கனவில்தானே அவன் முத்தமிட்டான்... ஏன் என் உடல் நிஜமாய் இப்படிச் சிலிர்க்கிறது" என்ற கேள்வி பூஞ் சிறகாய் இதயத்தை வருட அதற்குக் கிடைத்த பதில் தான் புதிராய்!

எழுந்து பார்த்தபோது விடிய ஆரம்பித்திருந்தது...!

மழை நின்ற பிறகும் விடாமல் பூமிக்குக் குடை பிடித்துக் கொண்டிருந்தன, நாய்க்குடைகள்!

இன்னும் சிறிது நேரத்தில் வாக்கிங் செல்வதற்காக அப்பா எழுப்ப வந்து விடுவாரென்பது புரிய, உடனே மஞ்சுவின் நினைவு வந்தது.

நேற்று மாலை, அவளை வீட்டிற்கு வரச் சொல்லி யிருந்தது மறந்துபோய், ரகுவைப் பார்த்துவிட்டுத் தான் தாமதமாக வந்ததும், ஞாபக அடுக்குகளில் வலம் வந்தன.

ஃபில்டர் காபியின் மணம் நாசியை நிறைக்க, பல் துலக்கி விட்டு ஸ்நானித்து வெளியே வந்தவன், நேரே கிச்சனுக்குச் சென்றான்.

"அம்மா! நேத்து ஈவினிங் மஞ்சு வந்தாளா?"

தவிப்புடன் கேட்டவனிடம், "இல்லைடா... ஆனா ஃபோன் பண்ணினா... இன்னிக்குக் காலையில வரேன்னா! உன்னால ஆஃபீஸுக்கு லீவு போட முடியுமான்னு கேட்டா! நான்



நேத்து சொல்ல மறந்துட்டேன்" என்றபடி காபி கலந்து கொடுத்தார்.

அன்று ஜாகிங் செல்லும்போது, ஏனோ வியானைப் பார்க்க முடியவில்லை.

ஆனால் அந்தக் குறை தெரியாதபடி, சந்தீப் தயாகரிடம் அவனைப் பற்றிப் புகழ்ந்து கொண்டிருந்தான். கம்ப்யூட்டரில் அவன் ஒரு 'ஜீனியஸ்' என்றான்.

தன்யாவிற்கு தன் மனம் புரிந்தாலும் வியானைப் பற்றி நன்றாக அறிந்திருந்ததால், இது சாத்தியமாகுமா என்ற தவிப்பும் உள்ளூரப் படர்ந்தது.

எதிர்காலமில்லாத இந்தக் காதல் தனக்குள் ஏன் வந்த தென்று, புதிதாய் நேசம் சுமந்த மனது ஆறுதல் தேடி அலையும்போது, அந்தக் காதலே பெரும் நம்பிக்கையைத் தந்தது.

தனக்குள்ளேயே போராடியபடி அவன் வந்து கொண் டிருந்தபோது, அருகில் கேட்ட தயாகரின் குரல் அவனைக் கலைத்தது.

"தன்யா! மஞ்சு விஷயம் என்னாச்சு! நான் வேணும்னா மிஸ்டர் வெற்றிச் செல்வன் கிட்டப் பேசிப் பார்க்கவா? என்ன செய்யலாம்னு ஒரு யோசனை கேக்கலாமே?" என்றார்.

வியானின் நினைவுகள், கலைந்து போகும் மேகமாய் சிதறி ஓடின.

## 14

**நி**னைவுகளிலிருந்து கலைந்து நிமிர்ந்தாள் தன்யா.

"மஞ்சு இன்னிக்குக் காலையில வரேன்னு சொல்லியிருக்காளாம்ப்பா! நான் லீவு போட முடியுமான்னு அவ கேட்டதா அம்மா சொன்னாங்க... பாப்போம்... அவ என்ன சொல்றாளோ? அதுபடி செய்யலாம்" என்றாள் யோசனையுடன்.

ஏழு மணிக்கே வீட்டிற்கு வந்த மஞ்சு, மிகவும் ஓய்ந்து தெரிந்தாள்.

"எனக்கு பயமாயிருக்கு தன்யா! எந்த முடிவும் எடுக்க முடியலை. என் ஹஸ்பெண்டும் இதை நம்பற மாதிரித் தெரியலை. இத்தனை வருஷம் பழகின அவங்கப்பாவை நம்புவாரா... இல்லை என்னை நம்புவாரா? அவரையும் தப்பு சொல்ல முடியலை. வரவர அவரோட டார்ச்சர் அதிகமாயிடுச்சி. நேத்து மாமி எதிர் வீட்டுக்குப் போயிருந்தாங்க... அதுக்குள்ளே என் ரூமுக்குள்ளே வந்திட்டாரு. பிடிச்சி தள்ளி விட்டுட்டு வந்து வாசல்லே உக்காந்துக்கிட்டேன்... படபடன்னு ஆயிடுச்சி... இனிமேயும் நான் அங்கே இருக்கறது சரின்னு படலை. அதான் கிளம்பி வந்துட்டேன்". அவள் குரலிலேயே ஒரு நடுக்கம் தெரிய சாரலாய் வழிந்த கண்ணீரில், அவள் அனுபவித்த கொடுமைகள் புரிந்தன.



அவளை ஆறுதல் படுத்தி சாப்பிட வைத்தவள், அலுவலகத்திற்குப் போன் செய்தாள்.

"ஹலோ!"

வியாஸின் குரல் கம்பீரத்துடன் இதயத்தைத் தீண்ட, இவ்வளவு சீக்கிரமாக அவன் அலுவலகம் சென்றிருப்பது, பெரும் ஆச்சர்யம் தருவதாய்!

"சார்! நான் தன்யா பேசறேன்! இன்னிக்கு எனக்கு ஒரு அரை நாள் லீவு வேணும்!" மெதுவாகக் கேட்டாள்.

"ஓஹோ! நேத்து ஈவினிங் ரொமான்ஸ் இன்னும் முடியலையா? ராத்திரி கூட லேட்டாதான் வீட்டுக்கு வந்தே போலருக்கு! ரகுவும் இன்னிக்கு லீவு கேட்டிருக்காரு! ஜோடியா எபக்ல ஊர்வலம் போனீங்களே... இன்னிக்கு எங்கே... மகாபலிபுரமா?" வார்த்தைகள் திராவகத்தை வீசின.

சட்டென்று மனதிற்குள் ஒரு வெப்பம் பரவியது.

"சார்! மைண்ட் யுவர் வேர்ட்ஸ்! நீங்க யாரு... என்னைப் பத்தி இப்படியெல்லாம் பேசறதுக்கு! நான் ஏன் நேத்து ரகுவை வண்டியிலே அழைச்சிட்டு வந்தேன்னு உங்களுக்குத் தெரியுமா? தெரியாம ஏதாவது பேசாதீங்க."

உடனே ஃபோனை வைத்துவிட்டுத் திரும்பி வந்தபோது, கண்கள் சிவந்திருக்க, மனதைப் பெரும் சோகம் சூழ்ந்திருந்தது.

* * *

**பி**றகு வைஜெயந்திக்கு ஃபோன் செய்து, தாங்கள் வரப் போகும் விஷயத்தைத் தெரிவித்தபோது, வெற்றிச் செல்வன் அவர்களுக்காகக் காத்திருப்பதாகக் கூறினார்.

அவனிடம் தெரிந்த மாற்றத்தைக் கண்ட மஞ்சு என்னவென்று கேட்டாள்.

அவன் பேசியதைக் கூற மனமின்றி "ஒண்ணுமில்லை... நீ வா! நாம கிளம்பலாம்... நான் லீவு எடுக்கிறதுதான் கொஞ்சம் கஷ்டம்! அப்பாவோட நீ வீட்டுக்குத் திரும்பி வந்துடு. நான் அப்படியே ஆஃபிஸ் போயிட்டு சாயந்திரமா வந்திடறேன்" என்றபடி கிளம்பினாள்.

தயாகரும் உடன்வர வெற்றிச் செல்வனுடைய வீட்டிற்குச் சென்றபோது, வைஜெயந்தியும் அவரும் மூவரையும் அன்புடன் வரவேற்றனர்.

எல்லா விபரங்களையும் அவரிடம் கூறி யோசனை கேட்டபோது, உடனே அந்த ஏரியா காவல் நிலையத்தில், மஞ்சுவை ஒரு கம்ப்ளெயின்ட் கொடுக்கும்படி கூறினார் அவர்.

மற்றதையெல்லாம் தான் பார்த்துக் கொள்வதாக வாக்களித்தவர், உடனே கிளம்பினார்.

"நான் அவசரமா போக வேண்டியிருக்கு. நீங்க இருந்து காபி டிபன் சாப்பிட்டுப் போங்க" என்றவர் தன்யாவிடம் திரும்பினார்.

"என்னம்மா! என் பையனை நல்லா ஆட்டி வைக்கிறே போலிருக்கு... நான் பிஸியா இருக்கறதால என்னால அது முடியலை... ஜெயந்தி சொன்னா! எப்படி இருக்காரு எங்க ஹீரோ?" ஆர்வத்துடன் கேட்டார்.

தயாகரின் பார்வை, தன்யாவைக் கூர்மையுடன் ஊடுருவியது.



"அங்கிள்! ஆன்ட்டி, அவரைப் பாக்கணும் பேசணும்னாங்க... அதனால சின்னதா ஒரு ப்ளான் பண்ணினோம்! ஆனா, இப்ப உங்க பையன் என்னை வறுத்தெடுத்திட்டிருக்காரு. ஒரு அரை நாள் லீவு கூடக் கேக்க முடியலை. இப்ப பாய்லிங் ஸ்டேஜில இருக்காரு. நான் உடனே கிளம்பணும்... வரேன் அங்கிள்!"

"ஆமாம் நீங்க எப்படி வந்தீங்க?" என்றவரிடம், "ஆட்டோதான் அங்கிள்! அதிலேயே போயிடுறோம்" என்றாள்.

"உன் ஆஃபிஸ் வழியாதான் நான் போறேன். நானே உன்னை அங்கே ட்ராப் பண்ணிடறேன்... வா!" என்று அவளைக் காரில் ஏற்றிக் கொண்டார் அவர்.

செல்லும் வழியில் "ஜெயந்தி உன்னைப்பத்தி ரொம்பப் பெருமையா சொன்னா! என் பையனை எங்களோட சேத்து வைக்க நீ ரொம்ப முயற்சி பண்றதா சொன்னதும், எனக்கு ரொம்ப ஆச்சர்யமா இருந்தது. எங்கயிருந்தோ வந்த உனக்குப் புரிஞ்சதுகூட... நாங்க இத்தனை வருஷமா உயிரா வளர்த்த வியாஸுக்குப் புரியலையேன்னு வருத்தமா இருக்கு! அன்பையும் பாசத்தையும் மேடை போட்டுப் பேசி உணர்த்த முடியாது. செயல்களாலே தான் தெரிஞ்சுக்கலாம். அவன் எங்களைப் புரிஞ்சிகிட்டு திரும்பி வருவான்ற நம்பிக்கை முன்னெல்லாம் எனக்கு நிறையவே இருந்தது. இப்பல்லாம் அது குறைஞ்சிட்டே வருது... பாப்போம்! நீயும் ஆன்ட்டியும் சேர்ந்து நடத்துற செஸ் கேம்லே "செக் டு கிங்" எப்போ?" கூர்மையுடன் கேட்டார்.

"நீங்க நினைக்கிற மாதிரி எதுவுமே இல்லை அங்கிள்!

ஆன்ட்டி சந்தோஷமா இருக்கணும்னு நினைச்சேன்! அது உங்க பையன் அவங்களோட சேர்ந்தா தான் நடக்கும் போலிருந்தது. அதனால சின்னதா ஒரு முயற்சி பண்ணினோம்... அவர் உங்க பையனாச்சே... அசரலை!'' குறும்புடன் கூறினாள் தன்யா.

''தேங்க்ஸ்... நீயாவது அவன் என் பையன்னு ஒத்துக் கறியே?''

விரக்தியுடன் அவர் முடிப்பதற்குள், அலுவலகம் வந்து விட்டிருந்தது.

அவரிடம் விடைபெற்று இறங்கியவளை, மூன்றாவது மாடியிலிருந்து இரு விழிகள் கூர்மையுடன் அளவிட்டன... உடனே கோபத்தில் சிவந்தன.

தன் இருக்கைக்குச் சென்று அமர்ந்தவளை, உடனே அழைத்தான் வியான்!

''என்ன? நீயும் ரகுவும் ஏதாவது தப்பு பண்ணி மாட்டிக் கிட்டீங்களா? போலீஸ் காரில வந்து இறங்கினே போலருக்கு!''

இரவு முழுவதும் தவிப்புடன் விழித்திருந்த அவனுடைய உணர்வுகள், வார்த்தைக் கங்குகளாய்!

''சார்... போதும்! ரகுவுக்கு உடம்பு சரியில்லை. அதான் ஆஃபீஸுக்கு வரலை. ஒரு சின்ன ஆக்சிடெண்ட்டுனால ஹாஸ்பிடல்லே அட்மிட் ஆகியிருந்தவரை தான் அவ ரோட வீட்டுல விட்டுட்டு வந்ததாலேதான் நேத்து ரொம்ப லேட்டாயிடுச்சி. நீங்க நம்பினாலும் நம்பலைன்னாலும் அது தான் உண்மை!''

''ஓகே! நம்பறமாதிரிதான் இருக்கு! ஆனா இப்ப மிஸ்டர் வெற்றிச்செல்வன் ஐ.பி.எஸ்.ஸோட வந்து இறங்கினது?''



''அது பர்சனல்! என் செயல்களுக்கெல்லாம் உங்க கிட்ட விளக்கம் குடுக்கணும்கிற அவசியம் எனக்கில்லை சார்! எதுக்கும் ஒரு லிமிட் இருக்கு... அதப் புரிஞ்சி நடந் துக்கங்க''

சீற்றத்துடன் கூறிவிட்டு வெளியில் வந்தபோது, இந்த அளவுக்கு தன் மனதைக் காயப்படுத்துகின்ற ஒருவனையா தான் காதலித்தோம் என்ற ஆயாசம் மனதில் பரவியது.

தொடுவானம் கூடத் தொட்டு விடும் தூரத்தில் இருப்பது போல்... ஆனால் அவன் மனமோ, நீண்ட முடியாத தூரத் தில் ஏகாந்தமாய் தனித்திருப்பது போல் தோன்றியது.

அவனுடைய சந்தேகக் கணைகள், உடம்பில் உறைந்த உயிர்வரை பாய்ந்து, வலிக்கச் செய்தன.

காதல் என்பது கண்ணாடியைப் போல்... நாம் என்ன செய்கிறோமோ, அதைத் தான் தன் இணையும் பிரதி பலிக்கும் என்பது பொய்யோவென்று தோன்ற ஆரம்பித்தது.

தன் ஏக்கங்களையும், தவிப்பையும் அவனிடமும் எதிர் பார்த்திருந்த மனது, தொட்டாற் சுருங்கியாய் சுருங்கி விட ஒரு பெருமூச்சுடன் வேலையிலாழ்ந்தாள் தன்யா!

## 15

அன்று மாலையே, மஞ்சு கொடுத்த கம்ப்ளெயிண்டுடன் பேரில் செக்ஷுவல் ஹாரஸ்மெண்ட் பிரிவில், கண்ணப்பன் உடனே கைது செய்யப்பட்டார்.

மஞ்சு பாதுகாப்பாக வெற்றிச் செல்வன் வீட்டில் தங்க வைக்கப்பட, விஷயமறிந்து உடனே துபாயிலிருந்து கிளம்பி வந்தான் விசுவம்.

மறுநாள் காலையில் வாக்கிங் செல்லும்போதுதான், வெற்றிச் செல்வன் தன் மகளைப் பற்றிக் கூறிய விஷயம் என்னவென்று விசாரித்தார் தயாகர்.

தன்யா எல்லாவற்றையும் விளக்கிக் கூறினாள்.

"நீ இதிலே ஏம்மா தலையிடறே? இது அவங்க குடும்ப விஷயம்! அதுவும் ரொம்ப டெலிகேட்டான ஒரு விஷயம்! சோஷியல் சர்வீஸ் வேற... இது வேற!

"அவங்க அப்பா அம்மாவாலயே அவருடைய மனப் போக்கை மாத்த முடியலைன்றப்போ, நீ முயற்சி செஞ்சா மட்டும் அது நடந்திடவா போகுது... அதுக்காக சொல்றேன்" யோசனையுடன் கூறினார் தயாகர்.

"சரிப்பா" என்றவள் "இன்னிக்கு ஒரு நாள் மட்டும் நீங்களும் அம்மாவும் மஞ்சு வீட்டுக்குப் போய் அவங்கம்மாவுக்குத் துணையா இருக்க முடியுமாப்பா? என்னால லீவு போட முடியாது. அதான்" என்று கேட்க 'சரி' என்றார் அவர்.

அன்றே மாமியாரின் வீட்டிற்குக் கோபத்துடன் வந்தவளை, தயாகரும் மஞ்சுவின் தாய் பரிமளமும், தைரியத்துடன் எதிர்கொண்டனர்.

கோகிலாவும் விசுவும் வாசலிலேயே நின்று சப்தம் போட ஆரம்பிக்க, அவர்களை உள்ளே அழைத்தபோது, இருவரும் வர மறுத்துவிட்டனர்.

"உங்க பொண்ணு எங்க வீட்டுக்கு வந்ததிலிருந்தே, எங்க நிம்மதி போச்சு. என் புருஷன் ரொம்ப நல்லவரு...



அவரைப் பத்தி தப்பு தப்பாச் சொல்லி போலீஸ்ல மாட்ட வச்சி எங்க குடும்ப மானத்தையே இப்போ சந்தி சிரிக்க வச்சிட்டா! அவளை நாங்க சும்மா விட மாட்டோம்" பெருங்குரலெடுத்துக் கத்தினார் கோகிலா.

"எதுவா இருந்தாலும் கோர்ட்டுலப் பாத்துக்கலாம்! இப்ப மரியாதையாப் போயிடுங்க".

கோபத்துடன் கூறிய தயாகரை, இருவரும் முறைத்து விட்டுக் கிளம்பினர்.

அன்று முழுவதும் இதே யோசனையுடனிருந்த தன்யாவோ, வியாஸின் பார்வை தன்னையே ஆராய்ச்சியுடன் தொடர்ந்ததை அறியவில்லை.

* * *

மஞ்சு மிகவும் உடைந்து போயிருந்தாள்.

திருமணம் முடிந்து உடனே பிரிந்து சென்ற கணவனின் நினைவும், தன் வாழ்க்கையில் நடந்த கொடூர சம்பவங்களும் அவளை உருக்குலைத்திருந்தன.

ஒரு பாதுகாப்பிற்காக மஞ்சுவை வைஜெயந்தியின் வீட்டிலேயே தங்க வைத்திருந்தனர். தினமும் சீக்கிரமே கிளம்பிச் சென்று அவளைப் பார்த்துவிட்டு, வீட்டிற்கு வரும் தன்யாவிற்கு, வியாஸின் குற்றம் சாட்டும் பார்வைகளே பரிசாய்!

அந்த வாரம் முழுவதும் ரகுவும் விடுமுறை எடுத்திருந்தான். ஒன்றும் ஒன்றும் மூன்று என்று தப்புக் கணக்குப் போட்டது, அவன் மனது.

இப்போதெல்லாம், இரவு நேரங்கள் உறக்கமின்றி வெறுமையைப் பரிசளிக்க, தான் ஏன் இப்படித் தவிக்கிறோம் என்ற கேள்விக்கு விடைதான் அவனிடம் இல்லை.

அதனால் வேறு அவளிடம் தீக்கங்காய் காய்ந்து கொண்டிருந்தான் வியாஸ்.

அந்த வாரம் முழுவதுமே, ஒரு வித அலைப்புறுதலும், இறுக்கமுமாகவே செல்ல, பொறுமை இழக்க ஆரம்பித்திருந்தாள் தன்யா.

அந்த சனிக்கிழமையன்று, மஞ்சுவிற்கு வக்கீலிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது.

பரிமளம் கொடுத்த கடிதத்தை வெற்றிச்செல்வன் பிரித்துப் பார்த்தபோது, விசுவம் விவாகரத்து நோட்டீஸை அனுப்பியிருந்தான்.

துக்கம் தாளாமல் அழ ஆரம்பித்த மஞ்சுவை சமாதானப் படுத்திய வைஜெயந்தி, உடனே தன்யாவிற்குப் ஃபோன் செய்து விபரம் கூறினார்.

பிறகு பேசிய தயாகர் வெற்றிச்செல்வனை ஆலோசனை கேட்க, நாளை விசுவத்தை வரவழைத்து தானே பேசுவதாகக் கூறினார் அவர்.

அன்று மாலை ஒரு முடிவுடன் விசுவத்திற்கு ஃபோன் செய்த தன்யா, அவனிடம் தனியே பேச வேண்டுமென்றாள்.

முதலில் கோபத்துடன் மறுத்தவன், பிறகு அவள் கூறிய படி மருந்தீஸ்வரர் கோவிலில் காத்திருப்பதாகக் கூறவும், நிம்மதிப் பெருமூச்சு வந்தது.

தானும் மஞ்சுவும், எந்த விஷயமாக இருந்தாலும் அங்கு சென்றே பேசுவதும், நினைவு வர, அவள் வாழ்க்கைக்கும்



ஒரு விடிவுகாலம் வருமென்ற மெலிதான நம்பிக்கை இழை மனதில்!

* * *

**மா**லையில் கிளம்பி கோவிலுக்குச் சென்றபோது, விசுவம் வந்திருக்கவில்லை.

சாமி தரிசனம் முடித்துவிட்டு, எளிதாக வருபவர்களின் பார்வையில் படும்படி, திரிபுரசுந்தரி மண்டபத்தில் அமர்ந்திருந்தாள்.

மனம் எங்கோ செல்ல, வியாஸை அவர்கள் குடும்பத்துடன் இணைத்து வைக்கும் முயற்சியில், அடுத்த அடியைத் தான் இன்னும் எடுத்து வைக்கவில்லை என்ற நினைவும், தயாகரின் சொற்களும் மனதில் வந்தன.

அவனை நினைத்தவுடனே மனதில் காதலெனும் உணர்வு சுகமாய்ப் பரவியது.

இதழ்களில் இதமான புன்னகை ஒன்று வந்து ஒட்டிக் கொண்டது.

வியாஸின் மனதை எப்படி மாற்றப் போகிறோம்... இப்போதெல்லாம் தன்னைக் கண்டாலே இறுகிப் போகிறானே... அவனை வைஜெயந்தியுடன் எப்படி சேர்க்கப் போகிறோம் என்ற பரிதவிப்பு மனதில் மையம் கொள்ள நிமிர்ந்து பார்த்தாள், கோவிலின் ராஜ கோபுர விளக்கு அமைதியாய் ஒளிர்ந்து கொண்டிருக்க மனம் ஏனோ நிர்மலமானது.

ஒரு ஆழ்ந்த பெருமூச்சுடன் திரும்பினாள், விசுவம் வந்து கொண்டிருந்தான்.

மெதுவாக எழுந்து ஒரு புன்னகையுடன் வரவேற்ற போது, அவனிடம் அதன் எதிரொலியே இல்லை.

"என்னவோ பேசணும்னீங்க... என்ன விஷயம் சீக்கிரம் சொல்லுங்க... நான் போகணும்" என்றான் கடுகடுப்புடன்.

"மிஸ்டர் விசுவம்! முதல்லே உக்காருங்க! மஞ்சு உங்க நினைப்பாவே இருக்கா... பாவம் அவ..." முடிப்பதற்குள் சட்டென்று இடை மறித்தது அவன் குரல்.

"நீங்க சொல்ற மாதிரி என் மேல அன்பிருந்தா அவ போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயிருக்கமாட்டா... எல்லாம் வேஷம்!" பொருமினான்.

"ப்ளீஸ்! நான் சொல்றதக் கொஞ்சம் பொறுமையாக் கேளுங்க. அவ உங்களை உயிரா விரும்பறா... ஆனா அதுக்காகத் தன்னோட மானத்தை, கற்பை விட்டுத் தர முடியுமா? எந்தப் பொண்ணா இருந்தாலும், அவ நல்லவளா இதைத்தான் செஞ்சிருப்பா! உங்கப்பா அப்பான்னு உருகுறீங்களே... அந்தப் பாவப்பட்ட பொண்ணுக்காக ஏன் நீங்க ஒரு நிமிஷம் கூட யோசிக்க மாட்டேங்கிறீங்க? இந்த மாதிரி விஷயத்துல எந்தப் பொண்ணாவது பொய் சொல்வாளா? அதுவும் மஞ்சு மாதிரி மென்மையான ஒருத்தி! பாவம்... அவளா இருந்ததுனால இப்படி செஞ்சா! நானா இருந்தேன்னா உங்கப்பாவுக்கு நானே தண்டனை கொடுத்திருப்பேன்... போலீஸுக்குப் போயிருக்கமாட்டேன்!" அடிக்குரலில் சீறினாள்.

"ஓ! எங்க குடும்பத்தை அவமானப்படுத்தணும்னே என்னை வரச் சொன்னீங்களா? நீங்களும் அந்தப் போலீஸ் ஆபீசரும் குடுக்கற தைரியம்தானே அவளுக்கு பாக்க



றேன்... எத்தனை நாள் நீங்கல்லாம் சப்போர்ட் பண்றீங்கன்னு! அவ அம்மாவும் இவ மாதிரியே ஒழுக்கம் கெட்டவதான் போலருக்கு. தராதரம் தெரியாத குடும்பத்துல பொண்ணெடுத்துட்டேன்" உரக்கக் கத்தினான்.

"மிஸ்டர் விசுவம்! இது கோவில்! நான் சமாதானம் பேசத்தான் இங்கே வந்தேனே தவிர சண்டை போட இல்லை. நியாயம் தெரிஞ்ச மனுஷரா உங்களை எதிர்பார்த்தேன். மனுஷத் தன்மையே இல்லாதப்போ அதெல்லாம் எங்கே! ஊஹும்! நான் வரேன்... வந்ததுக்கு தேங்க்ஸ்!"

வேகமாக அவள் நடக்கத் துவங்க, கேவலமான வார்த்தைகளுடன் விசுவம் பின் தொடர்ந்தான்.

வாசலில் நிறுத்தி வைத்திருந்த ஹோண்டாவை ஸ்டார்ட் செய்து அவள் கிளம்ப, விசுவம் அவளைத் தடுக்க முயற்சித்தும் பயனின்றிப் போனது.

இந்தக் காட்சியை அப்போதுதான் கோவில் வாசலைக் கடந்த காரிலிருந்து, இரு விழிகள் ரௌத்ரமாய் முறைத்தன.

தன்னை யாரோ உற்றுப் பார்ப்பதை உணர்ந்து நிமிர்ந்த தன்யாவும், அதை கவனித்து விட்டாள்.

வீட்டிற்குச் சென்றபோது ஆவலுடன் அவளையே நோக்கிய மஞ்சுவை நினைத்தால் பரிதாபமாய்!

சுருக்கமாகக் கோவிலில் நடந்ததைப் பற்றிக் கூறிவிட்டு உள்ளே சென்றாள்; தலை விண்ணென்று தெறித்தது.

ஏனோ, மீண்டும் மீண்டும் காரிலிருந்து அவளை நோக்கிய வியாஸின் கோபப் பார்வையே மனதில் நீங்காமல் மையம் கொண்டது.

இதற்கு என்ன சொல்லப் போகின்றானோவென்று தோன்றும்போதே, இந்த நிலையிலும் அவனுடைய அன்பை யாசகம் பெற, உணர்வுப் பிழம்பாய் தான் உருகி நிற்பது ஏனென்றுதான் புரியவில்லை.

வெந்நீரில் குளித்துவிட்டு வந்தபோது, மஞ்சு அவளிடம் ஒரு கோரிக்கை வைத்தான்.

"தன்யா! நான் நாளைக்கு எங்கம்மா வீட்டுக்குப் போறேன். என்னோட சர்டிபிகேட்ஸ் எல்லாம் தரேன். பி.எஸ்.சி. கம்ப்யூட்டர் சயின்சுக்கு ஏதாவது வேலை கிடைக்குமா? உன்னால முடிஞ்சா ஏற்பாடு பண்ண முடியுமா?" சோர்வுடன் கேட்டான்.

வாழ்க்கையில், அனுபவங்கள் கொடுத்த அடி அவனை ஒடித்துப் போட்டிருப்பதும், ஆனால் அதிலிருந்து அவன் மீண்டு வர முயற்சிப்பதும் புரிந்தது.

"ரொம்ப சந்தோஷம் மஞ்சு... நானே உன்கிட்ட இதைப் பத்தி பேசலாம்னு இருந்தேன். உனக்குன்னு ஒரு வேலை, நம்ம கால்ல நிக்கிறோம்கிற ஒரு தன்னம்பிக்கை வந்துட்டா, எதையுமே தைரியமா எதிர்நோக்குற மனோபாவம், தைரியம் எல்லாம் தானா வந்துடும். உன் ரெசியூமைக் குடு... எங்க ஆஃபீஸிலேயே வேகன்ஸி வந்தா சொல்றேன்."

"தேங்க்யூ தன்யா! உன்னைப் பாத்து எப்பவுமே நான் ரொம்ப ஆச்சரியப்படுவேன். எவ்வளவு துணிச்சலா, போல்டா இருக்கேன்னு ஒரு பிரமிப்பு வரும். என்னால அப்படி மாற முடியுமான்னு தெரியலை. ஆனா... இப்பல்லாம் ப்ரச்சனையை எதிர்கொள்ற அளவுக்கு அதைப்பத்தி தெளிவா முடிவெடுக்கற ஒரு வித நம்பிக்கை வந்திருக்கு!" வறண்ட முறுவலுடன் கூறினான்.



வெளியில் எவ்வளவுதான் தைரியமாகப் பேசினாலும், அவளுக்குள்ளே சிறு சோகம் இழையோடுவது புரிந்தது.

நிலவு காட்டிச் சோறூட்டிய அம்மாவுடன் இணைந்து, நீ ஒரு நாள் அந்த நிலவிலும் பாதம் பதிப்பாய் என்று கூறி, தன்னம்பிக்கையையும் சேர்த்து ஊட்டிய தன் தந்தையின் நினைவால், தன்யாவின் கண்கள் பனித்தன.

## 16



நாட்கள் நீரோடையாய் விரைந்து செல்ல, மஞ்சுவிற்குத் தைரியம் கூறி தன்யாவும், தயாகரும், அவனை அம்மா வீட்டிற்கு அழைத்துப் போய் விட்டிருந்தனர்.

வைஜெயந்தியிடமும், வெற்றிச் செல்வனிடமும் சென்று மூவரும் நன்றி கூறிவிட்டு வந்தனர்.

தன் அலுவலகத்திலேயே மஞ்சுவிற்கு ஒரு வேலையும் ஏற்பாடு செய்திருந்தாள் தன்யா.

கோர்ட்டில் கேஸ் நடந்து கொண்டிருந்தது.

ஒரு வருடம் கழித்துத் தான் விவாகரத்து கிடைக்குமென்று வக்கீல் கூறியிருந்தார்.

மஞ்சுவிற்கு அலுவலகமும், அதன் செயல்பாடுகளும் நன்றாகப் புரிய ஆரம்பித்திருக்க, ஒரு விஷயம் மட்டுமே முரண்படுவதாய்!

தன்யாவும் வியானும், எதிரும் புதிருமாய் நிற்பது தான் ஏனென்று அவளுக்குப் புரியவில்லை.

தன்யா இங்கு வேலைக்கு சேர்ந்த புதிதில், வியானைப் பத்திப் பேசும்போதெல்லாம் அவளின் முகம் மலர்ந்து விகசிப்பதையும் அதில் சிறு நாணம் தோன்றி மறைவதையும் அவள் பார்த்திருக்கிறாள்.

அது எப்போது வெறுப்பாய் மாறியது என்ற புதிருக்கான விடையைத்தான் மஞ்சுவால் அறிய முடியவில்லை.

தன் கவலையிலேயே உழன்று கொண்டிருந்ததால், தன்யாவைப்பற்றி யோசிக்கவே நேரமின்றிப் போனதை எண்ணி குற்ற உணர்வு மனதை உலுக்கியது.

அன்று மாலை அவளிடம் இதுபற்றிப் பேச வேண்டுமென்று முடிவு செய்து கொண்டாள் மஞ்சு.

அன்று சீக்கிரமே வேலையை முடித்துவிட்டு இருவரும் கிளம்பியபோது, "தன்யா! கோவிலுக்கு போகலாமா நான் உன் கூடக் கொஞ்சம் தனியாப் பேசணும்" யோசனையுடன் கேட்ட மஞ்சுவையே ஒரு கணம் புரியாமல் பார்த்தாள் தன்யா!

பிறகு, "என்ன மஞ்சு! விகவத்தாலே மறுபடியும் ஏதும் பிரச்னையா?" இரு புருவங்களும் நெரிய அவள் கேட்டாள்.

"இல்லை! இது வேற விஷயம்... ப்ளீஸ் மாட்டேன்னு சொல்லாம வாயேன்" என்றாள் மஞ்சு.

இருவரும் கிளம்பிச் சென்று, கோவிலுக்குள் நுழைந்து மௌனக் கோரிக்கையுடன், மரகதமும் ஈஸ்வரனைத் தரிசித்துவிட்டுப் பிரகாரத்தில் அமர்ந்தபோதும், தன்யா மௌனமாகவே இருந்தாள்.



சமீப காலமாகவே அவள் ஏனோ அமைதியாகவே இருப்பதுபோல் தோன்றியது, மஞ்சுவிற்கு!

தன்யாவும் யோசனையிலிருந்து கலைந்து நிமிர்ந்தாள்.

அருகிலிருந்த வன்னிமரத்தில் கீச் கீச் என்று கத்தியபடி தன் கூட்டைத் தேடி ஓடிக் கொண்டிருக்கும் ஒற்றை அணிலைக் கண்டவுடன், மனதில் பெரும் ஏக்கம் வந்தது.

ஒரு பெருமூச்சுடன் மஞ்சுவிடம் திரும்பினாள், "என்னாச்சி தன்யா? சோகமாய் பெருமூச்சு விடற அளவுக்கு, இப்ப புதுசா என்ன ப்ராப்ளம்?" என்றாள் அவள்.

"ஹீம்! அந்த அணிலைப் பாத்தா பொறாமையா இருக்கு மஞ்சு! அதுக்கு எந்த சமுதாய நிர்ப்பந்தங்களும் இல்லை பாரேன்! யாரும் அதைக் கல்யாணமாயிடுச்சான்னு கேக்கறதில்லை. வரதட்சணை தந்தா தான் ஏத்துப்பேன்னு சொல்றதில்லை. காதல் செஞ்சிட்டியோன்னு ஒதுக்கறதில்லை... நாளைக்கு வேணுமேன்னு சேமிச்சி வைக்கிற கட்டாயம் கூட இல்லை. எவ்வளவு சுதந்தரமான லைஃப்! அந்தச் சின்ன அணிலுக்கு இருக்கற சுதந்திரம் கூட நமக்கு இல்லையேன்னு நினைச்சிப் பாத்தேன்... ரொம்ப ஏக்கமா இருந்தது" என்றாள் தூரப் பார்வை பார்த்தபடி.

உடனே, மஞ்சுவும், "ஆமாம்... அதுக்கு விவாகரத்து தோட்டங்கூட யாரும் அனுப்பறதில்லை" என்றாள் இதழோரம் ஜனித்த விரக்திப் புன்னகையுடன்!

அவளுடைய பதில் தன்யாவின் மனதில் சுரீரென்று தைத்தது.

''சரி அதை விடு தன்யா! உன் பெருமூச்சுக்கு அந்த அனிலா காரணம்? நான் வியாஸ்ன்னு இல்லை நினைச்சேன்?'' சிறு கேலி தெரிந்தது அவள் குரலில்!

திடுக்கிட்டு நிமிர்ந்த தன்யாவின் விழிகளில் ஆராய்ச்சியும் கூர்மையும்!

''என்ன சொல்றே மஞ்சு?''

''தன்யா! எனக்கும் மனுஷங்களைப் புரிஞ்சிக்கற சக்தி உண்டு! நீ முதன் முதலா வேலைக்கு சேர்ந்தப்போ, வியாஸைப் பத்தி என்கிட்ட பேசினப்பவே நீ அவரை விரும்பறேங்கிறதை நான் புரிஞ்சிக்கிட்டேன். காதலிக்கறதை முகமே காட்டிக் குடுத்துடும். உன் முகத்தில் தெரிஞ்ச வித்தியாசமான உணர்ச்சிகள் எல்லாத்தையும் தெளிவா உணர வச்சிது. ஆனா, அப்பறம் என் சொந்தக் கவலைகள் பிரச்னைகள் இதுனால அதப்பத்தி நான் சுத்தமா மறந்துட்டேன். என்கிட்ட சொல்ல மாட்டியா? ஏன் இப்ப ரெண்டு பேரும் எலியும் பூனையுமா இருக்கீங்க?'' மெதுவாகக் கேட்டாள்.

சிறிது நேரம் கழித்துப் பேச ஆரம்பித்தாள் தன்யா.

ஆரம்பத்திலிருந்தே அவனுக்கும் தனக்குமிடையே நடக்கிற பனிப்போரைப் பற்றியும், ரகுவிடம் தான் நட்பாய்ப் பழகுவதை அவன் தவறாகப் புரிந்து கொண்டதையும், அவனுடைய குடும்பத்துடன் சேர்த்து வைக்கும் முயற்சியில் ஈடுபட்டு அதிலும் வெறுப்பை சம்பாதித்ததையும், இப்போது விஸ்வத்திடம் கோவிலில் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்ததிலிருந்து, தன்னை அவன் கேவலமாக நினைப்பதையும் கூறினாள்.



அவள் கூறி முடிக்கும் போதே, கோவில் மணி ஓம்காரமாய் ஒலித்து அதை ஆமோதிக்க, மஞ்சுவின் முகம் பலத்த சிந்தனையில்!

''நீ போய் அவர்கிட்ட இதையெல்லாம் சொல்ல வேண்டியதுதானே? உன்னை எது தடுக்குது? ஈகோவா?''

''என்ன பேசறே மஞ்சு! ஒருத்தருக்கொருத்தர் உயிரா காதலிச்சுட்டு அப்புறம் இப்படி நடந்திருந்தா நம்ம ஈகோவை எல்லாம் விட்டுட்டுப் போய்ப் பேசலாம்... புரியவைக்கலாம். அவர் என்னை நேசிக்கிறாரான்னே தெரியாது... இது ஒரு தலைக்காதல்! நான் மட்டும் விரும்பிட்டு, அவர் தப்பா நினைக்கிறாருங்கறதுக்காக என் கௌரவத்தை விட்டுட்டு அவர்கிட்ட போய் தன்னிலை விளக்கம் தந்து, காதலைப் பிச்சையா யாசகம் கேட்க என்னால முடியாது'' தன்யா தீர்மானமாகக் கூறினாள்.

''அவர் உன்னை விரும்பலைன்னு உனக்கு எப்படித் தெரியும்? ஒருத்தரை விரும்பலைன்னா அவங்க மேல ஏன் கோபம் வரணும்... அவங்க இன்னொருத்தர்கிட்டப் பழகினா, ஏன் பொறாமைப் படணும்... உரிமை இல்லாத இடத்தில் அந்தக் கோபம் வர நியாயமே இல்லையே? பொறாமை இல்லாத காதல், பூக்கள் இல்லாத தோட்டம் மாதிரி...

''வியாஸும் உன்னை விரும்பறாருன்னுதான் நான் நினைக்கிறேன்... அதுவும் ரொம்பப் பொஸஸிவ்நெஸ்ஸோட வெறியா காதலிக்கிறவங்களுக்குத்தான் அவ தனக்கு மட்டுமே சொந்தம்... மத்த ஆண்கள் கூடப் பேசக் கூடாதுங்கற கோபம் வரும்... அதனால தான் உன்னை

யார்கூடப் பாத்தாலும் அவரால பொறுக்க முடியலைன்னு எனக்குத் தோணுது!'' கூறிவிட்டு மஞ்சு எழுந்தாள்.

தன்யாவிடம் ''என்ன கிளம்பலாமா? நாளைக்கு ஆஃபீசில் பார்க்கலாம்... இல்லை, வீட்டுக்கு வந்துட்டுப் போறியா?'' ஆவலுடன் கேட்டாள்.

தன்யாவிற்கு நிறைய யோசிக்க வேண்டி இருந்தது.

''இல்லை மஞ்சு! நான் கிளம்பறேன்!'' என்றாள்.

வீட்டிற்குச் சென்ற பிறகும், மஞ்சுவின் பேச்சும் வியானின் கோபப் பார்வைகளும் மனதில் ஊடுருவின.

மலரின் மேல் ஜனித்த பனித் துளியாய், அவள் மனதிற்குள் அவன் தன்னை விரும்புகிறானோ என்று சிறு நம்பிக்கைத் துளி ஜனிக்க ஆரம்பித்தது.

அன்றிரவு உறக்கம் அவளை விட்டு நீங்கிவிட, ஒவ்வொரு முறையும் நெருப்பாய்த் தகித்த நெஞ்சத்தை அவன் நினைவுகள் அக்னித் தூசாய் உடைத்தெடுத்தன. அந்த வெம்மையின் தகிப்பில் அப்படியே உறங்கிப் போனாள், தன்யா.

மறுநாள் காலையில் எழுந்து ஜன்னலருகில் சென்று பார்த்தபோது வித்தியாசமாகத் தெரிந்தது, அன்றைய விடியல்!

விடியல்தான் எத்தனை அற்புதமென்று தோன்றியது.

சூரியனைப் பிரசவித்து... குயில்களை இசைக்கச் செய்து... மலர்களை மலரச் செய்து... மனிதனை உறக்கத்தின் பிடியிலிருந்து உசுப்பிவிட்டு!

இயற்கைதான் எத்தனை அழகென்று ஒரு வித பிரமிப்பு வருவதாய்!



அன்று வாக்கிங் செல்லும்போது தயாகர் அவளுடைய திருமணம் பற்றிய பேச்சை ஆரம்பித்தார்.

''தன்யா! உனக்கு நம்ம சொந்தத்துலயே நிறைய வரன் வந்தது. அப்போ எல்லாம் படிப்பு முடிச்சு வேலை பாக்கணும்னு சொன்னே... இப்ப ஓகே தானே! வெளிநாட்டு வரனெல்லாம் வேண்டாம்னு நானே சொல்லிட்டேன். அடிக்கடி உன்னைப் பாக்காம எங்களாலே இருக்க முடியாது. என்ன பதிலே காணோம்?''

''ம்... கொஞ்ச நாள் போகட்டும்ப்பா'' என்றவளின் நினைவுகள் வியானிடம் உடனே சென்றன.

நீங்காத அவன் நினைவுகள், நெஞ்சத்திற்குள் குளமாய்த் தேங்கியிருந்தன.

உடனே சந்தீப்பிடம் திரும்பியவள் ''ஏன் இப்பல்லாம் விவேக் நம்ம வீட்டுக்கே வரதில்லை?'' ஆர்வத்துடன் கேட்டாள்.

''அவன் இப்பெல்லாம் ஒழுங்கா காலேஜுக்கே வரதில்லை. வேற குரூப்போட சேர்ந்து கொஞ்ச நாளா சுத்திக்கிட்டிருக்கான் தன்யா!'' கவலையாகக் கூறினான்.

அவளுக்கு இதைப் பற்றி வைஜெயந்தியிடம் கட்டாயம் பேச வேண்டுமென்று தோன்றியது.

அன்று மாலை அலுவலகத்தில் இருந்த போது, சந்தீப்பிடமிருந்து ஃபோன் வந்தது.

''தன்யா! நீ உடனே வரமுடியுமா? முக்கியமான விஷயம்'' என்றான் அவசரமாக.

''ஏன்டா! என்னவோ போலப் பேசறே... என்னாச்சி?'' பதறிப் போய் கேட்டாள்.

"விவேக்கைப் பத்தி நீ இன்னைக்குத் தானே கேட்டே... அவன் ஒரு பெரிய பிரச்னையில் மாட்டிட்டிருக்கான்... நீ உடனே வாஹும்! அவன் மயக்கமா இருக்கான். நாலு பேர் சேர்ந்து அடிச்சிட்டு இருந்தாங்க! நான் தான் அவங்களை விரட்டியடிச்சிருக்கேன்! வரியா?" என்றான்.

"நான் உடனே வரேன். நீ இப்ப எங்கே இருக்கே?"

விபரமறிந்து கொண்டு வேகமாகக் கிளம்பியவளுக்கு, வியாவிடம் சென்று விளக்கிக் கொண்டிருக்க நேரமில்லை.

மஞ்சுவிடம் மட்டும் கூறிவிட்டுக் கிளம்பினாள்.

பதட்டத்துடன் சந்தீப் கூறிய இடத்திற்குச் சென்றபோது, கல்லூரியின் அருகிலிருந்த அந்தப் பார்க்கில் அடிபட்டு முனகியபடி நினைவின்றிக் கிடந்தான் விவேக்.

மனம் பதறிப் போய்விட, அவன் இருந்த நிலைமையைக் கண்ட போது, வைஜெயந்தியும், வெற்றிச்செல்வனும், மிகவும் பாதிக்கப்படுவார்களென்று தோன்றி, மனம் இறுகிப் போனது.

## 17

உடனே ஒரு கால் டாக்சியை வரவழைத்து, அவனைத் தன் அப்பாவின் நண்பருடைய மருத்துவமனைக்கு எடுத்துச்



சென்று அனுமதித்த பிறகே தெரிந்தது. விவேக் போதை மருந்துப் பழக்கத்திற்கு அடிமையாகி இருந்த விஷயம்!

சந்தீப் தயங்கியபடி "தன்யா! நான் சொன்னேன் இல்லை.. அந்த குருப்பில் எல்லாருமே ஒரு மாதிரி! ஆனா ட்ரக் அடிக்ட்ஸ்னு எனக்கு இன்னைக்குத் தான் தெரியும்... அதிலே நடந்த சண்டையிலதான் இவனை இப்படி அடிச்சிப் போட்டுருக்காங்கன்னு நினைக்கிறேன். நாம உடனே இவங்கப்பா அம்மாவுக்கு ஃபோன் பண்ணிச் சொல்லிடுவோமா?" என்றான் பயத்துடன்.

"சரி நீ இங்கேயே இரு! நான் போய் சொல்லிட்டு வரேன்" என்றவள் வெளியில் வந்து வெற்றிச் செல்வனின் செல்லுக்குத் தொடர்பு கொண்ட போது, மனம் கனத்திருந்தது.

"அங்கிள்! நீங்க உடனே நான் சொல்ற இடத்துக்கு வர முடியுமா? இங்கே ஒரு சின்ன ப்ரச்னை!"

"சாரிம்மா! நான் இப்ப ஒரு முக்கியமான விஷயமா டெல்லிக்கு வந்திருக்கேன். உடனே வர முடியாது. மூணு நாள் கழிச்சிதான் வர முடியும். என்னாச்சி?"

"இல்லை அங்கிள்! விவேக்குக்கு சின்ன ஆக்சிடென்ட்... எங்க ஃபேமிலி டாக்டர் கிட்ட அழைச்சி வந்து அட்மிட் பண்ணியிருக்கோம். சரி... நாங்க பாத்துக்கறோம் அங்கிள்! நீங்க மெதுவா வாங்க..." என்பதற்குள் அவர் குரல் பதட்டத்துடன் இடைமிட்டது.

"எப்படி... பைக்ல போறப்பவா? ரொம்ப சீரியஸா... ஜெயந்திக்குத் தெரியுமா?"

"ம்... ஆன்ட்டிக்குத் தெரியாது அங்கிள். இது அந்த மாதிரி ஆக்ஸிடெண்ட் இல்லை. யாரோ அவனை அடிச்சிப்

போட்டிருக்காங்க... அப்புறம் அவன் ட்ரக் யூஸ் பண்றான்னு நினைக்கிறேன். இங்கே முதல்லே ட்ரீட்மெண்ட் முடிஞ்சு, ஏதாவது ஒரு 'டீ அடிக்ஷன் சென்டர்'ல சேர்த்து குணப்படுத்திடலாம். கவலைப்படாதீங்க.''

''ஓ காட்! என் பையன் ஒரு ட்ரக் அடிக்ட்டா! ஆண்ட்டி கேட்டாச் செத்துடுவாம்மா! நான் உடனே கிளம்பி வரேன், நீ அவனைப் பத்திரமாப் பாத்துக்கிறியா?''

அவரின் குரல் தழுதழுப்புடன் வந்தது.

''கவலைப்படாதீங்க அங்கிள்! இது தான் ஆரம்ப ஸ்டேஜா இருக்கும்னு சந்தீப் சொல்றான். விவேக் அந்த குரூப் போட சேர்ந்து கொஞ்ச நாள் தான் ஆச்சாம். சந்தீப்புக்கு எல்லாம் டைம்! இங்கே அப்பாவைத் துணைக்கு இருக்கச் சொல்றேன். ஆண்ட்டி கிட்டச் சொல்லவா அங்கிள்?''

''வேண்டாம்மா! நானே சொல்லிக்கறேன். அடுத்த ப்ளைட்டைப் புடிச்சி நைட் அங்கே வந்துடறேன். அது வரைக்கும் பாத்துக்கங்க'' என்று கூறிவிட்டு உடனே வைத்துவிட்டார்.

உள்ளே சென்று விவேக்கைப் பார்த்த போது பரிதாபமாக இருந்தது.

உடனே தயாகருக்கு விபரம் கூறியதில் அவரும் வந்து விட, பொழுது நத்தையாய் நகர்ந்து சென்றது.

◆ ◆ ◆

இரவு பத்து மணிக்கு வந்து சேர்ந்த வெற்றிச் செல்வன் மிகவும் களைத்துத் தெரிந்தார்.

மகனைப் பார்த்தவுடன் விழிகளில் ஈரம் படர ஓய்ந்து போய் நின்றவரை, தயாகர்தான் ஆறுதல் படுத்தினார்.



தூக்க மருந்தின் பாதிப்பால் விவேக் உறங்கிக் கொண்டிருந்தான்.

தன்யாவிடம் திரும்பியவர் ''நீ கிளம்பும்மா... நான் உங்களை வீட்டில் விடச் சொல்றேன்'' கம்மிய குரலில் கூறினார்.

''அங்கிள்! இன்னிக்கு அப்பாவும் உங்களோட இங்கே இருக்கட்டும். உங்களுக்கு ஒரு துணையா இருக்கும். நான் வேணா ஆண்ட்டி கூடத் தங்கிடவா?'' அவள் வெற்றிச் செல்வனிடம் கேட்டாள்.

''இல்லம்மா! நான் பாத்துக்கறேன். நீயும் அப்பாவும் கிளம்புங்க. ஜெயந்தி கிட்டே ஆக்சிடெண்டுன்னு மட்டும் சொல்லியிருக்கேன். அவளுக்கு எங்க அக்கா வந்து துணைக்கு இருப்பாங்க'' என்றார் வறண்ட முறுவலுடன்.

பிறகு தயாகரின் கையைப் பிடித்துக் கொண்டவர் ''தேங்க்யூ தயாகர்! தன்யாவும் சந்தீப்பும் இல்லைன்னா, இன்னிக்கு இவனோட கதி... நான் உங்களுக்கு ரொம்பக் கடன் பட்டிருக்கேன். என்ன சொல்றதுன்னே தெரியலை. கண்டிப்பை மட்டுமே காட்டத் தெரிஞ்ச எனக்கு பசங்க மேல அன்பா இருக்கத் தெரியலையோ? ரெண்டு பசங்களுமே எங்களை விட்டு மனசளவுல ரொம்ப தூரம் விலகிப் போய்... ஏன் இப்படி? எல்லாம் இருந்தும் என்ன... நிம்மதியில்லையே?'' குரலிலேயே, அவர் மிகவும் உடைந்திருப்பது தெரிந்தது.

ஆதரவுடன் அவரை அணைத்துக் கொண்டார் தயாகர்.

''கவலைப்படாதீங்க சார்! விவேக் சரியாயிடுவான். வியாஸும் உங்களைப் புரிஞ்சிகிட்டு வருவாரு பாருங்க...

நீங்க இப்பதான் தைரியமா இருக்கணும். உங்க மிஸஸுக்கும் பக்கபலமா நிக்கணும். நான் காலையில வரேன். டாக்டர் எனக்கு ரொம்ப க்ளோஸ் ஃபிரெண்ட். எந்த விஷயமும் லீக் ஆகாது. அவர் மூலமாகவே ஒரு நல்ல ட்ரீட்மெண்ட் குடுத்து, விவேக்கைச் சரி பண்ணிடலாம்.

அவர் தேறுதல் கூறும் போதே விவேக்கிடம் மெல்லிய அசைவு தெரிந்தது.

''அம்மா... அம்மா!''

மெல்ல முணுமுணுத்தபடி ஒரு அலைப்புறுதலுடன் புரள ஆரம்பித்தவனிடம், உடனே சென்று அமர்ந்த வெற்றிச் செல்வன், ஆதரவாய் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டார்.

அவர் விழிகள் கண்ணீரைச் சுமந்திருந்தன.

சிறிது நேரம் கழித்து, அவருடைய காரில் தயாகரும் தன்யாவும் கிளம்பிச் சென்ற போது, அவர் மனமே பெரும் வெறுமையாய்!

அந்த நிமிடம், வியாஸும் விவேக்கும் தங்களை விட்டு வெகு தூரம் விலகிச் சென்று விட்டதைப் போல் ஒரு உணர்வு இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது.

மெதுவாக அவன் முடியைக் கோதிய போது, ''ஹூம்... வேண்டாம்! என்னை விட்டுடுங்க'' காய்ச்சலின் வேகத்தில் விவேக் அரற்ற ஆரம்பித்தான்.

அப்படியே அவனை அள்ளி அணைத்து ஆறுதல் படுத்த வேண்டும் போல் எழுந்த உணர்வை அடக்கிக் கொண்டவர், அலையெனப் புரண்ட துயரங்களையும் தனக்குள்ளே புதைத்துக் கொண்டார்.



மனம் இரும்புக் குண்டை வைத்தாற் போல் கனத்தது.

அப்போது செல் ஒலிக்க எடுத்தால், வைஜெயந்திதான் பேசினார்.

''விவேக் இப்ப எப்படி இருக்கான்? நான் எப்போ வந்து அவனைப் பாக்கறது?'' பரிதவிப்புடன் வந்தது அவர் குரல்.

''அவனுக்கு ஒண்ணுமில்லை ஜெயந்தி... நல்லாருக்கான்! இப்ப தூக்கத்துக்கு இன்ஜெக்ஷன் போட்டிருக்காங்க. நாளைக்குப் பாக்கலாம். நீ நிம்மதியாத் தூங்கு!'' என்றபடி லைனைக் கட் செய்தார்.

உறக்கம் இல்லாத நிமிடங்களில் யோசித்தபோது, பிள்ளைகளிடம் மிகவும் கண்டிப்பாகத் தான் இருந்தது ஒரு வேளை தவறான பாதைக்கு அவனை இழுத்துச் சென்று விட்டதோ என்ற குற்றவுணர்வு மனதில் முள்ளாய்க் கீறியது.

இனிமேல் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும்... விவேக்குடன் ஒரு நண்பனைப் போல் பழகி, அவனுடைய உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பளிக்க வேண்டும் என்ற உறுதி மனதில் நிறைந்தது.

அப்படியே சாய்ந்து உறங்கிப் போனார் அவர்.

* * *

மறுநாள் காலையிலேயே, தயாகரும் தன்யாவும் வந்து விட்டனர்.

''அங்கிள்! நீங்க வீட்டுக்குப் போய் குளிச்சி சாப்பிட்டு ஆன்ட்டிய அழைச்சிட்டு வாங்க. அது வரைக்கும்

அப்பா இங்கே பாத்துப்பாங்க. நான் ஒன்பது மணிக்கு ஆஃபீஸ் கிளம்பிடுவேன்,'' என்றாள் தன்யா.

ஒரு நாளிலேயே வெற்றிச் செல்வன் மிகவும் ஓய்ந்து போய்த் தெரிந்தார்.

''சரிம்மா! நான் கிளம்பறேன்'' என்றபடி வெளியில் வந்தார்.

''விவேக் ஒரு ட்ரக் அடிக்ட்டுன்னு ஆன்ட்டிக்குத் தெரிய வேணாம் அங்கிள். ஒரு பையனோட கவலையே அவங்களுக்கு அதிகம்... இப்ப இது வேற தெரிஞ்சா அவ்வளவுதான் அவங்க ரொம்ப அப்செட் ஆயிடுவாங்க!'' தாழ்ந்த குரலில் கூறினாள்.

ஒரு நலிந்த புன்னகையுடன் தலையாட்டியவர், அவளுடைய தோளைப் பிடித்து ஆதரவாக அழுத்தி விட்டுத் திரும்ப, ''அங்கிள்! இன்னொரு விஷயம்!'' என்று நிறுத்தினாள்.

''எப்பவுமே விவேக்கையும் அவன் ஃப்ரெண்ட்ஸையும் அவங்க காலேஜுக்குப் பக்கத்துல இருக்கற ஒரு பெட்டிக் கடையில தான் பாப்பேன்னு சந்தீப் சொன்னான். நீங்க முயற்சி செஞ்சா, ஒரு வேளை அங்கேயிருந்துதான் ஸ்டூடண்ட்ஸுக்கு ட்ரக்ஸ் சப்ளை ஆகுதான்னு கண்டுபிடிச்சி, அதத் தடுத்திடலாமே அங்கிள்! மத்தப் பசங்களும் பாதிக்கப்படாமே இருப்பாங்க இல்லையா? உங்க கிட்ட பவர் இருக்கறதால சொல்றேன்.''

''நிச்சயமா செய்வேன் தன்யா... தேங்க் யூ சோ மச்'' என்றபடி அவர் கிளம்பினார்.

• • •



அன்று அலுவலகத்திற்குச் செல்லும்போதே சிறிது தாமதமாகி விட, மஞ்சு வேகமாக அவளிடம் வந்தாள்.

''வியாஸ் வந்தவுடனே உன்னை எங்கேன்னு கேட்டார். ரொம்பக் கோபமா இருக்கற மாதிரித் தெரிஞ்சது. நீ நேத்து சீக்கிரமா வேற கிளம்பிட்டியா? அதுவும் அவர் கிட்ட ரிப்போர்ட் பண்ணாம! அதான் கோபம்னு நினைக்கறேன்.''

''சரி! நான் பாத்துக்கறேன்'' என்றவள் உடனே வியாஸின் கேபினுக்குச் சென்றபோது, அவன் மும்முரமாக ஃபோனில் பேசிக் கொண்டிருந்தான்.

அவளைக் கண்டதும் அலட்சியத்துடன் அமரும்படி சைகை செய்தான்.

சிறிது நேரம் பேசிவிட்டுத் திரும்பி கோபத்தில் கண்கள் இடுங்க, அவளையே ஊடுருவினான். ''நேத்து ஈவினிங் ஒரு புது ப்ராஜெக்ட் விஷயமா பேசலாம்னு தேடினா, நீ இல்லை. உன் ரொமான்ஸை எல்லாம் ஆபீஸ் அவர்ஸ்லே இல்லாமே வீக் எண்ட்லே வச்சிகிட்டா கம்பெனிக்கு நல்லது... நான் சொன்னது புரியுதா? உனக்கு சம்பளம் தருதே இந்தக் கம்பெனி... அதுக்காகச் சொன்னேன்'' குத்தலாக வந்தது அவன் குரல்.

நேற்று மாலையிலிருந்து அனுபவித்த வேதனைகளும் தவிப்பும், தன்யாவைப் பெரிதும் பலவீனப்படுத்தியிருந்தன.

ஆனாலும், அவனுடைய வார்த்தைகள் ரணமாகத் தாக்கின.

என்றாவது, தனக்கும் அவனுக்குமிடையே எழுப்பப் பட்டிருந்த கோபப் பாலத்தைக் கடந்து, அவனுடைய

இதயத்தில் தான் தடம் பதிக்க முடியுமாவென்று மனதில் ஏக்கம் வந்தது.

சமூகத்தின் வன்முறைக் கலாச்சாரத்தில் வாட்கள் ஆயுதங்களென்றால், ஆண்களுக்கு வார்த்தைகள்தான் ஆயுதங்களோ வென்று தோன்றி, மனதிற்குள் தனலாய் ஒரு சீற்றம் கனன்று எரிய ஆரம்பித்தது.

## 18



அந்த நொடியே தன்யாவின் பொறுமை தொலைந்து போனது.

அது வரை கட்டிக்காத்த அமைதியை உடைத்தவள் "மிஸ்டர் வியாஸ்! ஒவ்வொரு தடவையும் நான் பொறுமையாவே இருக்கேன். எப்பவுமே, ஏதாவது ஒரு எமர்ஜென்சி, பிரச்சனைன்னு, நான் கிளம்பும் போதெல்லாம் நீங்க இது மாதிரியே பேசறீங்க... போதும்!" அடிக்குரலில் சீறினாள்.

"என்ன... செஞ்ச தப்பை மறைக்கறதுக்காக அதை என் மேலேயே திருப்புறியா? நான்தான் அப்பப்ப நீ பாய் ஃப்ரெண்ட்டை மாத்தறதை என் கண்ணால பாக்கி றேனே... ப்யூரிட்டன் மாதிரி ரொம்பத்தான் நடிக்காதே!" உரத்த குரலில் கூறியபடி அருகில் வந்தவன், சட்டென்று அவளைத் தூக்கி நிறுத்தினான்.



"எல்லாருக்கும் உன் கம்பெனி ஈஸியாக் கிடைக்குது... எனக்கு மட்டும் என்ன? நான் உன் பாஸ்... ஞாபகமிருக்கா? எவ்வளவுதான் மோசமானவளா விஷம் மாதிரி இருந்தாலும் உன் அழகு கவர்ச்சியாதான் இருக்கு" கூறியபடி சட்டென்று அவளை அணைத்த போது, தன்யாவிற்கு ஒரு கணம் உலகின் இயக்கமே நின்று விட்டதைப் போல்!

அவனுடைய முகம் சுவாசச் சூட்டை அறிமுகப்படுத்தும் அளவு அருகில் வந்தவுடன்தான் அவன் நோக்கம் புரிந்து, கராத்தே தெரிந்த லாவகத்துடன் அவள் சட்டென்று விலகினாள்.

"சே! அப்படி ஒரு நல்லவங்களுக்கு இப்படி ஒரு மகன்! சரி... ஒருத்தர்தான் இப்படின்னா, இன்னொருத்தனுமா அவங்க நிம்மதியைக் குலைக்கிற மாதிரி நடக்கணும்! பாவம் அவங்க!"

வார்த்தைகள் கோபத்தில் சிதறிவிட, வேகமாக வந்து அவளைப் பிடித்து நிறுத்தினான் வியாஸ்.

"ஏய்... என்ன சொல்றே?" இடியாய் அதிர்ந்தது அவன் குரல்.

"நேத்து நான் எங்க போயிருந்தேன்னு கேட்டீங்க இல்லையா? உங்க தம்பி... சாரி... விவேக்கை யாரோ நாலு பசங்க அடிச்சிப் போட்டிருக்காங்க... என் தம்பி அதைப் பாத்துட்டு அவங்களை விரட்டி விட்டுட்டு உடனே ஃபோன் பண்ணினான். அதான் கிளம்பிப் போய் அவனை ஹாஸ்பிடல்லே அட்மிட் பண்ணிட்டு அவங்கப்பாவுக்குச் சொல்லி வரவழைச்சேன். இப்பவும் அவனைப் பாத்துட்டுத்தான் வரேன்... நான் சொல்றது பொய்யின்னு

நினைச்சா, நீங்களே அந்த ஹாஸ்பிடலுக்கு ஃபோன் பண்ணிக் கேட்டுக்கலாம்" என்றபடி மருத்துவமனையின் பெயரைக் கூறிவிட்டு, வேகமாய் வெளியேறினாள்.

உடல் முழுவதும் மரத்துப் போனதைப் போல் ஒரு உணர்வு எழ, சட்டென்று தொய்ந்து போய் அமர்ந்தான் அவன்.

ஒரு கணம் நெஞ்சம் குலுங்கி விட, உடனே டெலிஃபோன் புத்தகத்தில் அந்த மருத்துவமனையின் நம்பரைத் தேடி எடுத்து அங்கு பேசியபோது, விவேக் இப்போது தேறி வருவதாகக் கூறினார்கள்.

சிறு வயது நினைவுகளும், தானும் அவனும் இணைந்திருந்த பல நிகழ்வுகளும் மனதில் நிழற்படமாய் விரிய, மனம் உடனே கனத்துப் போனது.

அன்று மாலையானதும் சீக்கிரமே கிளம்பியவன், நேரே தன்யாவிடம் வந்தான்.

"தன்யா! என் கூடக் கொஞ்சம் வர முடியுமா? ஹாஸ்பிடலுக்குப் போகணும்" உணர்ச்சியைத் துடைத்த முகத்துடன் அவன் கேட்டபோது "சாரி சார்! எனக்கு வேலை இருக்கு" என்றாள் அவளும் அதே குரலில்!

ஒரு கணம் கைகளை இறுக மூடித் திறந்தவனின் முகம் இறுகிப்போய்விட விருட்டென்று திரும்பி வெளியேறினான்.

தான், அவன் கூப்பிட்டவுடனே சென்றிருக்கலாமோ வென்று இடித்துரைத்த மனதை அடக்கியபோது, அவனுக்கு இப்படி ஒரு ஷாக் ட்ரீட்மெண்ட் தேவைதான் என்று அவளுக்கு தோன்றியது.



பிறகு வேலைகளை முடித்துவிட்டு அவள் மருத்துவமனைக்குச் சென்ற போது, வெற்றிச் செல்வனும் வைஜெயந்தியும் மட்டுமே அங்கிருந்தனர்.

விவேக் விழித்து எழுந்து சோர்வுடன் அமர்ந்திருந்தான்.

"இப்போ எப்படி இருக்கே விவேக்? வலி இல்லாம இருக்கா?"

தன்யா அவனுடைய முன்னுச்சி முடியைச் செல்லமாகக் கலைத்தபடி கேட்டபோது, சட்டென்று அந்தக் கையைப் பிடித்துக் கொண்டான் அவன்.

"தேங்க்யூக்கா! சந்தீப் ஏன் வரவே இல்லை!" என்றான் விழியோரங்களில் கண்ணீர்த் துளிகளுடன்.

"அவனுக்கு எக்ஸாம் இருக்கே... அதனால சண்டே வருவான்" என்றவள், வைஜெயந்திடம் திரும்பினாள்.

"என்னம்மா! உங்க பெரிய பையன் வந்தாரா? விவேக்கைப் பத்தி சொன்னவுடனே அப்படியே ஆடிப் போயிட்டாரு. எனக்கு முன்னாடியே கிளம்பி வந்தாரே?" ஆர்வத்துடன் கேட்டாள்.

"ஆமாம்மா! நாங்க யாரோ மாதிரி, நேரா தன் தம்பி கிட்ட போய் விசாரிச்சான். எங்களைத் திரும்பிக் கூடப் பாக்கலை. உடனே வேகமா வெளியே போயிட்டான்" என்றார் வேதனையுடன்.

"ஆன்ட்டி! இது தான் முதல் ஸ்டெப்... இந்த அளவு இறங்கி வந்திருக்காரே... அதுவே பெரிசு!... பாப்போம்!"

அவரை ஆறுதல் படுத்தினாள் தன்யா.

அவனை வெளியே அழைத்து வந்தார் வெற்றிச்செல்வன்.

"நீ சொன்னதை வச்சி நம்ம டீமை அலர்ட் பண்ணி அந்தக் கடைய வாட்ச் பண்ணினதிலே, அங்கே ரெகுலரா வர்ற ஒருத்தன்தான், இந்த மாதிரி ட்ரக்ஸ் சப்ளை பண்றான்னு தெரிஞ்சது... மதியமே அவனை அரெஸ்ட் பண்ணியாச்சு... விசாரிச்சிட்டிருக்கோம்! நான் இதுலே இன்வால்வ் ஆகியிருக்கறது வெளியே யாருக்கும் தெரியாது...

"நாளைக்கே, விவேக்கை டிஸ்சார்ஜ் பண்ணி அழைச்சிட்டுப் போகலாம்னு டாக்டர் சொல்லிட்டாரு... அவருக்குத் தெரிஞ்ச ஹாஸ்பிடல்லேயே அவனை அடுத்த வாரம் அட்மிட் பண்ணி ட்ரீட்மென்ட் ஆரம்பிச்சிடலாம்னாரு... அவன் திருந்திடுவான்ற நம்பிக்கை எனக்கு வர ஆரம்பிச்சிருக்கு... இந்த விஷயத்துல நான் சீரியஸா ஆக்ஷன் எடுக்கச் சொல்லியிருக்கேன்" அடிக் குரலில் கூறினார்.

சிறிது நேரம் வைஜெயந்திடம் பேசிவிட்டு வீட்டிற்குச் சென்றாள். தேவகி ஆர்வத்துடன் விவேக்கைப் பற்றிக் கேட்டார்.

"விவேக் எப்படி இருக்கான் தன்யா!... இன்னிக்கு நம்ம பக்கத்து வீட்டு வியாஸ் தம்பி வந்திருந்தார். விவேக்கைப் பத்தி சந்தீப் கிட்ட ரொம்ப நேரம் விசாரிச்சிட்டு இப்பத்தான் போனார்" என்றார்.

"விவேக் நல்லாருக்கான்மா... நாளைக்கு அநேகமா டிஸ்சார்ஜ் பண்ணிடுவாங்கன்னு நினைக்கிறேன். ஒரே தலைவலியா இருக்கு... காபி வேணும்மா" என்றபடி உள்ளே சென்றாள்.



வியாஸின் மனநிலை என்னவென்று புரியாவிட்டாலும், அவனிடம் புதிதாய் வந்திருக்கும் இந்த மாற்றமே, பெரும் ஆறுதலாய்!

எப்படியாவது அவனை மாற்றிவிட வேண்டும் என்ற ஆர்வம் எழக் குளித்து விட்டு வந்தாள். வெளியில் போய் விட்டு அப்போதுதான் உள்ளே வந்த தயாகர், அவளைத் தனியே அழைத்துச் சென்றார்.

"தன்யா! நான் டாக்டர் குணசேகர் கிட்டப் பேசிட்டேன். அவருக்குத் தெரிஞ்ச ஒரு "டீ அடிக்ஷன் சென்டர்" ஒண்ணு இருக்காம்... அதிலே அட்மிட் பண்ணிடலாம்கிறாரு. கொஞ்ச காலமாதான் விவேக் இந்தப் பழக்கத்துக்கு அடிமையா இருக்கணும்னும் சொன்னாரு... இன்ஜெக்ஷன் போட்டுக்கறது... கை, கால் நடுங்கிப் போய், ட்ரக் இல்லைன்னா வயலண்ட்டா மாறுற அளவுக்கெல்லாம் போகலைன்னாலும் ஒரு பக்கம் நிம்மதியா இருந்தாலும், இப்பவே திருத்திட்டா நல்லது தானே? அதைப் பத்தி வெற்றிச் செல்வன்கிட்டயும் பேசிட்டுத்தான் வந்தேன். நீ அப்பதான் கிளம்பிப் போனதா சொன்னாங்க" என்றார் யோசனையுடன்.

"ஆமாம்ப்பா! ஆன்ட்டியையும் அங்கிளையும் பாக்கவே ரொம்பக் கஷ்டமா இருக்கு!"

"என்ன பண்றதும்மா! எவ்வளவோ கனவுகள், எதிர்பார்ப்புகளோட பசங்களை வளர்க்கிறோம். சில சமயங்களிலே இப்படி ஆயிடுதே" பெருமூச்சுடன் கூறினார் அவர்.

"அப்புறம்... டாக்டர் இன்னொரு விஷயமும் சொன்னாரு! விவேக் எதிர்லே சொல்ல வேணாம்னு நான் சொல்

னை. நீ நாளைக்கு அவங்கம்மா கிட்டப் பேசு. நான் வெற்றிச்செல்வன் கிட்டயும் சொல்றேன்.''

"என்னப்பா பெரிசா வேற எதுவும் ப்ராப்ளம் இல்லையே?'' தவிப்புடன் கேட்டாள் தன்யா.

"அதெல்லாம் இல்லை... ஆனா பொதுவாவே, பாசத்துக்கு ஏங்கறவங்க... தனக்குன்னு யாருமில்லையேன்ற சுயபச்சாதாபத்தினாலே வர பாதுகாப்பின்மைய உணர்றவங்க... அப்பா, அம்மாவோட அரவணைப்பு கிடைக்காம வளர்ற பசங்களுக்குள்ளேதான் இது மாதிரி சில தேடல்கள்... அதுக்கு வடிகாலா இந்த மாதிரிப் பழக்கங்களெல்லாம் ஆட்படுத்திடும்னு டாக்டர் சொல்றாரு... ஆனா, இங்கே இவங்க குடும்பம் ரொம்ப அன்பான அன்யோன்யமான குடும்பமாதான் தெரியுது... ஏன் இப்படி? நீ எதுக்கும் அவங்கம்மாகிட்ட இதைச் சொல்லு'' என்றார்.

யோசனையுடன் தலையசைத்தவளுக்கு, விவேக் அந்தக் குடும்பத்தை விட்டு விலகிய காரணம் புரிவது போல் தோன்றியது.

அன்று இரவு வெகு நேரம் அதே யோசனையுடனிருந்த தன்யா, ஒரு முடிவுடன் உறங்கிப் போனாள்.

உறக்கத்திலும், கனவுப் பக்கங்களில் வியாஸின் நினைவுகள் உயிரோவியமாய் செதுக்கப்பட்டன.

மனதிற்குள், அவனுடைய நினைவுகளின் ஈரப்பதம் உலரும் முன்பே, அவன் வார்த்தைக் கங்குகள் தீயாய்ப் பரவி அவளுக்குள் வெம்மை சேர்த்தன.



இதயத்தின் இரைச்சலால் விழிகள் மெல்லத் திறந்தன... பிறகுதான் தெரிந்தது, அது வியாஸைப் பற்றிய கனவென்று!

அந்த இரவு, உறக்கம் தொலைத்த இரவாய் ஆனது.

## 19



மறுநாள் காலையிலேயே கிளம்பி விவேக்கின் வீட்டிற்குச் சென்ற போது, நலிந்த புன்னகையுடன் அவளை வரவேற்ற வைஜெயந்தியைப் பார்த்தால், பரிதாபமாக இருந்தது.

ஒரே நாளில், கண்களின் கீழ் கருவளையம் கட்டி, ஜீவனே தொலைந்து போனது போல் ஓய்ந்து தெரிந்தார் அவர்.

"என்ன ஆன்ட்டி... ரொம்ப டல்லா இருக்கீங்க... ஹாஸ்பிடலுக்குக் கிளம்பியாச்சா?''

சிறு முறுவலுடன் விசாரித்தவளிடம் "ஆமாம்மா! டிபன் ரெடி பண்ணி எடுத்துட்டுப் போறேன். நீயும் வரியா?'' என்றார்.

"ம்.. வரேன் ஆன்ட்டி! அப்புறம் ஒரு விஷயம்! உங்களை விட்டுப் பிரிஞ்சு போன மகனைப் பத்திக் கவலைப்படறதை விட்டுட்டு, விவேக்கை பாருங்க! எனக்கென்னவோ, அவன் உங்க பாசத்துக்காக ரொம்ப ஏங்கற மாதிரித்

தெரியுது. நீங்க மனசு வச்சா, அவனை குணப்படுத்திடலாம்" மெதுவாகக் கூறினாள்.

அவன் போதை மருந்துப் பழக்கம் உள்ளவனென்பதை வெளிப்படுத்தாமல் பொதுவாக அவள் கூறிய போது, தன்யாவின் கைகளை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டார் ஜெயந்தி.

"எனக்கு எல்லா உண்மையும் தெரியும்மா! அங்கிள் நேத்து நைட்தான் சொன்னாரு... அப்புறமாதான் என் தப்பே உறைச்சிது... வியாஸ் பிரிஞ்சி போன சோகத்துல, நடைப்பிணமா மாறி இருந்த நான், இவனை மூணு வருஷமா சரியா கவனிக்காமலேயே இருந்திருக்கேன். இவனும் பாவம்... அந்த ஏக்கத்தை வெளிப்படுத்தாமலே தனக்குள்ளே சுருங்கி வாழப் பழகியிருக்கான்... நான் இனிமே அவனைப் பொக்கிஷமாப் பாத்துப்பேன் தன்யா"

அவரின் கண்ணோரம் ஜனித்த நீர் வழிந்து மண் தொட்டது.

"ஓ! இப்பதான் நிம்மதியா இருக்கு ஆன்ட்டி!... உங்ககிட்டே எப்படி சொல்றதுன்னு தவிப்பா இருந்தது. தேங்க்ஸ்... நல்ல வேளை அங்கிள் பேசிட்டாரு! வாங்க கிளம்பலாம்". அவர் காரில் ஏறிக் கொள்ள, அவள் வண்டியில் பின் தொடர்ந்தாள்.

அதே நேரம், சீக்கிரமாகவே அலுவலகத்திற்கு வந்திருந்த வியாஸின் அறைக்கதவைத் தட்டிவிட்டு உள்ளே நுழைந்து கொண்டிருந்தாள், மஞ்சு.

அந்த நேரம் அங்கு அவளை எதிர்பார்க்காததால் வியப்புடன் புருவத்தை உயர்த்தியவனிடம், "சார் உங்ககிட்ட



நான் கொஞ்சம் பர்சனலாப் பேசணும்... அதுவும் தன்யாவைப் பத்தி..." என்று ஆரம்பித்தாள் அவள்.

தன் தோழியைப் பற்றி அவள் மெதுவாகக் கூற ஆரம்பிக்க, அதை அலட்சியத்துடன் நிமிர்ந்து கேட்க ஆரம்பித்தவனின் முகத்தில், பல உணர்ச்சிகள்!

முதலில் வியப்பும், நம்ப முடியாத ஆச்சர்யமும் போட்டி போட்டுக் கொண்டு வர, அவள் கூறுவதை உன்னிப்பாகக் கேட்க ஆரம்பித்தான்.

"நீங்க நினைக்கிற மாதிரி இல்லை! ரகுவும், தன்யாவும் நல்ல நண்பர்கள்! அவ என்கிட்ட எதையுமே மறைச்சதில்லை. சின்ன வயசுல இருந்தே நாங்க ரெண்டு பேரும் நெருங்கின தோழிகள்...

அவ ஒருத்தரை மனசார விரும்பறா... அது எனக்கு மட்டும்தான் தெரியும். ஆனா அது நிச்சயமா ரகு இல்லை" என்றபோது, சட்டென்று இறுகிப் போனவனின் உடல் விறைத்துப் போய், கண்களில் சடசடென்று ஒரு தீப்பொறி தெரிந்தது.

மனதிற்குள் சிரித்துக் கொண்டாள் மஞ்சு.

"அவரும் இவளை விரும்புறாரு... அன்னிக்கு ரகுவுக்கு ஆக்சிடென்ட் ஆனதால கால்லே கட்டுப் போட்டு அழைச்சிட்டுப் போறதப் பாத்துட்டு நீங்க அவளைத் தப்பா நினைச்சிருக்கீங்க. அவ அப்படிப்பட்ட பொண்ணு இல்லை! மத்தவங்களுக்கு ஒரு ப்ரச்னைன்னா உடனே ஓடிப் போய் உதவற மனித நேயம் அவகிட்டே அதிகம்... தனக்குன்னு யோசிக்கிறதை விட, மத்தவங்களுக்காக ரொம்ப யோசிப்பா...

"நாங்க காலேஜ் படிக்கிறப்போ, அவ அழகுல மயங்கி எத்தனையோ பேர் அவளை ப்ரபோஸ் பண்ணியிருக்காங்க... ஆனா அவ அதுக்கெல்லாம் மயங்கினதில்லை. எனக்கு நல்லாத் தெரியும்..." என்றவளை வியாஸ் இடைமறித்தான்.

"ஒரு நிமிஷம்! கொஞ்ச நாளாத்தான் தன்யாவைப் பத்தி நான் நல்லபடியா நினைக்க ஆரம்பிச்சிருந்தேன்... இப்போ அதை அவளே கெடுத்துக்கிட்டா!" என்றான் குற்றம் சாட்டும் குரலில்!

"நீங்க சொல்றது புரியலை சார்!"

புட்டத்துடன் கேட்ட மஞ்சுவிடம், "அவ தானே, தன்னைப் பத்தி இப்படிப் பேசச் சொல்லி உங்களைத் தூது விட்டிருக்கா... அதச் சொல்றேன்" ஏளனத்துடன் கூறினான்.

உடனே எழுந்தவள், "சார்! நான் கூட உங்களைத் தப்பா புரிஞ்சிக்கிட்டேன்... உண்மை தெரியாம ஒரு நல்ல பொண்ணை நோகடிக்கிறீங்களேன்னு, நானா தான் இது பத்திப் பேச வந்தேன். சத்தியமா தன்யாவுக்கு இது தெரியாது... தெரிஞ்சிருந்தா உடனே தடுத்திருப்பா! அவளுக்கு சுய கௌரவம் ரொம்ப அதிகம்... அப்படிப் பட்டவளை சரியாப் புரிஞ்சிக்காம... சே... நான் வரேன் சார்... தேங்க்ஸ்" என்றபடி வேகமாகத் திரும்பினாள்.

"மஞ்சு! இவ்வளவு பேசுறீங்களே... இதையும் கேட்டுட்டுப் போங்க... அன்னிக்கு நானே பாத்தேன். கோவில்லே இவளும் யாரோ ஒருத்தனும் கோபமாய் பேசிட்டிருந்தாங்க... இவ அவனையும் ஏமாத்திட்டா போலிருக்கு... இவன், இன்னும் இவ லிஸ்ட்டுல எத்தனை பேரோ?



இதுக்கு என்ன சொல்லப் போறீங்க?" நக்கலாகக் கேட்டான்.

வெறுப்புடன் திரும்பியவள் "இவ்வளவு தூரம் உங்களை நீங்களே தாழ்த்திக் கிட்டப்புறம், இதுக்கு பதில் சொல்லணும்கிற அவசியம் எனக்கில்லை... இருந்தாலும் பதில் சொல்றேன்... அன்னிக்கு நீங்க தன்யாவோட பாத்த அந்த மனுஷன் யாரு தெரியுமா? என் ஹஸ்பெண்ட் சிசுகுமார்... போதுமா?" சீற்றத்துடன் கேட்டவளையே நம்ப முடியாமல் வெறித்தான்.

"ஏன்... அவர்தான் ஃபாரின் போயிட்டாரே? இங்கே எப்படி? உங்களுக்குள்ளே என்ன ப்ரச்னை?" மெதுவாகக் கேட்டவனிடம் தன் வாழ்க்கையைப் பற்றி மெலிந்த குரலில் கூறினாள் மஞ்சு.

ஏனோ, அதைக் கேட்டவுடன் அவன் இதயத்தை யாரோ இறுகப் பிசைவது போல் ஒரு உணர்வு!

அது அவள் கதையைக் கேட்டதால் எழுந்த துக்கமா... இல்லை... தன்யாவைப் புரிந்து கொள்ளாமல், இது வரை தான் அவளைக் கேவலமாக நடத்தியதினால் வந்த கழிவிரக்கமா என்று வித்தியாசப் படுத்துவதற்குள், மஞ்சுவின் குரல் அவனை உசுப்பியது.

"இதுலே கூட எங்களுக்கு உதவினது வெற்றிச் செல்வன் சார்தான்! அந்த நன்றிக்காகவும், என் தோழி சந்தோஷமா இருக்கணும்கிறதுக்காகவும் தான் நான் இவ்வளவு நேரம் உங்ககிட்டே பேசினேன்... நான் வரேன் சார்!"

அவள் கதவருகில் செல்லும் போது, அவனுடைய கேள்வி அவளை நிறுத்தியது.

"தன்யா விரும்பற அந்த லக்கி பர்ஸன் யாருன்னு... நான் தெரிஞ்சுக்கலாமா?"

இதழோரம் படர்ந்த விரக்திப் புன்னகையுடன், "அதை நீங்க அவகிட்டதான் சார் கேக்கணும். ஆனா, சொல்லாமலும் போக முடியலை... அவர் பேர் வேதவியாஸன்!" கூறிவிட்டு, கதவை அழுத்தமாய் மூடிவிட்டுச் சென்றாள் மஞ்சு.

சட்டென்று, வியாஸின் இதயக்கதவுகள் வேகமாகத் திறந்தன. தன்யாவைப் பற்றிய சுகமான நினைவுகள் சாரலாய் உட்புகுந்தன.

## 20



**வே**த வியாஸனுக்கும் பலவிதமான உணர்ச்சிகள் கலவையாய்ப் பின்னவிட்டன.

தன்யாவைப் பற்றிய தன் கணிப்பு எவ்வளவு தவறென்று மனம் இடித்துரைக்க ஆரம்பித்தது.

இதுவரை, அவளைப்பற்றித் தன் மனதிற்குள் எழுப்பி இருந்த மாயத்திரை, சட சட வென்று விலக, நேசத் தளிர்கள் மெல்லத் துளிர்க்க ஆரம்பித்தன.

அவளை வெறுப்பது போல் இதுவரை வெளிக்காட்டி வந்த பொய்மை நீங்க, இதயம் முழுவதும் புது வெள்ளப் பெருக்காய் அவளின் நினைவுகள்!



அவளைப் பற்றி நினைக்கும்போதே நெஞ்சம் சிலிர்த்துப் போனது.

ஞாபகங்கள் சாரல் மழை தூவ, தான் எப்படி இது போல் மாறினோம் என்பது அவனுக்கே புரியாத புதிராய்!

தனை உணர்ந்த நிலையில் மனதிற்குள் காதல் மின்னல் மின்ன ஆரம்பிக்க நேசத் தூரிகை கொண்டு இதயத்தில் வரையப்பட்ட உயிரோவியமாய், அவள்!

அவள் எப்போது அலுவலகத்திற்கு வருவாள் என்று, முதன் முதலாக இனம் புரியா தவிப்புடன் காத்திருக்க ஆரம்பித்தான், வியாஸ்.

அவன் கேபினுக்குப் பக்கத்திலேயே அவளின் இருக்கை இருப்பதால், கண்ணாடித் தடுப்புச் சுவர் வழியே அவள் வந்து அமர்வது தெரிந்தது.

இண்டர்காமை அடித்து அவளைத் தன் அறைக்கு அழைத்தவன், அவளிடம் எப்படிப் பேசுவது என்று கண் மூடி ஒத்திகை பார்க்க ஆரம்பித்தான்.

"மே ஐ கமின் சார்!"

அவளுடைய குரல் குயிலினிமையாக மனதை வருட, சட்டென்று விழிகளைத் திறந்தவனின் எதிரே, யோசனையுடன் நின்றிருந்தாள் தன்யா!

.... நல்ல உயரமாய், தந்தச் சிற்பம் போல், தறுதறு வென்று மின்னல் பூக்களாய் விழிகள் மின்ன, அலையெனப் புரண்ட கேசமும், மெலிதாய் சிவந்திருந்த முகத்துடனும் நின்றிருந்த அவள் உருவம், இதயக் கதவுடைத்து வேகமாய் உட்புகுந்தது.

"சார்... என்ன விஷயம்?"

மெல்லிய குரலில் அவள் கேட்க, நினைவுச் சுழல்களிலிருந்து மீண்டவன், "தேங்க்யூ தன்யா!" என்றான் மென்மையாக.

அவள் புரியாமல் நோக்கியபடி "வெல்கம்... ஆனா எதுக்கு சார்?" என்ற போது, "விவேக்கைக் காப்பாத்தினதுக்குன்னு சொல்லலாமா?" சீண்டலாகக் கேட்டான் அவன்.

முதன் முதலில் குறும்புடன் அவன் பேசியதும், விழிகள் அழகாய் மலர்ந்த விதமும், மனதில் பூஞ்சிறகாய் வருடிக சந்தங்களை அறிமுகம் செய்தாலும், அவனைப் பற்றி அறிந்திருந்ததால், தன்னை வெகுவாகக் கட்டுப்படுத்திக் கொண்டாள் அவள்.

"வேற எதுவும் வேலை இருக்கா சார்?"

வறண்ட குரலில் அவள் கேட்டபோது "ஏன்... வேலை விஷயம் தவிர வேற எதுவுமே என்னோட பேச மாட்டியா?" புதிதாய் ஒரு மயிலிறகின் வருடல் அவன் வார்த்தைகளில்!

அவள் மௌனமாகவே இருக்கவும், "சரி! இன்னிக்கு ஈவினிங் என் கூடக் கொஞ்சம் வெளியே வர முடியுமா?... பர்சனல்!" உல்லாசமாகக் கேட்டான் வியாஸ்.

"சரி! பர்சனலைப் பேசற அளவுக்கு நம்ம ரெண்டு பேருக்கும் இடையில எதுவும் இல்லைன்னு, நான் நினைக்கிறேன் சார்" என்றவள் உடனே திரும்பிச் செல்ல, வேகமாக எழுந்து அவளை வழி மறித்தான் அவன்.



"உன்னைப் பத்தி இன்னிக்குத்தான் நான் சரியாப் புரிஞ்சிக்கிட்டேன் தன்யா! ப்ளீஸ் அதைப் பத்திப் பேசணும்!"

சட்டென்று திரும்பியவளின் விழிகளில் பெரும் சீற்றம்.

"என்னைப் பத்தி உங்களுக்கு என்ன தெரியும்?"

"எனக்கு எல்லாம் தெரியும்! உன் மனசுக்குள்ளே யாரு இருக்கிறாங்கன்னும் தெரியும். ஆனா, அதை நீயா சொல்லணும்."

"நான் சொல்லலைன்னா...?"

கண்களில் கூர்மையுடன் கேட்டவளிடம், "நான் என் மனசைப் பத்தி சொல்லிடுவேன்... உன்னை விரும்ப ஆரம்பிச்சிருக்கறதை... உங்க அப்பாகிட்ட வந்து முறையாப் பேசப் போறதைச் சொல்லவா?" கண்களில் ஆயிரம் கனவுகளுடன் கேட்டான்.

மெதுவாக, "உங்களை நான் விரும்பினது உண்மை..." என்றவள், விழிகள் பளபளக்க தொடர்ந்தாள்.

"ஆனா இப்படி ஒரு சுயநலவாதிய, நன்றி மறந்தவரை ஏன் விரும்பினோம்னு இப்போ வருத்தப்பட ஆரம்பிச்சிருக்கேன்". ஸ்பஷ்டமாய் வெளிவந்து, அவனை ஆயுதமாய் வீழ்த்தின அவளின் வார்த்தைகள்!

"ஏய்... என்ன பேசறே?"

கண்கள் இடுங்க, கோபமாய் அருகில் வந்தவனைக் கண்டு மனம் அஞ்சினாலும், தைரியமாகவே நின்றாள் அவள்!

"ஆமாம்... இத்தனை வருஷம் பாசமா எடுத்து வளர்த்த அந்த அம்மா அப்பாவையே ஒரு நொடியிலத் தூக்கி எறிஞ்சுட்டு வந்திட்டீங்க... இப்ப என்னை விரும்பறேன்னு சொல்றீங்க! கல்யாணம் முடிஞ்சு கொஞ்ச நாள் என்கிட்ட ஆசையா இருப்பீங்க! ஆனா எந்த நிமிஷம் வேணும்னாலும் என்னையும் உதறிட்டுப் போக மாட்டீங்கன்னு, என்ன நிச்சயம்?"

வார்த்தைகள் சவுக்காய் சுழன்றன... வியாஸின் இதயத்தை ரணமாய்த் தாக்கின!

"தன்யா! உனக்கு என்ன தெரியும்? அன்பான கூட்டுக்குள்ளே இருந்த என்னை, நீ யாரு அநாதைன்னு சொல்லி என் மனசை தனிமையை உணர வச்சி, என்னோட மென்மையான உணர்வுகளை சாகடிச்சவங்களைத் தூக்கி எறியாம என்ன செய்யறது?" திடீரெனச் சிவந்த விழிகளுடன் ரௌத்ரமாகக் கேட்டான்.

"ஏன் இவ்வளவு கோபம்...? நீங்க ஆத்திரப்பட வேண்டியது உங்களை வளர்த்த அம்மா அப்பா மேல இல்லை... உங்களைப் பெத்தவங்க மேல!

"ஒரு குழந்தையைப் பெத்துட்டு பொறுப்பே இல்லாம, ஒரு அநாதை இல்லத்துல போட்டுட்டுப் பாசமே இல்லாம உதறிட்டுப் போனாங்களே... அவங்களை நினைச்சி கோபப்படணும்! அதை விட்டுட்டு, தனக்கு குழந்தை இல்லையேன்னு உங்களை ஆசையோட எடுத்து வளர்த்து, அன்பைப் பரிசளிச்சு, சமுதாயத்துல இப்படி ஒரு உயர்ந்த மனிதனா வளர்த்து விட்டிருக்கற அங்கிள், ஆன்ட்டி மேல எப்படி சார் கோபம் வந்தது?"



அதுவரை மனதிற்குள் இறுகப் புதைந்திருந்த உணர்வுகள், மடை திறந்தாற் போல் வார்த்தைகளாய் வெளி வந்தன.

கோபத்தில் இரு புருவங்களும் நெரிய, அவளையே உறுத்தவனின் விழிகளிலும் மெலிதான யோசனையின் சாயல்!

"என்ன... எனக்கே அட்வைஸ் பண்றியா?"

உணர்ச்சிகளைத் துடைத்த முகத்துடன் அவன் கேட்க, "இது உபதேசம் இல்லை... உண்மை! அதை யார் வேணாப் பேசலாம்.... அம்மா, அப்பா வேணாம்னு உதறிட்டு வந்திட்டீங்களே, இருபத்தி மூணு வருஷமா அவங்க போட்ட சாப்பாட்டுல வளர்ந்த இந்த உடம்பு... அவங்க குடுத்த படிப்பு, இதெல்லாம் வேணாம்னு திருப்பித் தர முடியுமா உங்களாலே?"

ஒரு வேகமூச்சுடன் அவளுடைய கையைப் பிடித்து இழுத்தவன், "இவ்வளவு பேசறியே! அநாதைங்கிற உணர்வு எவ்வளவு கொடுமையானதுன்னு உனக்குத் தெரியுமா? அதை அனுபவிச்சாதான் தெரியும்? உனக்குன்னு யாருமே இல்லை, போடான்னு முகத்தில அறைஞ்ச மாதிரித் தனிமைப்படுத்தப் படும்போதுதான், அதோட வலி புரியும்! நான் எவ்வளவு நொறுங்கிப் போனேன்னு எனக்கு மட்டும் தான் தெரியும்." சீறினான்.

அழுத்தமாகப் பிடித்திருந்த அவன் பிடியிலிருந்து தன்யா வேகமாகத் தன் கையை உதறினாள்.

"ம்... தன்னை அநாதையா உணர்றவங்க, எப்பவுமே உறவுகளைத் தேடி ஓடுவாங்க... அதோட அருமை

தெரிஞ்சவங்களா இருப்பாங்க! ஆனா நீங்க... உங்களை உருவாக்கினவங்களோட மனசை நோகடிச்சிட்டு, அவங்களை உதறிட்டுல்ல வந்திருக்கீங்க!"

"தன்யா! திஸ் இஸ் தி லிமிட்!"

வியாஸ் உரத்த குரலில் கூறினான்.

"இல்லை! நான் பேசியாகணும். இன்னிக்குப் பேசலைன்னா, அப்புறம் என்னாலே பேச முடியாமலே போனாலும் போயிடும்... நீங்க ஒரு அப்பட்டமான சுயநலவாதி! உங்கம்மா, எப்படி தான் சுமந்த குழந்தையே வேணாம்னு உங்களைத் தூக்கி எறிஞ்சிட்டுப் போனாங்களோ, அதே புத்திதான் உங்களுக்கும் இருந்திருக்கு...! உங்களைத் தங்களோட மனசுல சுமந்த அந்த அற்புதமான மனுஷங்களை, நீங்களும் வீசி எறிஞ்சிருக்கீங்க!"

"ஏய்..."

பற்களைக் கடித்தபடி அவளருகில் வந்தவன், "உன்னைப் போய் நான் விரும்பினேன் பாரு... சே! நல்ல வேளை... ஆரம்பத்துலேயே தெரிஞ்சது, உன்னோட குணம்" விரக்தியுடன் நிறுத்தினான்.

"அப்படியே இல்லைன்னாலும் என்ன... இப்ப கொஞ்ச நாளாத்தானே என்னை உங்களுக்குத் தெரியும்... எதையுமே சுலபத்துல மறக்கறதுதான் உங்க குணமாச்சே... அவ்வளவு பாசமா வளர்த்தவங்களையே, ஒரு நொடியில மறந்து முழுக்குப் போட்டுட்டு வந்தவரு நீங்க... என்னை மறக்கறது ரொம்ப ஈஸி சார்!"

ஒவ்வொரு சொற்களும் மனதில் முட்களாய் தைத்தன.



"கடைசியா ஒண்ணு! உங்கம்மா, அப்பாவோட பாசத்தைப் புரிஞ்சிகிட்டு அவங்களோட போய் சேருங்க... இல்லை... அவங்க குடுத்த படிப்பை உபயோகப்படுத்தாம ஒரு வேலை தேடுங்க...

"எத்தனையோ வேலை இருக்கு... ஆட்டோ ஓட்டலாம்... மூட்டை தூக்கலாம்..."

தான் பேசுவது அதிகப்படியென்று புரிந்தாலும், அவனைத் தெளிய வைத்து வாழ்க்கையைப் புரிய வைக்க வேண்டுமென்ற ஆர்வமும், ஆதங்கமும் அவள் குரலில் தெரிந்தன.

உடனே, தன் பேச்சினால் வர்ணங்களைப் பரிசளிக்காத நிறமற்ற வானவில்லாய், தன் வாழ்க்கை மாறிவிடுமோவென்ற விதிர்ப்பு நிலையும் ஒரு நொடி மனதில் கைகோர்த்தது.

ஆனால், ஒரு தாயின் ஏக்க முகமும், இறைஞ்சும் விழிகளும் நினைவிற்கு வந்து, தான் செய்தது சரிதானென்று உறுதியாய் உணர வைத்தன.

## 21

யுத்த களத்தில் நிற்கின்ற வீரனைப் போல் நின்றிருந்த வியாஸின் விழிகள், ரத்தமெனச் சிவந்திருக்க, இறுக மூடி கைகளிலேயே அவனுடைய இறுக்கம் தெரிந்தது

தொலை தூரத்தில் பார்வையைப் பதித்தபடி அனைத்தையும் கேட்டிருந்தவன், சிலைக்கு உயிர் வந்தாற் போல் திரும்பி, "கெட் லாஸ்ட்..." என்றான், கையை அறை வாசல் புறம் நீட்டியபடி!

தன்னுடைய கேள்விகள் அவனை இப்போது காயப்படுத்தினாலும், பிறகு யோசிக்கும் போது உண்மையைப் புரிய வைக்கும் என்று தோன்ற வெளியே வந்தபோது, தன்யாவின் கண் முன்னே அவனுடைய எதிர்காலம் பெரும் கேள்விக்குறியாய்!

தான் பேசிய வார்த்தைகளால் வியான் தன்னை வெறுத்து விட்டது புரிய, தன்னால் அவனை மறக்க முடியாதென்பதும் புரிந்தது. இதயம் இலவம் பஞ்சாய் அலைபாய்ந்தது.

விழியோரங்களில் கண்ணீர்த் துளிகள் கசிந்து, வேதனையில் இறுக்கமானது மனது.

இந்த மனநிலையுடன் அலுவலகத்தில் வேலை செய்ய முடியாதென்று தோன்றியது.

வேகமாகக் கிளம்பியவள் மஞ்சுவிடம் மட்டும் தான் விடுப்பு எடுத்துச் செல்வதாகக் கூறி விட்டு வீட்டிற்குச் செல்ல, மஞ்சுவிற்கோ ஒன்றுமே புரியவில்லை.

அந்த நேரத்திற்கு அவளை எதிர்பாராததால், பதறிப் போனார் தேவகி.

"என்ன தன்யா? உடம்பு ஏதும் சரியில்லையா?" கரிசனத்துடன் கேட்டபடி, நெற்றியில் கை வைத்துப் பார்த்தார்.

"ஆமாம்மா ரொம்பத் தலைவலி! அதான் வந்துட்டேன். நான் ரெஸ்ட் எடுக்கப் போறேன்... என்னை டிஸ்டர்ப்



பண்ணாதீங்க!" என்றபடி தன் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள்.

படுக்கையில் விழுந்ததும், அதுவரை அடக்கி வைத்திருந்த வேதனையும், துக்கமும், மனவலியும் கண்ணீராய் உருவெடுத்தன.

தன்னை விரும்புகிறேன் என்று அவனாகவே கூறியும், அவனை மாற்ற வேண்டுமென்பதற்காக, தன் காதலை மன ஆழத்தில் மறைத்துப் பேசி இன்று வியானின் வெறுப்புக்கு ஆளாகி இருப்பதை நினைத்தால், இதயம் இரண்டாகப் பிளப்பது போல் வலிக்க ஆரம்பித்தது.

தோற்றுப் போன காதலின் வலி மனதில் மூர்க்கமாய் பரவ, தேற்றுவாரின்றி அழ ஆரம்பித்தாள் தன்யா!

* * *

அவள் அறையை விட்டுச் சென்றதும், வேகமாகச் சென்று தன் இருக்கையில் அமர்ந்த வியானின் மனம், குற்ற உணர்வில் தகிக்க ஆரம்பித்தது.

தன்யாவின் சொற்கள் பெரும் தீயாய் சுழன்று அவனைத் தாக்கின.

மனதிற்குள் வேர்பிடித்திருந்த பிடிவாதமும், முரட்டுத் தனமும், அனலில் கரையும் மெழுகாய்க் கரைய ஆரம்பித்தன.

தலையை இரு கைகளாலும் தாங்கியபடி சிறிது நேரம் அமர்ந்திருந்தவனுக்கு, அந்த நிமிடம் தனிமை மிகவும் தேவையாய்!

ஆயிரம் கேள்விகள் மனதில் சரம் கோர்த்து வரிசையாய் அணி வகுக்க, தான் செய்தது சரியா தவறா என்றே

தீர்மானிக்க முடியாத ஒரு குழப்ப நிலை, பெரும் சஞ்சலத்தை அளிப்பதாய்!

உடனே எழுந்தவன், அன்று விடுமுறை வேண்டும் என்று எழுதி வைத்து விட்டு, வீட்டிற்குக் கிளம்பினான்.

கற்பாறையாய் இறுகிய முகத்துடன், விழிகள் நெருப்புத் துண்டுகளாய் ஒளிர,

வேகமாகக் கிளம்பிச் சென்றவனைப் பார்த்தால், மஞ்சுவிற்கு உள்ளூர ஒரு குளிர் பரவியது.

அவர்கள் இருவருக்கும் இடையில் என்ன நடந்திருக்கும் என்ற கேள்வி வண்டாய்க் குடைந்தது.

தான் நல்லது செய்யப் போய் இது என்ன விபரீதம் என்று, மஞ்சுவின் மனம் பதற ஆரம்பித்தது.

சிறிது நேரம் கழித்து தன்யாவின் வீட்டிற்குப் ஃபோன் செய்த போது, தேவகிதான் பேசினார்.

"என்னம்மா மஞ்சு! நல்லாயிருக்கியா? தன்யாவிற்கு உடம்பு சரியில்லை... தலைவலின்னு படுத்திருக்கா... என்ன விஷயம்மா?" என்று கேட்டார்.

"ஒண்ணுமில்லம்மா! திடீர்னு உடம்பு சரியில்லைன்னு கிளம்பி போனாளா... அதான் கேக்கலாம்னு பண்ணினேன். அவளை டிஸ்டர்ப் பண்ண வேண்டாம். சாயந்தரமா நான் அங்கே வரேன்மா!"

ஃபோனை வைத்தவளுக்குள், தன்யாவிற்கும் வியானுக்கும் இடையில் என்ன நடந்திருந்தாலும், எல்லாம் சரியாகி ஒருவரை ஒருவர் புரிந்து இணைய வேண்டும் என்ற பரிதவிப்பு!



வீட்டிற்குச் செல்லும் போதே பக்கத்து வீட்டைக் கவனித்த வியானுக்கு, அங்கு தன்யாவின் கைனடிக் ஹோண்டாவைப் பார்த்தவுடன், பெரும் நிம்மதி!

புயலினால் கூடிழந்த பறவை, வெகு நாட்கள் கழித்து அதைச் செப்பனிட்டுத் தனக்கென ஒரு கூட்டை அமைப்பதைப் போல் தான் வாங்கியிருந்த வீட்டை அவன் நிமிர்ந்து பார்த்த போது, முதன் முதலாக ஏதோ ஒரு அந்நியத் தன்மை மனதில் படர்வது போல்!

தன் அறைக்குள் சென்று தனிமையில் யோசித்த வேத வியானுக்கோ, முன்பு புரியாத பல விஷயங்கள் இன்று புரிவதைப் போல்!

தான் ஒரு ஆண்... அதனால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற திமிரும் அகங்காரமும், அவள் பேச்சினால் பொடிப் பொடியாய் உதிர்ந்திருந்தன!

மனதிற்குள், பாசத்திற்கும் பிடிவாதத்திற்கும் இடையே ஒரு பெரிய மல்யுத்தம் நடக்க ஆரம்பித்தது.

* * *

அன்று முழுவதும் தன் அறையிலேயே சிறையிருந்த தன்யா, மாலையில் மஞ்சு வந்த பிறகுதான் வெளியிலேயே வந்தாள்.

அழுதழுது இடுங்கிய கண்களும், காய்ச்சல் வந்தது போல் சிவந்திருந்த கண்களும், வெளிறிய முகமும் தன்யாவின் நிலையைப் பறை சாற்ற, மஞ்சுவின் இதயம் ஒரு கணம் கசங்கியது.

இந்த நிலைக்குத் தானும் ஒரு காரணமோ என்ற குற்ற உணர்ச்சி அவளைத் தாக்கியது.

"என்ன தன்யா! உங்க ரெண்டு பேருக்கும் நடுவுல என்ன ப்ரச்னை? ரெண்டு பேரும் மனச விட்டுப் பேசி லவ் பேர்ட்ஸ் மாதிரி சுற்றித் திரியப் போறீங்கன்னு இனிமையா கற்பனை செஞ்சுக்கிட்டிருந்த என்னை, ஒரே நிமிஷத்தில் தலை குப்புறக் கவுத்திட்டீங்க" மெல்லிய குரலில் ஆதங்கத்துடன் கேட்டாள்.

அவளைத் தன் அறைக்குள் அழைத்துச் சென்ற தன்யா, அதுவரை மனதில் அடக்கி இருந்த துக்கத்தை, மனக் குமுறலுடன் வெளியிட்டாள்.

"ஏன்டி இப்படி செஞ்சே? அவர் உன்னை விரும்பறதா சொன்னவுடனே, உன் விருப்பத்தையும் சொல்லி முதல்லே அவரைக் கல்யாணத்துக்கு சம்மதிக்க வெச்சிருந்தீன்னா, அப்புறம் மனைவிங்கற உரிமை வந்தப்புறம் இதைப் பத்தி பேசி முடிவெடுத்திருக்கலாமே? தப்பு பண்ணிட்டே தன்யா!" மஞ்சுவின் குரல் பதட்டமாய்!

"இல்லை மஞ்சு! மனைவிங்கற உறவு, பெரிய பலம்தான்! ஆனா எதையுமே ஆயுதமாப் பயன்படுத்தி அவரை வீழ்த்தணும்கிற எண்ணம் சத்தியமா எனக்கில்லை. நீ உன் அம்மா அப்பாவைப் புரிஞ்சிக்க... நான் உன்னை அப்பத்தான் காதலிப்பேன்கிறதுக்கு இது ஒண்ணும் பண்ட மாற்று வியாபாரமுமில்லை! அவர், வாழ்க்கையோட நிஜங்களையும், உறவுகளோட அருமையையும் புரிஞ்சிக்கணும்... அதான் என்னோட ஆசை" ஒரு பெருமூச்சுடன் நிறுத்தினாள்.

வெகுநேரம் அவளிடம் பேசிக் கொண்டிருந்த மஞ்சுவும் விடைபெற்றுச் சென்றாள்.



அன்று முழுவதும் தன்யாவின் மனம் வியாஸின் நினைவுகளால் செல்லரித்துக் கொண்டே இருந்தது.

உடலும் மனமும் சோர்ந்து போனதில், அன்றிரவே அவளுக்குக் காய்ச்சல் வந்து விட, தவிப்புகளோடு தலையணை மட்டுமே அவளுக்குத் துணையிருந்தது.

உறங்கா இரவு தேம்ஸ் நதியாய் நீள, விடியும் போது தான் அவள் நித்திரையைத் தழுவினாள்.

விடியலின் காலடி சஞ்சாரங்களும், காலைப் பறவையின் சாதக சந்தங்களும், காற்றில் கலந்து வந்து நாசியை வருடின.

காலை டிபனின் நறுமணமும், கதிரவனின் சுவாசம் குட்டை சாளரங்களின் வழி சுமந்து வந்து உசுப்பிய விடியலின் வெளிச்சமும், விழிக்க விரும்பாத அவளின் நித்திரையைக் கலைக்கவில்லை.

விடிந்து, வெகுநேரம் கழித்தே எழுந்தாள் அவள்.

## 22

அன்றும், அலுவலகத்திற்கு விடுப்பு எடுத்து விட்டு சுருண்டு படுத்திருந்தாள் தன்யா.

அன்று மாலையில் அவளைப் பார்க்க வந்த மஞ்சுவிடம், "இன்னிக்கு வியாஸ் ஆபிஸுக்கு வந்திருந்தாரா?" ஆவலுடன் கேட்டாள்.

"ம்... வந்திருந்தாருடி... ஆனா எப்பவும் போல உம்மணாம் மூஞ்சியா இருந்தாலே, அவர் என்ன மனநிலையில இருக்காருன்னே தெரிஞ்சிக்க முடியலை... நானும் ரெண்டு மூணு தடவை பேசிப் பாத்தேன். இயல்பா இருக்கற மாதிரிதான் தெரிஞ்சிது."

சட்டென்று உதடுகளில் விரவிய விரக்திப் புன்னகையுடன் "ஹூம்... சிலரை மாத்தவே முடியாது. ரொம்பக் கஷ்டம்! அதுவும் அவருக்குத் தான்கிற ஈகோ எப்பவுமே அதிகம்... விடுடி... பரவாயில்லை! நானும் முயற்சி செஞ்சி பாத்துட்டேன்... இன்னும் அவர் மாறலைன்னா, அப்புறம் இதான் என் காதலோட தலைவிதின்னு போக வேண்டியதுதான்!"

"அவ்வளவு சுலபத்துல அவரை உன்னால மறந்துட முடியுமா தன்யா?" மெதுவாகக் கேட்டாள் மஞ்சு.

"ஹூஹூம்... நான் மறந்துடுவேன்னு சொல்லலையே! தனிமைதான் என் காதலுக்குத் துணைன்னா, அதையும் நான் ஏத்துக்கிட்டுத்தானே ஆகணும் மஞ்சு! கொஞ்ச நாளானா, ஒரு வேளை இந்தக் காயமெல்லாம் மறந்து போகலாம்... ஆனா அப்பவும் புதுசா ஒரு துணையை தேர்ந்தெடுக்கற மனசு எனக்கு நிச்சயமா வராது! அது, முதல் காதலோ, பலமோ என்னவோ தெரியலை. என்னால வியானை மறக்க முடியாது!" உணர்ந்த குரலில் கூறினாள்.

சட்டென்று விழிகளில் கண்ணீர் குளம் கட்ட, வேதனையும் விரக்தியுமாய்த் தலையைக் கவிழ்த்து தன் உணர்வுகளை மறைத்துக் கொண்டாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு மெதுவாக நிமிர்ந்தாள்.



"இது நம்ம ரெண்டு பேருக்குள்ளே மட்டுமே இருக்கட்டும் மஞ்சு... வேற யாருக்கும் தெரிய வேணாம்" ஜன்னல் வழியே தெரிந்த தொலை தூர வானத்தைப் பார்த்தபடி கூறினாள்.

அவளுடைய கையை ஆதரவாய் அழுத்தினாள் மஞ்சு.

"நான் கூட உன் கிட்ட ஒரு விஷயம் சொல்லணும் தன்யா! இன்னிக்கு மதியம், விகாஸ் என்னைப் பாக்க ஆஃபிஸுக்கு வந்திருந்தாரு" என்றாள் மெதுவாக!

திடுக்கிட்டுத் திரும்பியவள், "ப்ரச்னை ஒண்ணும் இல்லையே?" கவலையுடன் கேட்டாள்.

"இல்லை தன்யா! அவரோட அப்பா... உண்மையை ஒத்துக்கிட்டாராம். அது தெரிஞ்சவுடனே, இவருக்கு பெரிய அதிர்ச்சியாயிடுச்சி போலருக்கு. எல்லாம் புரிஞ்சதாலே 'தனியாப் போயிடலாம், என்னை மன்னிச்சிடு'ன்னு கையைப் புடிச்சுக்கிட்டு அழுதாரு"

"முதல்லே உன்கிட்டதான் பேசலாம்னு வந்தாராம். அப்புறம்தான், என்னை வெளியே அழைச்சிட்டுப் போ எல்லாம் சொன்னாரு... நாம போட்டிருக்கிற கேஸ வாபஸ் வாங்கிடச் சொன்னாரு... அவரும் விவாகரத் கேஸை வாபஸ் வாங்கிடறேன்னாரு! எதுவா இருந்தாலு வெற்றிச் செல்வன் அங்கிளும், நீயும் உங்கப்பாவு சொன்னாதான் நான் எந்த முடிவையும் எடுப்பேன் உறுதியா சொல்லிட்டேன். அவரைப் பாத்தாலும் பாவ இருந்தது தன்யா!" கண்ணீருடன் கூறினாள்.

"ரொம்ப சந்தோஷம் மஞ்சு! ஆனா, நாம எதுக்கும் ஜ கிரதையா இருக்கணும். அப்பாகிட்டயும் வெற்றி அங்கி

* * *

கிட்டயும், முதல்லே அவரை வந்து பேசச் சொல்லுவோம்... அப்புறம் பார்க்கலாம்'' எனும் போதே ஹாலில் ஃபோன் ஒலித்தது.

சிறிது நேரம் கழித்து உள்ளே வந்தார் தேவகி.

''என்ன தன்யா! முகம் கூடக் கழுவாம இப்படி உக்காந்திருக்கே...? அப்பாவோட ஃப்ரெண்ட்ஸ் யாரோ வராங்களாம் இப்பதான் ஃபோன் வந்தது. நான் போய் ஏதாவது டிபன் ரெடி பண்றேன். மஞ்சு... நீயும் இருந்து சாப்பிட்டுப் போ'' என்றபடி அவசரமாக உள்ளே சென்றார்.

வெந்நீரில் முகம் கழுவி விட்டு வந்து நைட்டியை மாற்றி ஒரு சுரிதாரை அணிந்து கொண்டு அமர்ந்தவள், மஞ்சுவிடம் விசயத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தாள்.

வெளியில் சென்றிருந்த தயாகரும், வந்தவுடனே எப்போதும் போல் அவளுடைய அறைக்குள் வந்தார்.

''தன்யா! எப்படி இருக்கு? ஃபீவர் குறைஞ்சிருக்கா?'' என்றபடி அவள் நெற்றியில் கை வைத்துப் பார்த்தார்.

''பரவாயில்லைப்பா! இப்ப நார்மலா இருக்கு... உங்களுக்கு விஷயம் தெரியுமா? இன்னிக்கு மஞ்சுவைப் பாக்க விசயம் ஆபீஸ்க்கே வந்திருக்காரு'' என்றபடி எல்லா விஷயத்தையும் கூறினாள்.

''இன்னிக்கு என்ன... எல்லாமே குட் நியூஸா இருக்கு... என்னோட ஃப்ரெண்ட்டோட குடும்பம் வரேன்னிருக்காங்க... [illegible]னைக்கு வெற்றிச் செல்வனைப் போய் தேடியே பாத்து [illegible]வார்த்தையும் சொல்லி போகணும் கேட்போம்'' உற்சாகத் [illegible]டன் கூறினார்.

• • •



அப்போது, வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டு மூவரும் வெளியில் வந்தனர்.

முதலில் வெற்றிச் செல்வனும் வைஜெயந்தியும் வர, அவர்களைப் பின் தொடர்ந்து வியாஸும் விவேக்கும் வந்தனர்.

''வாங்க... வாங்க! உங்களைத் தான் எதிர்பார்த்துட்டிருந்தோம்'' என்றபடி தயாகர் அவர்களை வரவேற்றபோது, தன்யாவின் கால்கள் அசைவின்றி வேரோடிப் போயின.

அந்த நிமிடம், உணர்வுகள் உலுக்கப்பட்ட நிலையில், சந்தோஷ மலர்கள் அவள் விழியோரங்களில் அரும்பின.

நம்ப முடியாத கனவு ஒன்று நிஜமானதைப் போல், மனதிற்குள் ஒரு பிரமிப்பும் பரவசமும் கை கோர்க்க நிமிர்ந்தாள்.

வார்த்தைகளில் விருப்பமின்றி ஒரு விநோத ஒப்பந்தம் விழிகளில் கசிய, ஒற்றைப் புருவத்தை உயர்த்தி, குறுகுறுத்த விழிகளால் அவளைக் குறும்புடன் ஏறிட்டான் வியாஸ்.

அவன் பார்வை ஏவுகணையாய் தன்யாவைத் துளைக்க, அவள் விழிகள் அந்தக் கூர்மையைத் தாங்க முடியாமல் சட்டென்று மூடின.

'கண் சிமிட்டாத அவன் பார்வை என் மீது மோதும் போது கூச்சத்துடன் கண்களை மூடிக் கொள்கிறேன்... ஆனால் அவன் என்னையே பார்க்க வேண்டுமென்றும் விரும்புகிறேன்... இங்கு என்ன நடக்கிறது தோழி!' என்று தோழியிடம் புலம்பும் சங்க காலத் தலைவியின் நிலையிலிருந்தாள் அவள்.

வெற்றிச் செல்வன் புன்னகையுடன் தயாகரின் கைகளைப் பிடித்துக் கொண்டார்.

"தயாகர்! கல்யாணமானவுடனே குடும்பத்துல இருந்து தன் கணவனைப் பிரிக்கிற பல பெண்களை நான் பாத்திருக்கேன். ஆனா கல்யாணத்துக்கு முன்னாடியே என் மகனை எங்க கூட சேத்து வைத்த தேவதை, எங்க வீட்டுக்கு மருமகளா வரணும்னு கேக்க வந்திருக்கோம்! அனுப்பி வைப்பீங்களா?" சட்டென்று நெகிழ்ந்து போய்க் கேட்டார்.

தயாகரின் முகத்தில் மகிழ்ச்சிப் பரவசம்!

"அண்ணா! அப்பாவுக்குக் கூட இப்படி எல்லாம் பேசத் தெரியுது. ஆச்சர்யம்தான்" விவேக் வியப்புடன் கூறினான்.

வைஜெயந்தி, விழிகளில் துளிர்த்த மகிழ்ச்சித் துளிகளுடன், தன்யாவை அணைத்துக் கொண்டார்.

"தன்யா! அன்பாலே மட்டும்தான் எதையுமே சாதிக்க முடியும்கிறதை நிரூபிச்சிட்டே! நான் இதுக்கு எப்படி நன்றி சொல்லப் போறேன்... தெரியலைம்மா!" பனித்த விழிகளுடன் கூறினார்.

"ஆன்ட்டி... அப்படிச் சொல்லித் தப்பிச்சிக்கலாம்னு நினைக்காதீங்க... நன்றியெல்லாம் வேண்டாம்! எங்க பாணாக்கு இவளை 'பாஸ்' ஆக்கிடுங்க... அது போதும்!"

மஞ்சு குறும்புடன் கூற, அந்த நிமிடம் அந்த வீடு முழுவதும் மகிழ்ச்சிப் பூக்கள் மலர்ந்தன.

தயாகர் அவளருகில் வந்தார்.

"என்னம்மா! நீ என்ன சொல்றே... உன் விருப்பம்தான் எனக்கு முக்கியம்!" கனிவுடன் கேட்டார்.



"உங்க இஷ்டம்ப்பா!"

மெல்லிய குரலில் அவள் முணுமுணுத்தபோது, அருகில் வந்தான் சந்தீப்.

"கல்லுளி மங்கி! உங்க இஷ்டமாம்... இத்தனை நாள் எல்லாத்தையும் மறைச்சிட்டு... எனக்கு இந்த மாப்பிள்ளையப் பிடிக்கலைப்பா! விவேக் உனக்கும் இந்த அண்ணி வேண்டாம்... இல்லை?" குறும்புடன் கேட்டான் சந்தீப்.

"போடா!"

செல்லச் சிணுங்கலுடன் ஓரக் கண்ணால் தன்யா வியாஸை நோக்கியபோது, அவள் மனதிலிருந்த காதல் உணர்வுகளை எல்லாம், அந்த ஒற்றைப் பார்வை அற்புதமாய் அவனுக்கு வெளிப்படுத்துவாய்!

"நாங்க ரெண்டு பேரும் கொஞ்ச நேரம் வெளியே போயிட்டு வரப் போறோம். உங்களுக்கெல்லாம் எதுவும் அப்ஜெக்ஷன் இல்லையே?"

கம்பீரமான குரலில் கேட்டான் வியாஸ்.

"ஒரு நிமிஷம் மாப்பிள்ளை! ஸ்வீட் சாப்பிட்டுட்டு அப்புறமா அவளை எங்க வேணா அழைச்சிட்டுப் போங்க" என்றபடி உள்ளே சென்ற தேவகியை மஞ்சுவும் மகிழ்ச்சியுடன் பின் தொடர்ந்தாள்.

வியாஸின் விழிகள், நீங்க மனமின்றித் தன்யாவிடமே பதிந்திருந்தன.

கூர்மையாய் அவள் இதயத்தை ஊடுருவி, செல்லமாய் அவளின் உணர்வுகளை வருடின.

தனக்கு 'வாழ்க்கையைப் புரிய வைத்து, மனதின் இருளை கற்றி ஒளிரச் செய்து, திசை காட்டித் தெளிவாக்கியபோது இதயம் வலித்தாலும், உன் வார்த்தைகளின் அர்த்தத்தை இனி வரும் என் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டுவேன்' என்று, எஃகிரும்பாய் உறுதி பூண்டிருந்தது வியாஸின் நெஞ்சம்!

மணலில் பதிந்திருந்த அடிச்சுவடுகள், புனலும் ஓடக் கலைந்து விடுவதைப் போல், அவனுக்குள் பெரும் மாற்றத்தை விதைத்திருந்தாள் தன்யா.

நேற்று, தன் தாயின் முகத்தில் கண்ட மகிழ்ச்சிக்கு இணையாக வேறெதையும் எண்ணிக் கூடப் பார்க்க முடியாமல், தன்னுடைய கோபச் செயல்களே அவனை வதைப்பதாய்...!

ஆனால், வெகு நாளையத் தேடலின் இறுதித் தடங்கள், மனதில் மகிழ்ச்சியை அறிமுகப்படுத்தியிருக்க, வியாஸிற்குள் வெகுவாய் தன்யாவின் பதிவுகள்!

நீண்ட நாட்களுக்குப் பிறகு, மனம் நிம்மதியையும் அமைதியையும் தத்தெடுத்திருந்தது.

23



எல்லோரும் டிபன், காபி சாப்பிட்டுக் கொண்டே அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர்.



உள்ளே சென்று அழகிய லேவண்டர் நிறத்தில் ஜார்ஜெட் திரேப் அணிந்து தன்யா வெளியில் வந்தபோது, முதன் முதலாய் அவளைப் புடவையில் பார்த்த பிரமிப்பு வியாஸின் முகத்தில்!

இருவரும் காரில் ஏறிக் கிளம்பும்போது, எங்கே செல்கிறோமென்று தன்யாவும் கேட்கவில்லை.

வியாஸூம் மௌனமாகவே காரை ஓட்டினான்.

ஓரக்கண்ணால் அவளையே அடிக்கடி உரசிய அவன் பார்வை, பல ஏக்கங்களைச் சுமந்திருந்ததை அவள் அறியவில்லை.

மனதின் ஏக்கம் மிக, அவனுக்குள்ளும் ஆயிரம் எதிர்பார்ப்புகள்!

'அவளறியாமல் பின்புறமிருந்து மென்மையாக அவளை அணைக்க வேண்டும் போல்... அவள் மடியில் தலை சாய்த்து இதமாக உறங்க வேண்டும் போல்... யோசனையுடன் நெறியும் அவளின் புருவ மத்தியில் ஜனித்திருக்கும் சுருக்கத்தை, ஒற்றை விரலால் இதமாக நீவி விட வேண்டும் போல்...

'அவளுடைய நீண்ட விரல்களில் மருதாணி இட்டு விட்டு, அது சிவக்கின்ற அழகை ரசிக்க வேண்டும் போல்... ஆச்சர்யத்துடன் "ஓ...!" என்று குவியும் இதழ்களில் செல்லமாகக் கடித்து, அதன் இறுக்கம் தளர்விக்க வேண்டும் போல்!"

தன்னுள் புதைந்திருந்த அவனை, நினைவுகளாலேயே அணைத்தது மனது!

தன் நிலையை எண்ணி அவனுக்கே ஆச்சர்யமாக இருந்தது

◆ ◆ ◆

மருந்தீசுவரர் கோயில் வாசலில் சென்று அவன் காரை நிறுத்தியபோது, மனதில் பொங்கிய ஆச்சர்யத்துடன் மெல்ல இறங்கினாள் அவள்.

''வா'' என்று அழைத்தபடி அர்ச்சனைப் பொருட்களை வாங்கிய பிறகு அவளுடன் உள்ளே சென்று மருந்தீசுவரின் முன் நின்றபோது, 'இவள் என் உயிர்... என்னில் பாதி.. என் இறுதி மூச்சு வரை இவள் என்னுடன் துணையாய் வர வேண்டும்!' என்ற மௌனக் கோரிக்கை, அவன் இதயம் முழுவதும்!

'என் முதல் காதலை நான் உன்னிடம்தான் பகிர்ந்து கொண்டேன்... எங்களை இணைத்து வைத்ததற்குக் கோடி நன்றிகள்!' மனம் கசிந்துருக, நெகிழ்ந்து போய் நின்றிருந்தாள் தன்யா!

அர்ச்சனை செய்து முடித்த பிறகு, பிரகாரத்தைச் சுற்றி வந்து திரிபுரசுந்தரியையும் தரிசனம் செய்துவிட்டு மண்டபத்தில் அமர்ந்தபோது, மனம் நிறைந்திருந்தது.

அவள் மெதுவாக நிமிர்ந்து வியாஸை நோக்கியபோது, 'இன்று நீ ஒரு வார்த்தை கூறினால், என் காயங்கள் மறைந்து விடும்.. என் வலிகள் விலகி ஓடி விடும்' என்ற தவிப்பு அவன் விழிகளில்!

''தன்யா! எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை... வாழ்க்கையை... அதோட அருமையை, எனக்கு ஒரு தோழியா, ஒரு நூலகமாப் புரிய வைச்சவ நீ!

''நான் உன்னை முதன் முதலாப் பார்த்தப்பவே, என் பார்வைக்கு நீ ரொம்ப வித்தியாசமானவளாத்தான் அறிமுகமானே... அப்பவே எனக்குள்ளே ஒரு மெல்லிய சலனம்!



''அந்த நிமிஷமே என் மனசுக்குள்ளே நீ ஆழமாய் பதிஞ்சிட்டாலும், வந்த அன்னிக்கே நீ ரகுவோட இயல்பா பழகின விதம் எனக்குப் பிடிக்கலை...! என் கிட்டே மட்டும் ஒரு ஒதுக்கத்தோட இருந்த நீ, அவன் கிட்ட சிரிச்சிப் பேசினப்ப... ம்... நண்பனா தான் நீ நினைச்சிருக்கே! ஆனா நீ அவனை விரும்பறதா நான் நினைச்சேன்.

''காதலிக்கறது ஒண்ணும் தப்பில்லையேன்னு எனக்கு நானே கேள்வி எழுப்பினபோது, வேலைக்கு வந்த முதல் வாரமே ஒரு பெண்ணா எப்படி இது மாதிரி ஒரு ஆணை வளைச்சிப் போட முடியுதுன்னு, அருவெறுப்பா இருந்தது.

''ஏனோ, அதை என்னால தாங்கிக்கவே முடியலை. ஆனா அது பொறாமைன்னு, லேட்டாதான் எனக்குப் புரிஞ்சது.

''அதிகமான 'பொலைவ்நெஸ்'லாலதான் நீ ரகுவோடப் பழகினது... மஞ்சுவோட ஹஸ்பெண்டோடப் பேசிட்டிருந்தது, எல்லாமே என்னை ஆழமா பாதிச்சி ரொம்பக் கோபப்பட வச்சதுங்கறதை, மஞ்சு என் கிட்ட பேசினப்புறம் நான் புரிஞ்சிக்கிட்டேன்...

''அவங்கதான் சொன்னாங்க... இந்தக் கோவில்னா சின்ன வயசிலிருந்தே உனக்கு ரொம்பப் பிடிக்கும்னு!

''நேத்து நீ பேசிட்டுப் போனப்புறம் என் மனசுக்குள்ளே பெரிய மாற்றம் வர ஆரம்பிச்சது. உடனே கிளம்பி வீட்டுக்குப் போன நான், ரொம்ப நேரம் குற்ற உணர்ச்சியில் தவிச்சிப் போயிட்டேன்...''

ஆழ்ந்த குரலில் கூறியவனின் விழிகள், பாச நிகழ்வுகளின் பாதிப்பில் நெகிழ்ந்திருந்தன.

"நீ பேசினது எல்லாம் எவ்வளவு நிஜம்! மூணு வருஷமா, முட்டாள் தனமா நான் அம்மா அப்பாவைப் புரிஞ்சிக்காம எப்படி நோகடிச்சிருந்திருக்கேன்ற உண்மை முகத்திலே அறைஞ்சது!

"என்னைப் பெத்தவங்க இருந்திருந்தாக்கூட என்னை இப்படி ஒரு உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்திருப்பாங்களான்னு யோசிக்க ஆரம்பிச்சேன்!

"இப்ப விவேக் பாதிக்கப்பட்டதுக்கு, நானும் ஒரு வேளை காரணமோன்னு ரொம்ப உறுத்த ஆரம்பிச்சது.

"ரொம்ப நேரம் யோசிச்சிட்டு, மதியம் கிளம்பி நேரா நம்ம வீட்டுக்குப் போயிட்டேன்...

"என்னைப் பாத்தவுடனே அம்மாவுக்கு தெய்வத்தைப் பாத்த மாதிரி ஒரு பரவசம்! அப்பதான் எனக்கு உறைச்சது... நான் இத்தனை நாளா எவ்வளவு மிஸ் பண்ணியிருக்கேன்னு!

"அம்மாவோட தவிப்பும் வேதனையும் என்னை ஆழமாத் தாக்கிடுச்ச...

"உறவுகள், அன்பு, காதல், இதோட வேல்யூஸ் என்னன்னு கோபமா ஒரு பாடம் நடத்தி எனக்குப் புரிய வச்சதுக்கு ரொம்பத் தேங்க்ஸ் தன்யா!"

அவன் விழிகளில் ஆயிரம் உணர்ச்சிகள்!

அந்தக் கற்பாறையிலும் ஈரம் கசிவது தன்யாவிற்குப் புரிந்தது.

அவனுடைய வார்த்தைகள் சிறகுகளாய் வருடிவிட, என்ன பேசுவதென்றே தெரியாமல் மௌனமாக அமர்ந்திருந்தாள் அவள்.



இமைக்க மனமின்றி நேசத்துடன் அவளையே நோக்கிக் கொண்டிருந்த வியாஸிற்கோ, தன்யாவைப் பற்றி எண்ணும் போதே... தன் உடம்பில் உறைந்த உயிராய்... அந்த உயிர் வரை நீண்டிய உறவாய்!

"என் மேல இன்னும் கோபமா? என் கூடப் பேச மாட்டியா! ஐ லவ் யூ தன்யா!"

ஆழ்ந்த குரலில் அவன் கூற, அந்தச் சொற்கள் அவளைச் சிவக்க வைத்து மேலும் அழகாக்கின.

வெட்கத்துடன் நிமிர்ந்தவள், "நானும் உங்களை விரும்பறேன் வியாஸ்... உங்க மனசு நோகறாப்பல நான் எதுவும் பேசியிருந்தா... சாரி!" சிறு முறுவலுடன் கூறியபோது, அவள் விழிகள் மலர்ந்த விதம் வெகு அழகாய்!

"முதன் முதலா என்னைப் பார்த்து நீ வெக்கப்படறதை இன்னிக்குதான் பாக்கறேன்... நீ பாக்க மட்டுமில்லை... மனசாலயும் ரொம்ப அழகு தன்யா... எனக்குள்ளே இந்தக் கடவுள் பரிசளிச்ச, ஒரு இனிமையான தேவதை நீ...

"இப்படியெல்லாம் நானா பேசறேன்னு எனக்கு ஆச்சர்யமா இருக்கு! இனிமே நமக்குள்ளே இந்த சாரி... தேங்க்ஸ் எல்லாம் வேண்டாமே..." உணர்ச்சிப் பெருக்குடன் கூறியபடி அவளுடைய கையைப் பற்றி மென்மையாக அழுத்தினான் வியாஸ்.

அந்தத் தொடுகை, அவளுக்குள் சிலிர்ப்பாய் பரவ "கிளம்பலாமா?" அவள் மெதுவாய்க் கேட்டாள்.

"அவ்வளவுதானா? ஓ.. இது கோவில் அப்படிங்கிறதே ஒரு நிமிஷம் மறந்து போச்சு! எனக்குத் தேவையானதைக் காரில் வந்து தருவே இல்லை..?"

வியான் அவளின் காதோரம் கிசுகிசுப்பாய்க் கேட்டான்.

"ச்சீ.. போங்க" என்றபடி அவள் எழுந்து செல்ல, கண்களில் குறும்புடன் பின் தொடர்ந்த வியானிற்கோ அந்நிமிடம், கவிஞர் உமர்கய்யாமின் வரிகள் நிஜமென்று புரிந்தன.

"அந்த மரக்கிளையின் கீழ் - ஒரு கவிதைப் புத்தகம், மது இருக்கும் ஜாடி... ஒரு ரொட்டித் துண்டு... இதோடு என் அருகில்... ஓ.. பாலை நிலமே இப்போது சொர்க்கம்!"

எவ்வளவு சத்தியமான வரிகள்!

தொடர்ந்து ஓம்காரமாய் ஒலிக்க ஆரம்பித்த கோவில் மணி, மனதில் சிலிர்ப்பைத் தருவதாய்...!

"இனி வரும் காலங்களில், உன் உயிர் தொட்ட உறவாய் இனிய சகியாய்... நீ பிறந்தவுடனே தொலைத்த உன் அன்னையாய்... இவள் உன்னுடன் துணை வருவாள்.. இனிமை தருவாள்" என்று அந்த ஓசை கூறுவதைப் போல்...! அவர்களை ஆசீர்வதிப்பது போல்..!

முதன் முதலாக, வியானின் விழிகள் பனித்தன.

கோபுரத்து விளக்குகள் வெளிச்சப் பொட்டாய் ஒளிர்ந்து கொண்டிருக்க, அருகிலிருந்த தெப்பக் குளத்தில் நிறைந்திருந்த மலர்கள், பனித் துளியில் நனைந்தபடி புன்னகைத்துக் கொண்டிருந்தன.